1332

R
BATT
0051

# விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்

(மூலமும் உரைநடையும்)

ஆக்கியோன்:
**ஈழத்துப் பூராடனர்**

புதுக்கிய 3ம் பதிப்பு
1991

கனடா - தொரன்ரோ
தமிழ் முருகன் கோவில் சபை அறங்காவல் குழுவினர்
20.07.1991ந் தினத்தன்று எடுத்த
முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின்
நூற்றாண்டு விழாவிற்கு ஆதரவளிக்கும் முகமாக
தொரன்ரோ றிப்ளக்ஸ் அச்சகத்தார் வெளியிட்ட நினைவு மலர்.

**REFLEX PRINTING**
1108 BAY STREET
TORONTO, ONT. M5S 2W
CANADA

Batticaloa Public Library
☎ 065-2222484
RT003477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

894.811
802
1332
REF.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்

(மூலமும் உரைநடையும்)

ஆக்கியோன் ;
ஈழத்துப் பூராடனூர்

புதுக்கிய மூன்றும் பதிப்பு
*1991.*

PUBLIC LIBRARY
14-9-1991
BATTICALOA

பதிப்பாசிரியர்;
நிழலாசிரியர் எட்வேட் சந்திரா

கனடா
தொரன்ரோ தமிழ் முருகன் கோவில் சபை
அறங்காவல் குழுவினர்
20. 07. 1991ங் தினத்தன்று எடுத்த
முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நூற்றுண்டு
விழாவிற்கு ஆதரவளிக்கும் முகமாக

தொரன்ரோ றிப்ளக்ஸ் அச்சகத்தார் வெளியிட்ட நினைவு மலர்

நிழல் வெளியீடு. கனடா

ஜீவா பதிப்பகம்

REFLEX PRINTING
1108. BAY STREET
TORONTO M5S 2W9
ONT CANADA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1332

பதிப்புத் தகவல்கள்.

**விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்**
*மூன்றும் பதிப்பு; 1991*

*ஆக்கியோன்; மூலம் - உரைநடை*
*இலக்கியமணி தமிழ்நெறிப்பாவலர்*
**ஈழத்துப்பூராடனார் க.தா.செல்வராசகோபால்**
***(1928)***

*1. வெளியீடு. விபுலானந்தரின் நூற்றுண்டு நினைவு மலராக நிழல் கனடா 1991 ஆடித் திங்கள்*

*2. வெளியிடுபவர்கள்; ஜீவா பதிப்பகம் தொரன்ரோ கனடா*

*3. பக்கங்கள்; 8 + 100*

*4. விலை; $ 10.00*

*5. பதிப்பாசிரியர்; நிழற் சந்திரா*

*6. அளவு; 8' ஞ் 5'*

*7. பகுதி; பிரபந்த இலக்கியம்*

*8. தொகுதி ; பிள்ளைத் தமிழ்*

*9. அச்சமைப்பு; மின்கணனித் தமிழ் எழுத்து*

*அச்சிட்டது. றிப்ளக்ஸ் அச்சகம் தொரன்ரோ கனடா*

***வியாபார விசாரணைகள்;***

REFLEX PRINTING
1108. BAY STREET
TORONTO M5S 2W9
ONT CANADA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கிழக்கீழம் மட்டக்களப்பு காரைதீவில்
அவதரித்த

முத்தமிழ் வித்தகன்

## சுவாமி விபுலானந்த அடிகளார்

*1892 - 1947*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதிப்பாசிரியர் உரை;

முத்தமிழ் ஞானி விபுலானந்தர் அடிகளார் அவதரித்த இலங்கை மட்டக்களப்பு மண்ணே எனது தாயகமும் என்று எண்ணுந்தோறும் பெருமிதமடைகிறேன்.

அடிகளாரின் அணுவளவு ஆற்றல்தானும் எனக்கில்லா விட்டாலும் அவரின் புகழின் சிறு துகழாவது என்னிற் படுகின்றது என்ற எண்ணம் எனக்குண்டு

அவரது பெருமை உலகமெலாம் பேசப்படுகின்றது. அவரது தமிழ்ப்பணி தமிழுலகத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறது. அவரது யாழ்நூல் இருபதாம் நூற்றுண்டின் உயர்ந்த ஒரு தமிழ்ப் படைப்பென யாவராலும் மதிக்கப் படுகின்றது

அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றையும் பல கட்டுரைகளையும் தொகுத்துப் பல திரட்டாகத் தந்துள்ள குறுமண்வெளி அருட்செல்வநாயகம், விபுலானந்த படிவ மலராசிரியர் சற்குணனர். விபுலானந்தமணி மலரை வெளியிட்ட புலோலியூர் கணபதிப்பிள்ளைஎன்பவர்களது பணிகளால் இன்று நாம் அவரையிட்டு நன்கு அறியக் கூடியதாக இருக்கின்றது.

இவையெலாம் தமிழ் வசன நடையிலுள்ளவையே. செய்யுள் நடையில் விபுலானந்தரின் வரலாற்றை எடுத்துக் கூறும் முதல் நூலாக விபுலானந்தர் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தம் 1983ம் ஆண்டில் வெளிவந்தது அப்போது அது திரு வி.க முதலியார் நூற்றுண்டு நினைவு மலராக மலர்நதது. அதன்பின்னர் 1986ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆண்டில் சற்றுத் திருத்தத்துடன் ஈழத்துப் பூராடனார் நூற்றிரட்டு எனும் பதிப்பாக வெளிவந்தது. இப்போது அடிகளாரின் மூற்றாண்டு நினைவாக நன்கு புதுக்கிய விளக்கப் பதிப்பாக வெளிவருகின்றது.

நாங்கள் இலங்கையில் இவரது சமகாலத்தவரான வித்துவான் அ.சரவணமுத்தனின் ஸ்ரீமாமாங்க விநாயகர் பதிகமெனும் நூலிற்கு உரைகண்டு விபுலானந்தரின் நூற்றாண்டு நினைவாக வெளியிட்டுள்ளதோடு எங்களின் மாடி வீட்டையும் எங்கள் தந்தையாரின் கிடைத்தற்கரிய பண்டைய தமிழ் நூல்கள் பல்லாயிரங் கொண்ட இல்ல நூலகத்தையும் அடிகளாரின் நினைவு ஆய்வு நூலகமாக அன்பளிப்புச் செய்துள்ளோம்.

அத்துடன் கனடா தொரன்ரோ தமிழ் முருகன் கோவில் சபை அறங்காவல் குழு 20.7.1991ந் தினத்தன்று நடாத்தும் அடிகளாரின் நூற்றாண்டு நினைவு விழாவினில் எங்கள் பங்களிப்பாக இச்சிறு நூலையும் வெளியிடுகிறோம்.

எங்கடன் தமிழ்ப்பணி செய்து கிடப்பதே

நன்றி
இவ்வண்ணம்
பதிப்பாசிரியர்
**எட்வேட் இதயச் சந்திரா**
நிழலாசிரியர்
கனடா 19.6.1991.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# நூலாசிரியர் நுவல்கின்றார்.

விபுலானந்த அடிகளாரை நேரிற் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லையாயினும், அவரது நேரடி வாரிசான புலவர் மணி. ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றதும், அடிகளாரின் சகோதரியின் புதல்வன் திரு. பூ. சுந்தரம்பிள்ளையுடன் உடன்சாலை மாணாக்கனாக நெருங்கிய நட்புக் கொண்டிருந்ததும், இவர்கள் மூலம் அவரது குணவியல்புகளைக் கேள்விப்பட்டு மனதிலே அவரது திருவுருவைக் கண்டதும் எனக்குப் பெருமையான காரியங்களாகவே தென்படுகின்றன.

இதுமட்டுமல்ல விபுலானந்த அடிகளாரின் வரலாற்றையும் அங்கொன்று இங்கொன்றாகச் சிதறிக் கிடந்த கட்டுரைகள் கவி தைகள் என்பவற்றைத் தொகுத்து தமிழகத்திலே பல பிரசித்தி பெற்ற பதிப்பகங்களிலே பல நூல்களாக வெளியிட்ட குறுமண் வெளி அருட் செல்வநாயகம் அவர்கள் எனது உறவினன். உடன் ஆசிரியன். அவரது இந்தப் பணிக்கு என்னால் இயன்ற அளவு அவ்வப்போது அடிகளாரைப் பற்றிய தகவல்களையும் கட்டுரைகளையும் திரட்டிக் கொடுத்துள்ளேன்.

இதனைவிட வைகாசி என அழைக்கப்படும் திரு வை.க.சிவப் பிரகாசம் என்பவர் எழுதிய விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள் எனும் நூலை பதிப்பித்து வெளியிட்டுள்ளேன்.

அண்மையில் அடிகளாரின் 'மதங்க சூளாமணியை' ஆய்வு செய்து மறுபதிப்புச் செய்தும் அதன் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு 800 வெண்பாக்கள் அடங்கிய கூத்தர் வெண்பா எனும் நாடகத் தமிழ் இலக்கண நூலை இயற்றி வெளியிட்டுமுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதைவிட மதங்க சூளாமணியின் இரண்டாவது பாகமான வடமொழி நாடகவியலின் தமிழாக்கத்தின் உரைநடையைச் விருத் தங்களாகச் செய்து கூத்தர் விருத்தம் எனும் நூலாகவும் வெளியிட் டுள்ளேன்.

ஆரம்பத்தில் விபுலானந்தன் கோவை என்ற ஒரு பிரபந்தத் தையே செய்ய எண்ணங்கொண்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டுச் சில செய்யுட்களைச் செய்து முடித்தேன்.

அதனைப் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடங் காட்டி ஆலோசனை பெறுவதற்கு விழைந்தபோது. அதனைக் கண்ணுற்ற அவர் அடிக ளாரை அகப்பொருட் துறையோடு சம்பந்தப் படுத்துவதிலும் பார்க்க பிள்ளைத் தமிழிலக்கியத்திற் பாடலாமே என்று நல்லுரை வழங்கினர்.

இதன்படி இந்த நூலைச் செய்தேன். அதேவேளை விபுலானந்தர் கோவையை புலவர்மணிக் கோவையாக மாற்றிப் படைத்தேன்.

புலவர்மணி அவர்கள் அமரரானபடியால் மேற்கொண்டு அவரது ஆலோசனைகளைப் பெறமுடியாது போயிற்று. எனினும் அடிகளாரின் மாணுக்கன் வித்துவான். வீ.சீ. கந்தையாப் பண்டிதர் அவர்களின் பிரயோசனமான ஆலோசனைகளைப் பெறமுடிந்தது.

அமரர் சற்குணமும் மகாவித்துவான் நடராசனும் ஆறுமுக நாவலர் வாழ்க்கைக் குறிப்பு எனும் ஒரு நூலை ஆக்கினர். அதனை நான் பதிப்பித்தேன். அந்த நூலின் சாயலில் விபுலானந்த அடிக ளாரின் வரலாற்றுக் குறிப்புகளை ஒரு நூலாக வெளியிட வேண்டு மென்று ஆங்காங்கே அகப்பட்ட குறிப்புகளைத் திரட்டி வந்தேன். அக்குறிப்புகள் விபுலானந்தர் பிள்ளைத் தமிழை இயற்றுவதற்கு மிகவும் உதவின.

பெரும்பாலும் ஒவ்வொரு செய்யுட்களிலும் ;

1. அடிகளாரின் வரலாறு.
2. அடிகளாரின் தாயக வளம்.
3. அவரின் போதனைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

இதற்கான விபரங்களை திரட்டுவதற்கு; அருட்செல்வநாயகம் அவர்களின் அடிகளாரைப் பற்றிய பல நூல்கள், அமரர் சற்குணம் தயாரித்த அடிகளார் படிவமலர். புலோலியூர் கணபதிப்பிள்ளை அவர்களின் விபுலானந்த மணிமலர், மற்றும் பல பெரியார்கள் தந்துதவிய குறிப்புகள். அடிகளாரின் மருகன் அமரர் பூ. சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிள்ளை அவர்கள் நினைவுபடுத்திக் கூறிய பல உண்மைச் சம்பவங்கள் என்பன உதவியாக இருந்தன. இவர்களில் எவருமே இன்றில்லை என்றாலும் அன்னார் தம் தமிழ்ப்பணி மறக்கமுடியாததொன்று.

இப்போது முந்திய பதிப்புகளிலும் முற்றும் வேறுபட்ட திருத்தங்களுடன் விபுலானந்தர் பிள்ளைத் தமிழ் வெளிவருகின்றது. முந்திய செய்யுட்களில் விடப்பட்ட சம்பந்தப்பட்ட ஆண்டுகள் , மிக முக்கிய வரலாறுகள் நிகழ்வுகள், என்பன இம்முறை எடுத்தாளப் பட்டுள்ளன.

நன்றி.

இப்படிக்கு,
ஈழத்துப்பூராடனார்
தொரன்ரோ கனடா.
*15.6.1991.*

கனடா தொரன்றோ
**றிப்ளக்ஸ் அச்சகத்தாரின்**
நன்கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE PUBLIC LIBRARY
14-9-1991

# கனடா ரொரன்ரோ
# தமிழ் முருகன் கோவில் சபை
# அறங்காவற்குழு
## விபுலானந்தர் நூற்றாண்டு நினைவு விழாவினர்
# அளித்த முகவுரை

'என்னைப் படைத்தனன் இறைவன் தன்னைத் தமிழினுற் பாட' என்கிறுர் ஒரு பழந் தமிழ்ப் பாவலர். பிறப்பெடுத்த உயிர்களெல்லாம் அன்னை மொழியிற் பேசிப்பயின்று வாழ்வதே உலக வழக்கு. ஆனல் அதுவல்ல வாழ்க்கை. அவனருளால் அவன்தாள் வணங்கி நின்று அரும்பணியாற்றுவதே அதியுயர்ந்த வாழ்க்கை முறையாகும்.

அந்த முறையில் தமிழனகப் பிறந்து, தமிழ்த் தொண்டாற்றி இதனையே இறைத் தொண்டெனக் கொள்பவர் ஒரு சிலரே. இவ்வரிசையில் இடம்பெற்று நிற்பவர்தான் ஈழத்தின் மட்டுநகர் திரு.க.தா.செல்வராசகோபால் என்னும் ஈழத்துப்பூராடனர்.

இவர் "என்கடன் வெறும் பணி செய்து கிடப்பது மட்டுமன்று, தாய் நாட்டின் இலக்கியச் செல்வங்கள் மங்கி மறைந்து விடாதிருக்க அவற்றினைப் புதுப்பித்துக் கட்டிக் காப்பதே தன் தலையாய கடனென வாழ்பவர்.

முயற்சியை மூலதனமாக்கி அதன்மூலம் கிடைத்த சிறப்பையே ஊதியமாகக் கருதி வாழ்ந்த பெருமை போற்றுதற்குரியதே. தமிழ் இலக்கணம் முதல் முத்தமிழ்க் கலைகள் யாவற்றிலும் சிறந்த பல தமிழ்ப் பிரசுரங்களை அச்சிட்ட பட்டியலை நோக்குங்கால் அவரது இலக்கியப் படைப்பாற்றல் தெள்ளெனத் தெரிகின்றது.

உரை நடை ஆசிரியராக, பதிப்பாளராக, பல மரபுச் செய்யுள் நூல்களின் படைப்பாளியாக, எழுத்தாளராக, நூல் மதிப் பாளராக, பாவாணராக ஈழத்தின் இலக்கிய வானிலே ஒரு துருவ நட்சேத்திரமாக ஒளிவிட்டுப் பிரகாசித்தவரே ஈழத்துப்பூராடனர்.

அதுவுங் கடல்கடந்த கனடா போன்ற மேனுடுகளில் குடி புகுந்து தமிழ்ப் பணியே தம்பணியென வாழும் இவரைப்போன்றவர் களைக் காண்பதே அரிதான காரியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலகிலேயே முதன்முதலில் மின்கணனி தமிழ்அச்சமைப்புத் துறையில் ஈடுபட்டு தமிழ் அச்சகத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை இவரையும் இவரது புதல்வர்களையுமே சாரும். இத்தகைய பணியைப் பாராட்டி இவருக்கு சேக்கம் தாபனம் விருதளித்தது நினைவு கூரற்குரியது.

இன்னும் இவரது படைப்புகள் யாவும் உலகின் பிரபல நூலகங்களிலும் தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் கிடைத்தற்கரிய செல்வங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன.

'கற்றாரைக் கற்றரே காமுறுவர்' என்பது கற்றறிந்தாரின் கூற்று. இக்கூற்றின்படி சங்க காலந்தொட்டு இன்றுவரை ஒருவர் இயற்றிய நூலுக்கு இன்னொருவர் உரை காண்பது என்பது வாழையடி வாழையான பண்பு. இம்முறையாற்தான் பல்லாயிரக் கணக்கான பண்டைய தமிழ் நூல்களின் உயர்வை இன்றும் நாம் அறிந்து நுகரக்கூடியதாக இருக்கின்றது. அல்லாதுபோயின் அரிய தமிழ்ச் செல்வங்களும் அவற்றின் ஆழ்ந்த கருத்துக்களும் மங்கி மறைந்தே போயிருக்கும்.

இதனைக் கட்டிக் காத்த தமிழ்ப் புதல்வர்களில் ஈழத்துப் பூராடனாரும் ஒருவராக பணிசெய்து நிற்பது எமக்குப் பெருமையே. பிறந்த நாட்டிலும் புகுந்த நாட்டிலும் அச்சகம் அமைத்து புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தி பெரும்பணியாற்றுவது மட்டுமல்ல இப்பணிக்குத் தனது மக்களையும் அர்ப்பணித்து மகிழ்கிறார். இவ்வாறு அரிதாகப் பெற்ற மானுடப் பிறவியின் அத்தனை அருமை பெருமைகளையும் அடைந்து தமிழ் மொழி வளர்ச்சியில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்வதின்மூலம் ஈழ அன்னையின் மணிமுடியில் ஒரு ஒளிக் கதிராகத் திகழ்கின்றார் என்பதைக் கண்டு பெருமிதங் கொள்கிறோம்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் போன்றவர்களைத் தந்த மட்டுநகரின் மண்வாசனை இவரது இலக்கிய வாழ்வில் ஊறித் திளைத்திருப்பதை இவரது எண்பதிற்கு மேற்பட்ட நூல்களும் உரையெழுதிப் பதிப்பித்த பல நூல்களுஞ் சான்று பகர்கின்றன. எச்சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் சம்பந்தமோ காழ்ப்போ இருக்கக்கூடாது நல்ல தமிழ்ச் செல்வங்கள் எச்சமயத்தவராற் செய்யப்பட்டாலும் அவற்றை வரவேற்று நயக்க வேண்டும் என்பதே இவரது சீரிய கொள்கையாகும்.

"விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்" எனும் இந்த வரலாற்றுப் பிரபந்தத்தின் மூலமாக அடிகளாரின் வாழ்க்கையை வையகம்

. . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறியத்தக்கதாக ஈழத்துப்பூராடனார் படைத்துள்ளார். அடிகளாரின் தன்னிகரற்ற முத்தமிழ்ப்பற்று, ஆழ்ந்த ஆன்மீக ஞானம், அவரது பணிகள் என்பவற்றையும் பிள்ளைப் பராயந் தொட்டு மண்ணைவிட்டு மறையும்வரையும் உள்ள வாழ்க்கை வரலாற்றையும் அழகிய தமிழில் செய்யுள் வடிவிற் தந்து அதற்கு இனியதோர் உரைநடையும் வகுத்துத் தந்துள்ளார். இதனால் அடிகளாரைப் பற்றி சாதாரண தமிழறிவுள்ளவர்களுங்கூட இலகுவில் அறிந்து சுவைக்க முடிகிறது. படிப்பவர்களின் உள்ளத்தில் அக்கருத்துகள் பசுமரத்தாணிபோற் பதிந்தும் விடுகின்றது.

மதிப்பற்ற நாணயத்திற்கு மதிப்பைக் கூட்டுவதுபோல தமிழ் அறிவிற் குறைந்த நான் அடிகளாருக்குப் பிள்ளைத் தமிழ் பாடி சிறுதேர் உருட்ட வந்தேன் என நூலின் இறுதியில் எளிமையுடன் கூறியிருப்பதே அவரது திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

இவர் தமிழ்மீது கொண்ட தணியாத தாகத்தால் அடிக ளாரின் நூற்றாண்டு விழாவையொட்டி விபுலானந்தர் பிள்ளைத் தமிழை மூன்றாவது பதிப்பாக வெளியிட்டுள்ளார். அதுமட்டுமல்ல மட்டுக் களப்பில் உள்ள தனது மாடி வீட்டையும் பல்லாயிரக் கணக்கான பண்டைத் தமிழ் நூல்கள் அடங்கிய தமது இல்ல நூலகத்தையும் விபுலானந்த நூற்றாண்டு நினைவு ஆய்வு நூலகமாக அன்பளிப்புச் செய்துள்ளார். இது ஒரு பெரிய மகத்தான மனிதநேயப் பணியாகும்.


இவற்றையெல்லாம் நோக்குங்கால் ஈழத்துப்பூராடனாரின் புகழைச் சிறப்பிக்க மேலும் சான்றுகள் தேவையோ என்பதே வினு வாகின்றது. கனடாவில் அடிகளாருக்கு விழாவெடுக்கும் நேரத்தில் அதற்கு உற்சாகமூட்டும் வகையில் நூல்வெளியிட்டும் விழாமலர் அச்சிட்டுத் தந்தும் பல்வகையில் இவரும் இவரது புதல்வர்களும் அரிய உதவி செய்துள்ளனர்.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ்த் தொண்டாற்றிய ஈழத்துப் பூராடனார் நோயற்று சகல நலன்களுடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம். எந்தத் தமிழுக்காக அடிகளார் அவ தரித்தாரோ அந்தத் தமிழிற்காகத் தொண்டாற்றி புகழ்மணக்க ஈழத்துப் பூராடனார் வாழ தமிழ் முருகன் கோவிற் சபையினர் நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

**தமிழ் முருகன் கோவில் சபை அறங்காவற் குழு**

கனடா தொரன்ரோ 18.07.1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் நன்றியுரை

இறைப்பற்றும் தமிழ்ப்பற்றுங் கொண்ட முத்தமிழ் ஞானி யாழ்நூல் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் நூற்றூண்டு நினைவை உலகமெங்குங் கொண்டாடும் வேளையில் கனடா தேசத்தில் வாழும் தமிழ் மக்களும் விழா எடுக்கின்றனர் எனும் போது உள்ளந் துள்ளிக் குதிக்கின்றது.

இவ்வேளையில் அடிகளார் பிறந்த கிழக்கிலங்கை மட்டக் களப்பு மண்ணிற் பிறந்து இங்கு வந்து குடியேறி முதல் முதலிற் தமிழில் அச்சடிக்கக் கூடிய மின்கணனி வசதியுடன் 1985ம் ஆண்டில் இருந்து ஒரு அச்சகத்தை நடாத்தி வரும் நாஙகளும் ஏதாவது ஒரு சிறு பணியைச் செயயவேண்டுமென்று விழைந்தோம். அதன் பலனாக மூன்று விபுலானந்தரின் நினைவுப் பணிகளைச் செய்ய விரும்பினோம்.

இலங்கையில் விபுலானந்த அடிகளாரின் நண்பன் வித்துவான் சரவண முத்தன் அவர்களின் மாமாங்கம் விநாயகர் பதிகத்தை உரையெழுதிப் பதிப்பித்தோம் அத்துடன் எங்கள் தந்தையார் ஈழத்துப்பூராடனாரின் பல்லாயிரக்கணக்கான பண்டைய தமிழ் நூல்கள் கொண்ட இல்ல நூலகத்தை எஙங்களின் பரந்த இல்லத்தில் விவேகானந்தரின் நூற்றூண்டு நினைவாக அமைத்து உயர்கல்வி கற்கும் மாணவர்களும் தமிழில் ஆய்வு செய்யும் மாணாக்கர்களும் உபயோகப் படுத்தும் நோக்குடன் ஒரு ஆய்வு நூலகமாக ஆக்கியுள்ளோம். இதற்கான முயற்சிகளையும் நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்று நடாத்தும் அன்புமணி. இரா. நாகலிங்கம் ( உதவி அரசாங்க அதிபர்) அவர்கட்கு எங்கள் நன்றி.

கனடாவில் தொரன்ரோ இந்து முருகன் தமிழ்ச் சபையார் நடாத்தும் விபுலானந்தர் நூற்றூண்டு விழாவின் நினைவு மலராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விபுலானந்தர் பிள்ளைத் தமிழை வெளியிடுகின்றோம். இதன் விற்ப னையால வரும் ஊதியம் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவிற்கான நிதியமாகப் பயன்படுத்தப்படும்.

இத்தகைய பணிகளில் எங்களைப் பிணித்துக் கொள்வதால் எங்கள் பிறந்த மண்ணிற்குரிய கடன்களை நிறைவேற்றுவதாகவே கொள்கின்றோம்

மேற்கத்திய நாடுகளில் முதன்முதலாகக் கனடாவில் மின் கணனித் தமிழில் அச்சு வேலைகளைச் செய்யத் தொடங்கிய நாஙகள இதுவரை அரிய தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளோம். அவற்றுள் தமிழ்க் கலைக் களஞ்சியப் பொலிவுடன் திகழும் தமிழழகி எனும் ஒன்பது தொகுதிகள் கொண்ட காவியத்தின் முதல் நான்கு தொகுதகளும். ஆதிக் கிரேக்க நூல்களான ஓடிஸ்ஸி. இலியட் மற்றும் நாற்பத்தேழு நாடகங்கள் என்பனவுங் கொண்ட 3000 பக்கங்களுக்கு மேற்பட்ட பதினறு தொகுதிகளும் அடங்கும். இவற் றைவிட கடல்கடந்த தமிழ் மாணவர்களுக்கான் பேச்சுத் தமிழ் எனும் நூலும் எங்களின் தமிழ்ப் பணியாகும்.

இதுபோன்ற பல பணிகளை எங்கள் தாபனம் எதிர்காலத்திற் செய்யும் நோக்குடன் இயங்குகின்றது என்பதையும் தமிழ் அச்சு வேலைகளைப் பொறுத்த அளவில் நாங்கள் வருவாயை அல்ல தமிழ்ப்பணியின் வளர்ச்சியாகவே கொண்டு செயற்படுகின்றோம் என்பதையும் அதிக தயவுடன் கூறிக்கொள்கின்றோம்.

இப்படிக்கு
**றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் சார்பில்**

**செ. ஜோர்ஜ் இதயராஜ்**
பிரதம நிர்வாகி
தொரன்ரோ கனடா. 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இந்த நூலின் உரைநடை
ஆசிரியர்
இலக்கியமணி -
தமிழ்நெறிப்பாவலர்
ஈழத்துப்பூராடனார்
க.தா.செல்வராசகோபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உரைநடை செய்தவரின் ஏனைய இலக்கியப் படைப்புகள்

உலகிலேயே தமிழ் மொழியில் அச்சிடுதலிலும் 'அச்சமைப்பிலும் நூல் வெளியீட்டிலும் ஒரு புரட்சியாக மறுமலர்ச்சியாக புதுமையாக முதன் முதலாக மின்கணனித் தமிழ் அச்சமைப்புத் துறையில் கால் எடுத்து வைத்து கால்பதித்து நிற்கும் கனடா தொரன்ரோவில் உள்ள நிப்ளக்ஸ் அச்சகத்தாரும்

இதனொரு பகுதியான ஜீவா பதிப்பகமும் 1956 ஆண்டிலிருந்தும் நிழல் பத்திரிகைத் துறையும் கடல்கடந்து வாழுந் தமிழர்களுக்கு 1985ம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பணி செய்து வருகின்றது. இத்தாபனங்கள் தமிழில் வெளியிட்ட நூல்கள் பல. அவற்றுள் ஈழத்துப்பூராடனுர் என்பவர் படைப்பாளியாக நின்று வெளியிடப்பட்டு வரும் நூல்கள் பலப்பல. அவற்றினைப் பின்வருமாறு வகுக்கலாம்

1. தமிழ் எழுத்து உறுப்பு இலக்கண நூல்கள்;- (அ). தமிழ் எழுத்து உறுப்பு இலக்கணமென்னும் "எழுத்து நூல்" (ஆ) "தமிழ் எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனைகள்" (இ) மின்கணனித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும் (ஈ) "மின் கணனிக்கு தமிழ் எழுத்துச் சீரமைப்புத் தேவைதானு"

2. கிறித்தவ நூல்;- (அ) "பெத்தலேகங் கலம்பகம்") (ஆ)" மிசனரிமாரின் சமுதாய வளர்ச்சித் தூதுப்பணி" (இ) "இரட்சகர் இயேசு மும்மணிக் கோவை" (ஈ) " இயேசு புராணம்" (உ) "வேதாகமத்திற் தாவரங்கள்" )"பக்தி அருவி" (எ) "பக்தி ;வனம்" (ஏ) "தாவீதின் கீதங்கள்"

3. மட்டக்களப்புத் தமிழகத் தமிழியல்;- (அ) " மட்டக்களப்புப் பிரதேசத்தின் வழக்கு மரபுச் சொற்கள் சொற்ருெடர்களினதும் அகராதி (ஆ)"மட்டக்களப்பு மாநிலப் பழமொழிகளின் அகரவரிசை" (இ): "நீரரர் நிகண்டு" ஈ) "மட்டக்களப்புச் சொல்வெட்டு" உ) "மட்டக்களப்புச் சொல்நூல்" (ஊ) மட்டக்களப்பு மாநில உபகளைதகள்" "சீவ புராணம்" நெடுங்கதை. ஐ) மட்டக்களப்பு மக்களின் மகிழ்வுப் புதையல்கள்" (ஒ) "மட்டக்களப்புப் பனையோலைச் சுவடிகள்"

4. பரணிப் பிரபந்தங்கள்;- (அ) "புயற் பரணி" (ஆ) "ஈழத்துப் போர்ப்பரணி" (இ) "வறுமைப் போர்ப் பரணி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

5. புதுக்கவிதைகள்;- (அ) "சிந்தனைச் சரம்". (ஆ) "பாலர் பாச்சரம்"

6. கவிதை வசனக் கதை;- (அ) "மல்லிகைப் பந்தல்" (ஆ) "கைக்கிளையம்"

7. சாரணியம்;- சாரணிய ஆங்கில நூல்களின் சாரத் தமிழாக்கம் இதுவே ஆசிரியரின் முதல் நூல்.

8. பெரியார்களின் வரலாறுகள்;- (அ) "விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்" (ஆ)"ஈழத்து இரட்டையர் இரட்டைமணிமாலை" (இ) இரும்பு அரசன்"(ஈ) "புலவர்மணிக் கோவை"

9.அகத்திணை புறத்திணை நூல்கள்;- (அ) "புதுப் புறப் பொருள் நூற்றொன்று" (ஆ) "புது அகப்பொருள் நூற்றிரெண்டு " (இ) "புதிய அகப்பொருள் வெண்பா" ((ஈ) "புதிய புறப்பொருள் விருத்தம்" ((உ) " அன்புடைத் தமிழர் அகத்திணை வாழ்க்கை" -

10. தமிழ் இலக்கண நூல்கள்; (அ)"கவிதை படைப்போமா" -(ஆ) "பேறுமுனை" (இ) "தமிழிலக்கணச் சிந்தனைகள்"

11.இசைப்பாடல்கள்;- (அ) "வெற்றிலை" (

12. நாடகத் தமிழ் நூல்கள்;- - (அ) "கூத்துநூல் விருத்தமும்' மதங்கசூளா மணியின் மறுபதிப்பும் (ஆ) "கூத்தர் வெண்பா" (இ) "கூத்தர் அகவல்" (உ) "நாடகத் தமிழ்" (ஊ) தென்மோடி வடமோடி நாடகங்கள்

13.நாடகத் தமிழ் நூல்கள் - இலக்கியம்;- (அ) "முப்பது வெள்ளிக் காசுகள்" (ஆ) "சிலம்பு" வடமோடி (இ) " மணிமேகலை தென்மோடி நாடகம்.

14. "தமிழழகி" ஒன்பது காண்டங்கள்;-"தமிழ் அழகி" காப்பியம் 12000 செய்யுட்களும் 3000 பக்கங்களுங் கொண்ட தமிழரின் மொழி கலை பண்பு இனம் வரலாறு இலக்கிணம் இலக்கியம் கலை பற்றிய ஒன்பது காண்டங்கள் அறுபந்தத் தொகுதிகள் கொண்ட தமிழ்க் களஞ்சிய இலக்கியம்

15. கிரேக்க ஆதி நூல்களின் தமிழாக்கம்;- (அ) ஹோமர் மகாகவியின் "ஓடிஸ்சி" (ஆ) ஹோமர் மகா கவியின் "இலியட்" ஈ) சொபிகொலசின் நாடகங்கள் முதலாந் தொகுதி (ஈ) சொப்கொக்கொலசின் நாடகங்கள் இரண்டாந் தொகுதி (உ) அயிலிசியசின் நாடகங்கள் - முதலாவதி தொகுதி ((ஊ0 அயிலிசியசின் நாடகங்கள் - இரண்டாந் தொகுதி (எ) யூரிப்பைடசின் நாடகங்கள் 5தொகுதிகள் (ஓ) அஸ்ரபானிஸ் 11 நாடகங்கள் - மூன்று தொகுதிகள் (ஒ) மெண்டோர் நாடகங்கள்

16. வரலாற்று நெடுங்கதை;- (அ)"யாரிந்த வேடர்" ((ஆ) "ஈழத்தின் வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

17. சித்திரக்கலை நூற்கள்;- (அ) "முதலாம் இரண்டாம் வகுப்புகளிற் சித்திரங் கற்பித்தல் முறைகள்" (ஆ) பறவைகளை வரைவதெப்படி (இ) மனித உருவங்களை வரைவதெப்படி (ஈ) விலங்குகளை வரைவதெப்படி உ) மலர்களை வரைவ தெப்படி (ஊ) தாவரங்களை வரைவதெப்படி (எ) உலக ஓவியக் கலை

18.உரைநடை எழுதிய நூல்கள்; (அ) சீமந்தனி புராணம் (ஆ) கதிர்காம சதகமாகிய நூற் திரட்டு 3 பெத்லேகங் குறவஞ்சி

19 அச்சுருவாக்கிய பெனயோலைச் சுவடிகள்;- (அ) கபோத காதை (ஆ) இரண்ணிய சம்ஹார அம்மானை"

20 தொகுத்துப் பதிப்பித்த பிற நூல்கள்;- "நாவலர் பெருமானின் வாழ்க்கைக் குறிப்புகள்" (ஆ) "கிழக்கின் பேரொளி புலவர் மணி(ஈ) சிவகுமாரன் கதைகள்( (உ) "விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள்"

21. மனோதத்துவம்;- (அ) "பிசாசின் புத்திரர்கள்"

22.பயண நூல்கள் (அ) பனித்தரைச் செலவு (ஆ) தமிழைத் தேடி (இ) நிசமும் நிழலும் பயண நினைவுகளும்

23.வாழ்க்கைப் பருவ நூல்கள் (அ) "வாழ வைக்கும் நினைவுகள்". "இளமைப் பருவச் சிந்தனைகள்." (ஆ) "முதுமைப் பெயர்ச்சி நான்மணி மாலை" இ) ஒரு இளமாசிரியனின் எதிர்பார்ப்புகள் (இ) காளைப்பருவச் சிந்தனைகள் (ஈ) வாழ்க்கையில் மறக்கமுடியா நினைவுகள்

24. உலகளாவிய தமிழ்ப்பணி நூல்கள்; "தமிழ்ப் பண்பாட்டியக்கவியல்" ( பேச்சுத் தமிழ்" என்னும் நூலையும் (பக். 120) வெளியிட்டுள்ளார். இதனைவிட தமிழ்த்தாய் பள்ளியெழுச்சி எனும் செய்யுட் பனுவலையும் ஆக்கியுள்ளார்

இவரால் எழுதப் பட்ட சகல நூல்களும் உலகின் பிரபல நூலகங்களிலும் தமிழ்ப்பல்கலைக் கழகங்களிலும் அறிஞர்களிடத்திலும் உள்ளன.

.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம்

பக்தி இலக்கியம் தமிழிற் பரந்தபோது தாம் வழிபடும் இறை வனைக் காதலனாகவும் பிள்ளையாகவுங் கற்பனை செய்து கசிந்துருகு வது என்னும் தோத்திர முறை உருவானது. அது கோவை, பிள்ளைத் தமிழ், கலம்பகம் எனும் தொண்ணூற்று ஆறுவகைப் பிரபந்தங்க ளாகத் தோன்றின. அவற்றுள் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தமும் ஒன்று.

கடவுளை ஒரு குழந்தையாகப் பாவித்து இயற்றப்படும் செய்யுளைப் பிள்ளைத் தமிழ் என்பார்கள் அப்பிள்ளைத் தமிழ் ஒரு குழந்தை பிறந்தநாட் தொடக்கம் 21வது மாதம் வரையும் அக்குழந்தையின் வளர்ச்சியோடு சம்பந்தமான நிகழ்வுகளை விபரித்துச் சொல்லும். இம்மாற்றங்கள் 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21 என்று மும்மூன்று மாத கால இடைவெளிகளில் ஏற்படும்

பிள்ளைத் தமிழுக்குரிய இந்த நிகழ்வுகள் 17 மாதம் வரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் காப்பு, செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை அல்லது வாரானை, அம்புலி எனும் பருவங்களாக ஒன்றாகவே இருக்கும். பின்னர் 17 ல் இருந்து வரும் மூன்று கால கட்டத்திலும் வேறுபடும். ஆண்களாயின் சிறுபறை பருவம், சிற்றில் பருவம், சிறுதேர்ப் பருவம் என்றும் பெண்களாயின் கழங்கு, அம்மானை, ஊஞ்சல் பருவம் என்றும் வேறுபடும்.

இப்பிள்ளைத் தமிழ் ஆணுக்குரியதாகையால் அப்பருவ வேறு பாடுகள் பின்வருமாறு இருக்கும்.

1. காப்புப்பருவம் - பிறந்த பிள்ளைக்கு எவ்விதத் தீய வினை களும் கொடிய நோய்களும் ஏற்படாதவாறு மருந்திடப்பட்ட அல்லது தோத்தரிக்கப்பட்ட நூலாலான காப்பைக் கட்டிப் பாது காப்பது.

2.தாலாட்டுப் பருவம் - நித்திரை செய்விப்பதற்காக தாலாட் டுப் பாடுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3.: செங்கீரைப் பருவம். - வான்பார்த்துக் கிடந்த குழந்தை மண்பார்த்துக் குப்புற விழுந்து கால் கை கூட்டி உடலைத் தாங்கி தவழ முனையும் பருவம்.

4.சப்பாணிப் பருவம் - ஓரளவு நிமிர்ந்து இருந்து கைகளைக் கூட்டிச் சப்பாணி கொட்டும் பருவம்.

5. முத்தப் பருவம்: இக்காலத்தில் முத்தங் கேட்கும் மற்ற வர்களின் முகத்தை நிமிர்ந்து உற்றுப்பார்த்து முத்தங் கொடுக்கும்

6.வருகை அல்லது வாரானைப் பருவம்: தவழும் நிலையில் உள்ள குழந்தையைத் தன்னிடத்தில் வரும்படி உற்சாகமூட்டிப் பாடுதல். யானைக் குட்டிபோலக் கொழுகொழுவென்றிருக்கும் இந்தப் பருவத்தில் யானையை அழைப்பதுபோல அழைத்தலால் வாரானைப் பருவம் என்றும் பெயருறும்.

7. அம்புலிப் பருவம். மதியின் ஒளியை வானிற் கண்டு மகிழும் இப்பருவத்தில் அம்புலியைக் காட்டி அதனை விளையாடு வதற்கு அழைக்கும் பருவம்

8. சிறுபறைப் பருவம். கையிற் கிட்டிய பொருட்களைத் தட்டிச் சப்தமெழுப்பும் ஊக்கந் தலையெடுக்குங் காலத்தில் சிறுபறை செய்து கொடுத்து அதனை முழக்கி விளையாட விடுவது வழக்கம்.

9. சிற்றில் பருவம்.நடக்கத் தொடங்கியதும் தட்டுத் தடுமாறி மற்றப் பிள்ளைகள் கட்டி மகிழும் மண்வீட்டைச் சிதைப்பதுண்டு. அப்படிச் செய்யாதபடி வேண்டிப் பாடுதல்

10: சிறுதேர்ப் பருவம்: உறுதியாக நடக்கத் தொடங்கியதும் தேர் செய்து அதனை உருட்டுவதற்குக் கொடுப்பார்கள். அக்குழந்தை அத்தேரை தள்ளி உருட்டிக்கொண்டோ அல்லது இழுத்துக் கொண்டோ செல்லும் அவ்வாறு செய்யும்படி கேட்டு பாடும் பகுதி.

............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்

--------31051991வெள்ளை900--------

## 1.காப்புப் பருவம்

### (அடிகளாரின் தாயக வர்ணனை)

அங்கை கூப்பியே ஏற்றுவோம்அறிவின் தீபங் காணுவோம்
சாங்கம் வாழ்த்தச் சர்வ உலக முயர்ந்து நின்றோன்
திருவாய் திறந்தே யாழ்நூற் திறமது உரைத்த யாழோன்
ஆதியா மாகமங்கள் அரும்பொருளில் வல்லோன்
புத்தர் இயேசு காந்தி நவிப் புண்ணிய போதங் கற்றோன்
பொதிகைத் தமிழின் மாட்சி பாணினி மொழியிற் சொன்னோன்
ஆதவன் போலே எங்கும் அறிவெனுஞ் சுடரைக் கான்ற
அண்ணலாம் விபுலானந்த அடியினை வாழ்த்து நெஞ்சே

- ஆசிரியப் பயிற்சி மாணவன் -

### கடவுட் காப்பு.

அங்கைத் தளிரால் அவனிசெய்து
அழியா நிலையில் அதைநிறுத்தி
அருமறைப் பொருளா லணையிட்டு
அனைத்தும் புரக்கும் அருளாளன்
செங்கை ஞான அமுதூட்டுஞ்
செவ்வா யன்பின் செயல்காட்டுஞ்
செனித்த பவவினைச் சினந்தீர்த்துச்
செந்தீக் கண்கள் சிருட்டும்
கங்கை யெனவே வற்றாத
கருணைக் கடவுட் பெயராளன்
கனியும் பாதக் கமலமதைக்
கசிந்தே சார்ந்து கரங்குவித்தோம்
மங்கைக் குரவை கேட்டார்த்து
மகிழும் நாரை வயல்சூழ்ந்த
மட்டக் களப்புத் தந்தமணி
மயில்வா கனனைக் காத்திடுக 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மங்கையர் குரவை ஒலியைக் கேட்டு நாரைகள் மகிழ்கின்றன. அத்தகைய வயல்கள் சூழ்ந்த ஈழநாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு, பரந்த தமிழுலகிற்கு அளித்த மணி போன்ற மயில்வாகனன் எனும் இயற்பெயருடைய விபுலானந்த அடிகளாரைக் காக்குகவென்று:

தனது அழகிய கரங்களால் இந்த உலகத்தைப் படைத்தவர். அதனை என்றுமே அழியாத நிலைநிறுத்தியவர். அப்படி நிலைப்பதற்கு மறைகளால் அணைசெய்தவர். எல்லா உயிர்களையும் ஆட்சிசெய்யும் அருளுள்ளங் கொண்டவர். அவரது கரங்கள் ஞானமென்னும் அமிர்தத்தை ஊட்டும். செவ்வாய் அன்பு மயத்தின் கருமங்களை எடுத்துக் காட்டும். அவரது அனல் கக்கும் கண்கள் நம்முடன் கூடப் பிறந்த பாவங்களை கடிந்து இல்லாது செய்து தூயதாக்கும். வற்றாத கங்கைபோன்ற கருணைவெள்ளம் உடையவர். அத்தகைய கடவுள் என்னும் பொதுப் பெயருடைய ஏகனின் இரக்கமிக்க திருவடிக் கமலத்தைப் பற்றி, நாம் செய்த குற்றங்களையிட்டு வெதும்பி கசிந்துருகிக் நம் கரங்களாற் கூப்பித் தொழுகின்றோம்.

### சங்கநூற் காப்பு

சங்கந் தழுவித் தமிழாய்ந்து
சரமாய்த் தொடுத்த தமிழ்நூல்கள்
சரித்த கடற்கோள் தானுண்ணச்
சலித்துத் திரட்டித் சார்ந்தவைகள்
பொங்கும் பத்துப் பாட்டாலும்
பொலியு மெட்டுத் தொகையாலும்
பொய்யாப் பதினெண் கணக்காலும்
புனைந்த காப்பியம் பத்தாலும்
செங்கை சிறக்கக் காப்பிட்டோஞ்
செறிந்திடு வயலிற் கமலமடு
சென்றிடு சுவர்மந் தலைதூக்கிச்
செம்மரை மொட்டெனச் சிலிர்த்தாடும்
தெங்கைக் கமுகணை திருக்காரை
தீவென் திகழூர் அவதரித்த
தென்தமிழ் விபுலா நந்தவடித்
திருவைத் தமிழ்நூல் காத்தளியே 2

மட்டக்களப்பிலிருந்து தெற்கே இருபத்தைந்து கல்தூரத்தில் வங்கக் கடற்கரையை அடுத்து விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு எனும் பதியுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அது கிழக்கில் நெய்தலும் மேற்கில் மருதமும் சேர்ந்த சிறப்புப் பொருந்தியது. வயல்களில் இடைக்கிடையே சிறு தாமரைத் தடாகங்கள் உள்ளன. அத்தடாகங்களில் வாழும் ஆமைகள் தமது நீள்கழுத்துத் தலைகளை நீருக்குமேலே உயர்த்திப் பார்கின்றன. அப்போது அருகிலுள்ள தாமரை மொட்டுகளைப்போல அவை தோற்ற மளிக்கின்றன. தென்னை மரங்களிடையே செழித்து வளர்ந்துள்ள கமுகுகள் பின்னிப் பிணைந்து அழகூட்டுகின்றன.

இத்தகைய இயற்கை வளமிக்க பதியிலே பிறந்த அடிகளாருடைய அழகிய கரங்களுக்கு, முத்தமிழ்ச் சங்கங்கள் கூடலில் ஆய்ந்த பல தமிழ் நூல்களைக் கடல்கோள்கள் உண்டுவிட்டாலும் எஞ்சியவற்றை துருவியாராய்ந்து காப்பாற்றிய பத்துப் பாட்டு எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு ஐம்பெரிய சிறிய காப்பியங்கள் என்பவற்றைத் தீமையெதுவும் அணுகாத திருக்காப்பாக இட்டுள்ளோம். அவை அடிகளாரைக் காப்பதாக.

## திருக்குறட் காப்பு.

உலகநூல் முப்பால் மறைதேர்ந்து
உரைசெய் பதின்மரா லொளிர்வுற்று
உள்ளுறை யாவுமே மூன்றெண்ணால்
உற்றிட வமைந்து ஓங்கிடுமால்
அலகிடு வாழ்க்கை அமைகருவாம்
அறம்பொருள் இன்ப மாய்ந்தெடுத்து
அடியது இரண்டால் வள்ளுவரும்
அருளிய திருக்குற ளெனுமமுதத்
திலகமாய்த் தமிழ்த்தாய் தரித்திடுநூல்
திருப்புதல் பன்மொழிப் பதிவாகி
திருவடை முன்னுறு திறல்தாங்கித்
திசையெலாம் புகழ்கொள் திகழ்நீதி
நலமுற நமனூர் மேதியின்பின்
நடைபயில் அநந்தன் வயவூரின்
நற்றமிழ் விபுலா நந்தர்தமை
நயனமாய் நசையறக் காத்திடுமே 3

உலக நூல் என்றும் வாழ்க்கையின் அறம்பொருள் இன்பம் என்னும் மூன்று முறைகளைச் சொல்லும் முப்பாலென்னும் அழைக்கப்படுவது. மூன்று என்னும் எண்ணின் பாகுபாடுகளால் பாக்களின் தொகை அதிகாரங்கள் என்பன ஆக்கப்பட்டது. பல ஆகமங்களையுங் கற்றறிந்த பல மதத்தினரான பதினெட்டு உரையாசிரியர்களால் உரையெழுதப்பட்ட பெருமையுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித வாழ்க்கையின் மூலகங்களான அறமாதியவற்றை நன்கு ஆராய்ந்து இரண்டடிப் பாக்களின் அமுதமாகத் திருவள்ளுவரால் அருளப்பட்டது. தமிழன்னைக்குத் திலகமாக அமைந்து சுடர்விடுவது.

உலகின் பல மொழிகளிலே மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு நூலுருவாகி வெளிவந்த நீதி நூல். இவற்றுடன் திருவென்னுஞ் சிறப்புப் பெயரை முதலிற் கொண்டது. இன்னும் எத்தனை எத்தனையோ பெருமைகளுக்கு உரியதாகத் திருக்குறள் இருக்கின்றது.

காரைதீவைச் சார்ந்த வயலில், எமனின் வாகனமான எருமையின் பின்னால் கலப்பைப் படையுடைய பலதேவன் செல்வது போல உழவர்கள் உழுகின்றனர். அச்செழுமை மிக்க பதியிற் பிறந்த விபுலானந்த அடிகளாரை மேன்மைக்குரிய வள்ளுவரின் முப்பால் காப்பதாக.

பன்னிரு திருமுறை பதினன்கு மெய்கண்டசாத்திரக் காப்பு

திருவருள் மொழியாந் தேவாரம்
தேன்தமிழ்த் திருமுறைத் தீஞ்சுவையாற்
திரட்டித் தென்னு டுடையவனை
திகழச் செய்த மூவர்ரம்
ஒருவா சகத்து முருகாதார்
ஒடுங்கிக் கலப்பார் வாசகத்தே
ஒடுங்கா ரொடுங்கா ரொருபோதும்
ஒன்றார் கடல்சூழ் ஒண்ணிலத்தே
இருமை தெளிக்கும் மெய்கண்ட
இனிய சாத்திரம் பதினன்கும்
இறைவறி வூட்டுந் திருமறையாற்
திரண்ட நூலாற் காப்பிட்டு
வருணனும் வியர்த்து வான்கோவின்
வழிவிழி யாகக் களிசிந்தி
வரிநம னலப்படை முசலிவயல்
வளமார் அடிகளைக் காத்திடுமே 4

தேவாரம் இறைவனின் கிருபை மொழியாக அருளப்பட்டது. தெளிந்த தமிழ்த் தேன் சுவையுடையது. தென்னாடுடைய சிவனை எந்நாட்டவருக்கும் இறைவனைப் போற்றி அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூன்று நாயன்மார்களாலுஞ் செய்யப்பட்டது.

உலகின் ஒருவாசகத்திற்கும் உருகாதவர்கள் திருவாசகத்தைக் கேட்டால் மனமுருகி ஒன்றிக் கலப்பார்கள். அப்படிச் செய்யாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வர்கள் எந்தவொரு தேவ அருளுக்குமே ஒடுங்காத அரக்கர்களே ஆவார்கள். இத்தகையது மணிவாசகப் பெருமானின் திருவாசகம், தேவாரம் திருவாசகம் என்பவை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

மானுடரின் இம்மை மறுமைப் பயன்களைத் தெளிவாக எடுத்துக் காட்டி விளக்கும் பதின்நான்கு மெய்கண்ட சாத்திரங் களும் தேவ ஞானத்தை அறிவிப்பனவாகும்.

வருணனைபோல வியர்வை சிந்தி, இந்திரனின் கண்களைப் போல களியாலான கறைகளை உடலிற் தாங்கி, பலதேவனைப்போலக் கலப்பையை நடாத்திக் காராளர் உழுதுகின்ற வயல் வளஞ் செறிந்த பதியிற் பிறந்த விபுலானந்த அடிகளைக் காப்பதற்காக மேற்கூறிய நான்கு சைவமறைகள் பதினன்கு சாத்திரங்கள் ஆதிய நூற்களாற் புனையப்பட்ட காப்புக் காப்பதாக.

## பரிசுத்த வேதாகமக் காப்பு.

ஆதியா கமத்தி லாரம்பித்து
அந்தமாம் வெளிப்பா டறுபத்து
ஆறே யாகிய புத்தகங்கள்
ஆண்டவன் அருளிய திருமறையே
சேதிக்கும் பவவினை அழிப்பதற்குச்
சிந்தை கொண்டு தேவனவர்
செருக்குறு மானிடர் செய்பாவஞ்
செத்திடச் செய்யப் புத்திரனை
போதித் துலகின் பொய்வாழ்க்கைப்
புரட்டில் வீழ்த்துஞ் சாத்தானை
போக்கச் சிலுவைப் பாடுற்று
புத்துயிர் தரவே மரித்தெழுந்து
சாதித் தளித்த இரட்சிப்பின்
சார்குறி சிலுவை வரம்பிட்டு
சகங்காத் திடுநற் காராளர்
சற்பதி விபுலனைக் காக்குவே 5

கிறித்துவத் திருமறையான பரிசுத்த வேதாகமம் ஆதியாமந் தொடங்கி வெளிப்படுத்தல் என்பது வரையிலுள்ள அறுபத்தாறு நூல்களைக் கொண்டது. இவை ஆண்டவருடைய திரு வாக்குகளாக அவரது அடியார்களாற் கூறப்பட்டவை.

உலகின் மானுடர்கள் தமது பாவ வினையால் ஆண்டவரின் பாதையை விட்டு விலகிச் சாத்தானின் வழியில் நடந்ததால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவற்றை மேற்கொண்டு மக்களை இரட்சிக்கச் சித்தங் கொண்டார். அதனால் திரித்துவத்தில் ஒன்றான சுதனாக அவதரித்தார்.

கிறிஸ்துவென்னும் நாமத்துடன் இரட்சிப்பின் செய்தியை எங்கும் போதித்தார். அதை விரும்பாதவர்களாற் சிலுவையில் அறையுண்டு மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்தார். அதனால் பாவத்திற்கு ஏதுவான சாத்தானையுஞ் சாவையும் வென்றார். பாவ மீட்பையு' இரட்சிப்பையும் உலகின் சகல சனங்களுக்குந் தந்தார். அந்தத் தியாகத்தின் அடையாளமே சிலுவை.

இச்சிலுவைக் குறிகளை வயலில் உழவர்கள் வரம்பிடுவதால் ஆங்காங்கு அமைக்கின்றனர். அத்தகைய பதியில் அவதரித்த விபுலானந்த அடிகளை பரிசுத்த வேதாகமங் காப்பதாக.

## திருக்குரான் காப்பு

வல்லோ னேகன் வழுத்துதற்கு
வரம்பிலா அல்லாஹ்த் திருப்பேரான்
வரன்மணற் பாலை வனத்துறைந்த
வலிய பாவம் போக்குதற்கே
நல்ல உள்ளங் கொண்டதனால்
நபிஸல் முகமது நற்தூதர்
நயமுறு குறைசி வம்சமதில்
நாடச் செய்து ஏகதெய்வஞ்
சொல்லிடு முப்பது சூசதனை
சுடரும் ஈமான் கலிமாவால்
சுயமறு சாந்தியாய் சுவர்க்கவழிச்
சுனையிலே மனுக்குலந் துய்த்தாடக்
கல்லிழி கடுநதி பிறைவடிவாய்க்
கரையிடு வயலில் நெற்சூடு
கவின்தரு காரை விபுலன்தனைக்
காக்குந் திருக்குரான் கைகொடுத்தே 6

வல்லவன். வாயாற் சொல்லிப் போற்றுதற்கு வரம்பில்லாதவன். அல்லாஹ் என்னும் பேராளன் பாலைவனத்திலே வாழ்ந்த பலதெய்வ வணக்கமும் பாவ வாழ்க்கையுங் கொண்ட மக்களைத் திருத்தவதற்குச் சிந்தை கொண்டார்.

அதன்படி குறைசி வம்சத்தில் முகமது நபி (ஸல்) அவரித்தார். அவருக்கு இறைவனாற் அருளப்பட்டது திருக்குரான் எனும் மறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதில் உள்ள முப்புது சூஸ் எனும் பகுதிகளிலே சொல்லப் பட்ட நற்தூதுகளையும், ஈமான் கலிமா எனும் வழிகளையுங் கற்பனை களையும் பின்பற்றுவதே இசுலாம் என்னுஞ் சாந்தி மார்க்க மாகும். இதன்வழி சுவர்க்கபதியை அடையலாம். இந்த சாந்தி மார்க்கத்தின் அடையாளம் பிறையுந் தாரகையுமாகும்

காரைதீவின் கழனியிலே ஆங்காங்கு நெற்போர்கள் உள்ளன. சிறுநதியன்ன வாய்க்கால்கள் அவற்றைச் சூழ்ந்து ஓடுகின்றன. அத்தோற்றம் பிறையும் தாரகையும் போலத் தோற்றந் தருகின்றது. அத்தகைப் பதியிலே பிறந்த அடிகளாரைத் திருக்குரான் காப்பதாக

## திரிபிடகக் காப்பு

புத்தந் தருமஞ் சங்கமெனப்
  புகலும் மும்மணித் தத்துவத்தாற்
 புவியோர் பிறவிப் பெருங்கடலைப்
  புணையாய்க் கடக்கப் புகல்மறையாய்
நித்தங் கைக்கொள் எண்சீலம்
  நியதிகைக் கொண்டு நிர்வாண
 நிலையிற் தரிக்கும் நிறைமொழியை
  நிரைத்து மணிபோற் கோத்தெடுத்து
அத்திரு வரசடி அமர்புத்தர்
  அருளிய அனைத்தும் அடக்கிநிற்கும்
 அநங்க ளுட்சி அழித்தொதுக்கும்
  அகிம்சை சொல்லுந் திரிபிடகங்
குத்தும் முரல்பாய்ந் தெழுந்தெட்டிக்
  குசையுறை குருகைக் குடியெழுப்புங்
 குறுமனை நெய்தல் சூழ்காரை
  குருவாம் விபுலனைக் காக்குவே 7

புத்தமதப் போதனைகள் புத்தம், தருமம், சங்கமென்னும் மும்மணிகளாலான தத்துவத்தைப் புகல்கின்றன. அதனை மிதவை யாகக் கைக்கொண்டு உலகத்தவர்கள் பிறவி எனும் பெரிய கடலில் தத்தளியாது கடந்து வெளியேறுவர்.

அத்துடன் எட்டு நற்குண நற்செய்கைகளைக் கடைப்பிடிப் பதாலும் நிர்வாண நிலையென்னும் பற்றற்ற நிலையை அடைவர். இவற்றையெல்லாம் அரசமர் புத்த பெருமான் மும்மணிகளாக ஒழுங்குபடுத்திக் காமனை வெல்லும் திறத்துடனும் உயிர்மேல் அன்புள்ள திடத்துடனும் திரிபிடகம் எனும் நூலாக அருளித் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குத்தீட்டி போன்ற மூக்குடைய முரல் மீன் துள்ளிப் பாய்ந்து தர்ப்பை அடவிகளுள் கூடுகட்டியுள்ள கொக்குகளைக் குடியெழுப் புகின்றன. இத்தகை இயற்கையும் இயல்புமுடையது நெய்தல் நிலம். அதனை அடுத்த காரைதீவிற் பிறந்த விபுலானந்த அடிகளாரை அந்தத் திரிபிடகம் காப்பதாக.

## முத்தமிழ்க் காப்பு.

பொதிகை முனிதனைக் கொண்டுசிவன்
பொலியு மிலக்கணந் தனைமூன்றாய்ப்
பொருந்தத் தமிழிற் புதுமைசெய்தும்
பொருளிரண் டறம்புற மெனவகுத்தும்
உதியன் வளவன் செழியரெனும்
உரமுறு மூவரும் ஆய்ந்தசங்கத்
துயர்நிலை பெற்றிற வாதமொழி
உன்னதத் தனித்தழ ஒலிபெற்று
பதிபல கடற்கோள் உண்டாலும்
பவணந்தி தொல்நூற் பண்புகளால்
பன்மொழி கற்பினும் தமிழழியாப்
பஞ்ச விலக்கண முத்தமிழே
நிதிமிகு கடற்றிரைத் தாலாட்டால்
நித்திரை கண்ணகை நீள்கோட்ட
நெடுமணி யோசை யால்விழிக்கும்
நிலமகன் விபுலன் தன்காப்பே 8

பொதிகை மலை அகத்தியரைக் கொண்டு ஆதிசிவன் தமிழிற்கு இயல், இசை, நாடகம் என வகுத்து இலக்கணஞ் செய்வித்ததுடன் அகப்பொருள் புறப்பொருள் எனும் வாழ்க்கைத் திணைப் பகுப்பு களையுஞ் செய்வித்தார்.

இத்தமிழை உதியன், வளவன், செழியன் எனும் மூவேந்தரும் சங்கம் வைத்து ஆராய்ந்து வளர்த்தனர். இதனாலே உன்னதம் பெற்றது. தனிழகர ஒலிகொண்ட இம்மொழி என்றுமே இறவாத மொழியாகப் பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் திகழ்ந்து வருகின்றது.

பலதடவைகள் கடல்கோள் எனும் அழிவுகளாற் தமிழகம் பாதிக்கப்பட்டாலும் தகை கெடாது நிலைத்து நிற்பது. மற்றும் தொல்காப்பியம். நன்னூல் எனும் இலக்கண நூல்களாலும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியாதிய ஐம்பெரும் இலக்கண வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பினுலுந் தமிழர் எந்த மொழியைக் கற்ருலும் அதன் உறுதியும் தொன்மையும் மாருது இலங்குகின்றது. இத்தகையது முத்தமிழ்.

அத்தகைய முத்தமிழ், கடல் அலையின் தாலாட்டிஞல் கண் துயின்று கண்ணகைக் கோயிலின் சாமத்து மணியோசையால் துயில் விழிக்கும் மக்கள் வாழும் காரைதீவிற் பிறந்த அடிகளாரைக் காப்பதாக.

## ஆரியக் காப்பு

பாணினியார் பகுத்தாய் பண்டைமொழி பரந்து
பாரதத்தின் வடதி சையிலே
பார்ப்பானர் சதுர்மறை பயில்கின்ற சமத்தப்
பாங்குற்ற வேத மொழியாய்
பேணியவர் ஆரியப் பெருங்குடியா ராதலாற்
பெருநூல்கள் கொண்டு தேவப்
பெட்புற்றுத் தமிழின் பெலன்கொண்டு கலந்து
பிரிந்தகிளை மொழிக ளாக
ஏணிகொண் டேறியோர் எட்டியதை உதைக்கும்
இயல்பாக மாறி விடவே
ஏற்றமுறப் பேசும் இயல்வழக்கு அற்று
ஏடளவி லான மொழியே
கேணியெங்குந் தாமரை காலையிதழ் விரிக்கும்
கிள்ளைதமிழ் கீத மிசைக்குங்
கிழக்கீழத் தலைகொள் கிளர்ந்தவிபுல் மகிழ்நன்
கிழவனையே காத்தி டுகவே 9

வடமொழி, ஆரிய மொழி என்று வழங்கப்படும் சமஸ்கிருத மொழி தமிழ்மொழி போலப் பண்டைப் பெருமை பெற்றது. இதற்குப்பாணினியார் இலக்கணம் வகுத்தளித்தார்.

மறையவர்கள் ஓதும் சதுர்வேதம் இம்மொழியில் இருந்ததால் வேத மொழி என்றும் தேவ மொழியென்றும் உயர்வு பெற்றது. ஆஞல் தமிழிலும் அயல் மொழிகளிலும் கலந்து பல கிளைமொழிகளாக உருவெடுத்தது

அதனுல் இன்று பேச்சு வழக்கற்று எழுத்தளவிலும் ஏட்டளவிலுமே உயிர் வாழ்கின்றது. அத்தகைய ஆரிய மொழியே கிழக்கு ஈழத்தில் உள்ள பொய்கைகளில் தாமரை மலர்கள் காலையில் விரிக்கின்றன. அதனருகிற் கிள்ளைகள் மதலைத் தமிழிசைக்கின்றன, அப்பதியிலே பிறந்த விபுலானந்த அடிகளாரைக் காக்குக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆங்கில வாணிக் காப்பு

ஆதவனின் கதிர்கள் அணுகாத விடத்திலும்
ஆதிக்கஞ் செய்து உலகின்
அனைத்துமொழி தன்னிலும் அணைவுற்று அறிவின்
அரும்பொருளைக் கவர்ந்து வளர்ந்து
போதமிகும் நுட்பப் பூதமைந்தின் ஞானம்
பொருந்துகலைப் புலமை மிக்கு
பொலிவுற்றுப் படைவளம் பொறிநுட்பம் ஆதிப்
புனைவுசெயும் ஆங்கில மென்னும்
நாதமொழி என்று நான்காறு எழுத்தில்
நடைமுறைக் கொப்பு மொழியாய்
நற்கவிஞர் சேக்பியர் நயம்மிகுந்த கீற்சால்
நானிலத்தார் போற்றும் வாணி
மாதர்மதர்த் தனமும் மள்ளர்புய வரையும்
மருநத்தே நெற்போர் செய்யும்
மாட்சியுறு ஐந்திணை மயக்கமுறு காரை
மறையடியை காக்குங் காப்பே 10

உலகிற் தலைசிறந்து விளங்கும் ஆங்கில மொழியின் சிறப்பு அளவிடற்கரியது. சூரியனின் கதிர்கள் நுழையாத இடத்திலும் ஒரு காலத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கஞ் செய்த காரணத்தால் ஆங்காங்குள்ள அறிவியல் என்னும் அரிய பொருளைக் கவர்ந்து வளர்ந்த மொழி.

சராசரத்தின் விண், மண், காற்று, அக்கினி, நீர் என்னும் பஞ்ச பூதங்கள் சார்பான அறிவியல் ஆய்வாற் படை வளத்தையும் பொறிநுட்பத்தையும் வளர்த்த மொழி.

இருபத்தாறு எழுத்துக்களைக் கொண்டு ஒலிக்குறிப்பு மொழியாகவும் நடைமுறைப்படுத்தற்கு இலகுவான ஒரு மொழியாகவும் இலங்குவது.

சேக்ஸ்பியர் கீற்ஸ் ஆதிய கவிஞர்களுடைய இலக்கிய ஆக்கங்களால் உலகிற் பிரசித்தி பெற்றது. அத்தகைய ஆங்கில வாணியே;

மங்கையரின் மதாளித்த தனங்களும் காராளரின் புயங்களும் வயலின் நெற்போர்களும் ஒன்றை ஒன்று விஞ்சுமளவிற்குப் போர் செய்கின்ற ஐந்திணை மயங்கும் காரைப்பதியில் பிறந்த வேத வித்தகன் விபுலானந்த அடிகளைக் காப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீரரமகளிர் காப்பு

நிரைதெங்கு நிழல்செய் நீள்வாவி யெங்கும்
  நிறைமதிசேர் இரவின் போது
நிமிர்திமில்கள் நிரைத்து நீர்வாழினம் நிறைத்து
  நிம்மதியாய் ஒடுங்கும் நிசியில்
கரையெங்கு மொளிரும் கவினிருலைப் பற்றும்
  கலாமொழி வேளை தனிலே
கடல்மகனை அணைக்கக் களப்பென்னுங் கன்னி
  காதலாற் தவிக்குங காலை
வரைநிழல்கள் கருமுகில் வளர்ச்சியாய் மேற்கில்
  வண்ணமே காட்டும் போது
வஞ்சிநெஞ்சும் மீனின் வளமான உடலும்
  வடிவுகொண்டு சரிகம சாற்றும்
திரைவாழும் நீரர தெய்வீக மகளிரே
  தெளிவான நெய்தற் [redacted] மருதந்
திணைமயங்க நெற்போர்த் திகழ்குறிஞ்சிக் காரை
  திருமகனைக் காப்புச் செய்யுமே 11

வரிசையாக கரையோரத்தில் நிற்கும் தென்னை மரங்கள் நிலவில் நிழல் செய்யும் நீண்ட மட்டக்களப்பு வாவியிலே முழு மதியம் தனது ஒளியைப் பாய்ச்சுகின்றது.

பரதவர்கள் நிமிர்ந்து ஓடும் தோணிகளில் நீர்வாழ் மீன் நண்டு ஆதிய வற்றைப் பிடித்து நிரப்புகின்றனர். வாவியின் கரை யோரங்களில் தீபங்கொண்டு இறல்களைப் பலர் பிடிக்கின்றனர்.

வங்கக் கடலெனும் காளையை மட்டக்களப்பு வாவியெனும் கன்னி தழுவத் துடிக்கின்றாள். வாவியின் மேற்குப் பக்கத்தில் உள்ள மலைத் தொடர்களின் நிழல் வானத்தில் வளரும் கருமுகில்களாகத் தோற்றமளிக்கின்றது.

இதே வேளையில் வஞ்சியரின் வதனமும் மார்பகமும் மீனின் உடலுங் கொண்ட நீரர மகளிர் சுரமமைத்து இசைக்கின்றனர்.

மருதமும் நெய்தலும் ஒன்றுடன் ஒன்று மயங்கும் இடத்துள்ள நெற்போர்கள் மலையென வுயர்ந்து குறிஞ்சித் திணையையும் மயக்கமுறச் செய்கின்றது. அத்தகைய காரைதீவிலே அவதரித்த வித்தகன் விபுலானந்தனை நீரர மகளிர் காப்பார்களாக.

------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 2. செங்கீரைப் பருவம்

### (விபுலானந்த அடிகளாரின் பிள்ளைப் பருவம்)

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
- விபுலாநந்த அடிகளார்

விபுலாநந்தர் பிறந்த வருடம் மாதம்.

வெள்ளைக் கமலத் திரியிதழ் வாவியில்
 விரைந்தசை வள்ள மெனவோட
விதித்திடு வாடை மெல்லெனத் தழுவ
 விரிசிற களியது விளரிசைப்ப
மெள்ளவோர் நுணலை விரகிருல் அணைய
 மெய்மறந் தரியாள் மெய்சிலிர்ப்ப
மேவிடுஞ் சாரை மெய்ப்பை யடக்கி
 மேதினி வாழ்வின் விளக்கஞ்சொல
கள்ளவிர் கூந்தற் காதல் மனைவியுங்
 கவினுறு மக்கட் சுகவாழ்வும்
கட்டிலா மண்ணுங் காமமுங் காசெனும்
 கப்பமும் வாழ்வில் நிலையாது
வள்ளலி னிணையடி வாழ்வே நிலையென
 வழுத்திட வளர்கர வருடமதில்
வருமிரு பத்தேழ் பங்குனி பிறந்தாய்
 வண்செங் கீரை யாடுகவே 1

பொய்கையில் வெண்தாமரையின் இதழ்கள் விழுந்து ஓடமென அசைந்து ஓடுகின்றன. குளிர் வாடை வீசுகின்றது. வண்டுகள் சிறகுதட்டி விளரிப்பண்ணைப் பாடுகின்றன.

இந்த இன்ப வேளையில், ஆண்தவளை தன் பெண்ணை ஆசை கொண்டு மெய்சிலிர்க்க அணைகின்றது. இரைக்குக் காத்திருந்த சாரைப் பாம்பு உடனே இரண்டையும் பிடித்து உலக நிலையாமையைக் கூறுவதுபோலத் தனது உடலில் அடக்கிகொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1332.

மது துளிக்கும் மலர்களைச் சூடிய கூந்தல் மனைவி, மக்கள், என்பவர்களால் கிடைக்குஞ் சுகமும், அளவிலாத பூமி, பெண்ணாசை, பணம், ஆதிய திறைகளும் ஒருபோதும் உலகத்திலே நிலைக்க மாட்டாது. இறைவனின் திருவடி ஒன்றே நிலையானது எனும் உண்மை உரைக்கும் அடியாராக விபுலானந்தர் பிறந்தது கரவருடம் (1892) பங்குனி மாதம் இருபத்தேழாந் தினமாகும்.

### அடிகளார் அவதரித்த வாரமும் நட்சேத்திரமும்

நிறத்தே கறுத்து நீரை யடக்கி
நிலவை மறைத்து நீந்திவரும்
நிரைத்த நீர்ப்பை நிகர்த்த மஞ்சு
நீண்டுயர் வரையில் மோதிவிழப்
புறத்தே யெழுந்த புனல்தான் பொங்கிப்
புவியிற் றவழ்ந்து புனைகடலின்
புகலைத் தேடிப் புகுவது ஒப்பப்
புசித்துக் களித்துப் புணர்ந்தேயோய்
மறத்தின் வயமாய் வாழ்நாள் வறித்தாய்
மாய வாழ்வின் வசமாக
மாட்டி மாழா மார்க்க முரைக்க
மாதவா ஞாயிறு பூரட்டாதி
திறத்தே உதித்த திறலோய் மதங்கர்
திறங்கள் தமிழிற் றெளித்தளிக்க
திருவே விபுலா திகழ்கர் மூன்றித்
செங்கீ ரையா டுயாடுகவே 2

ஆவி வடிவிலே நீரைத் தனக்குள் அடக்கி ஒரு நீர்ப்பை என்று சொல்லுமளவிற்கு கருக்கொண்ட கார் மேகங்கள் வானிலே மதியை மறைத்து நீந்திச் செல்கின்றன.

அப்படிச் செல்லும் அவை நீண்டு உயர்ந்த மலையின் முகட்டிலே மோதுவதால் மழையாக மாறி, நீர்த்தாரையாக வடிந்து, ஆறுகப் பெருகி, மண்ணிலே தவழ்ந்து கடலிற் புகலிடந் தேடிச் செல்கின்றது.

அதுபோல மானுடர்களும் உண்டு, மகிழ்ந்து, உணர்வு கலங்கப் புணர்ந்து இல்லாதொழிகின்ற போலி வாழ்க்கையில் சிக்கி உழல்கின்றார்கள்.

அவர்களுக்கு உண்மையான வாழ்க்கை நெறியைக் காட்டுவதற்காகவும் அழிந்தொழிந்த நாடகத் தமிழை வளர்க்கவும் பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மொழி நாடக நுட்பங்களை எடுத்துக்கூறும் மதங்கர் சூழாமணியை அளிப்பதற்காகவும் பூரட்டாதி நட்சேத்திரம் - ஞாயிறு வாரத்திற் பிறந்த விபுலானந்தனே கைகளை ஊன்றி செங்கீரையாடு வாயாக.

அடிகளார் அவர்களது தந்தையின் பெயர்

மல்லிகை விரிய மதுவரி யூத
மாவிருள் புலர மாங்குயில
மண்மிசை மலரும் வசந்தமும் மடியும்
மாய்ந்திடில் மீளா துன்னிளமை
செல்லியர் சேர்க்கை செகந்தனில் சிதைக்கும்
செல்வமும் செழிப்புஞ் சீர்கெடுக்கும்
செல்லரி முதுமை சேர்ந்திடுங் காலம்
செய்வது எதுவெனத் திகைப்பாய்காண்
சொல்லிலா இசையது சோலை பரவுஞ்
சுருதியில் பண்ணென் வாழ்க்கையறி
சுடரா மிறையருட் சுகமே சுகமெனச்
சுவர்க்கத் துறுதியைப் பிறர்க்கோதும்
வல்லா யுந்தை சாமித் தம்பி
வரம்பல பெற்றுன் மானிலத்தே
நல்லாய் வதனம் நகைத்து நிமிர்ந்து
நகர்ந்தே ஆடுக செங்கீரை 3

மல்லிகை மலர்கள் கட்டவிழ்த்துள்ளன. தேனுண்ணும் வண்டினங்கள் இசைக்கின்றன. கவிழ்ந்த இருள் அகல்கின்றது. மாங்குயில் கூவுகின்றது. இத்தகைய கோலாகலத்துடன் உலகத்திலே வசந்தம் அடியெடுத்து வைக்கின்றது. எனினும் அது அதிக காலம் நீடிப்பதில்லை.

உன்வாழ்க்கையின் வசந்தமாகிய இளமைக் காலமும் நீடித் திருப்பதில்லை. வசந்தம் மீளவரும் ஆனால் போன இளமை திரும்புவதே இல்லை.

அக்காலத்திலே அனுபவிக்கும் மாதர்போகமும் செல்வச் செழிப்பும் வாழ்வினைப் போலியானதாக்கி விடுகின்றன. அவ்விளமையைக் கறையான்போல அரிக்கும் முதுமைக் காலமும் விரைந்து வந்துவிடும்.

அப்போதுதான் உன்னைப் பற்றித் திகைப்புறுவாய். சோலையிலே பரந்த சொல்லற்ற சுருதியற்ற இசையாக வாழ்க்கை பயனற்றுப் போனது பற்றிக் கவலுவாய். இறைவனின் திருவடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுகமே உண்மையான சுகம், மோட்சமே உறுதியான வாழ்வு எனவும் உணருவாய் என்ற நிட்சயப் பொருளை உலகத்தவர்களுக்கு எடுத்துரைக்கச் சாமித்தம்பி என்பவரின் தவப்பேறாய் அவதரித்த விபுலானந்தனே புன்முறுவல் காட்டித் தலை நிமிர்ந்து, கரங்களை ஊன்றி செங்கீரை ஆடுக

அன்னையின் பெயர்.

வேறெதுஞ் சுகம்பெற வேண்டாம் வேதம்
விழுமிய பொருட்சுவை வேண்டுவனே
வெறும்வாய் மெல்லென் வேதனின் இருபை
வெள்ளமே விழைந்தேன் நீந்துதற்கே
பேறெலாந் துறந்த பெரியனுய் உயர்ந்து
பெண்மண் பொன்னசை பெட்பறுத்தே
பெருமலை இயமப் பெய்பனிச் சாரலிற்
பேதக மகற்றுந் தவம்புரிந்த
ஏறெலாம் ஏற்று மேந்தலை முத்தமிழ்
எழிலாம் வித்தை ஏற்றிட்டாள்
எண்ணிலாப் பெண்மை இயல்கண ணம்மை
என்றிடும் மங்கை இகந்தனிலே
தேறவே சிலம்பு தெளியிளங் கோவாய்
திக்கெலாம் புகழுறு திருவாகத்
திகட்ட வொருகால் திரும்பி நீட்டி
திகழவே ஆடுக செங்கீரை 4

மறை கூறும் உண்மைப் பொருளின் நயத்தை அன்றி வேறு எவ்விதமான உலக சுகத்தையும் விரும்பேன். இறைவனின் அருட் புனலில் நீந்தித் திளைப்பதற்கே விருப்புடையேன். உலகப் பற்றுக்களை வெறுத்துப் பெண், மண், பொன் ஆசைகளை விட்டு மனிதருள் மாசற் றவனக வாழ்வதற்கே விழைந்தேன் என்று தனக்குள் உறுதிசெய்து கொண்டார்.

அதற்காகப் பனி பெய்கின்ற இமய மலைச் சாரலை அடைந்து தவமியற்றி அஞ்ஞானத்தை அகற்றினர்.

இயலிசை நாடகத் தமிழில் வல்லவனை உன்னைத் தனது உதரத்திற் தாங்கி பயந்தவள் கண்ணம்மை எனும் பெண்ணுட் பெருந்தகை. சிலம்பைத் தந்த இளங்கோவடிகள் போன்று உல கெலாம் புகழுற்ற விபுலானந்தனே ஒருகாலைத் திருப்பி நீட்டி வைத்து அழகாகச் செங்கீரை ஆடுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாலப் பருவப் பெயர்

மாமலர் சூடிடு மாதரா ரோர்பால்
மதியெனு முகமதில் நகைமலர்ந்தார்
மாதவஞ் செய்திடு மாமுனி வோர்பால்
மறையெனும் மலர்தனை மடைசொரிந்தார்
காமரு வாலிபர் காதலைத் துறந்தார்
கடுந்தவக் கற்பனை கற்றுணர்ந்தார்
கடல்புகு வாவிக் கவினீர்க் கன்னியர்
கனிச்சுவைச் செவ்வழிப் பண்ணிசைத்தார்
நாமகள் வாணி நங்கை தமிழினி
நானில முயர்ந்ததென் றுளமகிழ்ந்தாள்
நாடகம் இசையியல் நல்லுயிர் பெறவே
நன்மணி யாழ்கள் நவமுறவே
தாமரை மலரமுன் மொட்டென மொழியுந்
தகைபோற் தம்பிப் பிள்ளையென
தண்பெயர் விபுலா தளிருடல் வளைத்து
தடையற வாடுக செங்கீரை 5

தாமரை விரியமுன்னர் அதனை மொட்டென்று சொல்வார்கள். அதுபோல விபுலானந்தர் அடிகளாகுமுன்னர் அழைத்த இளமைப் பெயர் தம்பிப்பிள்ளை. அத்தகையவரைக் கண்டு மணம்பொருந்திய மலர்களை அணிந்த மங்கையர் ஒருபக்கத்தில் நின்று புன்முறுவலை உதிர்த்தனர். தவஞ்செய்யும் முனிவர்கள் ஒரு பக்கத்திலே நின்று வேதங்கள் எனும் பூக்களை வித்தகன் ஆகிய முத்தமிழ்ப் படையலில் சொரிந்தார்கள் r. காமங்கொள்ளும் பருவத்தினரான காளைகள் உலகாசையை விட்டு விண்பேறு பெறும் நியதிகளைக் கற்கலாயினர்.

மட்டக்களப்பு வாவியில் உறையும் நீரர மகளிர் மகிழ்ச்சி மிக்கு செவ்வழிப் பண்ணைப் பாடினர். கலைவாணியும் இவரால் தமிழ் எனும் மாது தனது அழிந்தொழிந்த இசையுங் கூத்தும் பல்வகை யாழ்களின் பரப்புங் உயிர்கொண்டு உலகத்திலே உயர்வு பெறப்போகின்றுள் என மனக் களிப்படைந்தாள்.

## குழந்தைப் பருவப் பெயர்

வள்ளற் பைங்கொடி வளைகரை மோதும்
வண்டல் மண்நுரை மலராய் மிதக்கும்
வானின் நிறமெலாம் வாவிநீர் காட்டும்
வாழ்கரா சுறுவகி மறைந்தே வாழும்
உள்ளமு மிப்படி உறழ்வுறு கொடிகளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உணர்வினை மறைத்தே உறைவதே யுண்மை
உறுத்திடு வினைகளோ நுரையெனப் படியும்
உள்மலம் மூன்றும் உறழ்ந்து படரும்
அள்ளும் நினைவெலாம் அகம்புறங் காட்டும்
அடங்காத் தீமை அதன்கீழ் உயிர்க்கும்
அவனியி லிவற்று லாம்பயன் பவமே
அதனை அகற்ற அன்புடன் அறத்தை
கொள்ளும் வாழ்வே குறைவறு வாழ்க்கை
கொள்கை என்று குவலய முரைத்தவுன்
குழந்தைப் பெயர்மயில் வாகன மென்பநீ
குனிந்துசெங் கீரை யாடி அருளே 6

மட்டக்களப்பு வாவியின் கரைகளிலே வள்ளற் தண்டுகள் அலையால் மோதுகின்றன. அங்கு வண்டலால் எழும் நுரைகள் அவற்றின்மேற் படர்ந்து மலர்கள் போலக் காட்சி தருகின்றன. வானத்திலே உண்டாகும் பல நிறங்களையும் அதன் கலக்கமற்ற நீர் எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் அதனடியில் மனிதருக்குத் தீமை விளைவிக்கும் முதலைகளும் சுறு மீன்களும் பதுங்கி வாழ்கின்றன.

மனமும் இவ்வாறுதான் பாவக் கொடிகளால் உணர்வுகளை மறைத்து படிந்துள்ளது. நமது அமைதியைக் கெடுக்குந் தரத்த வான பவவினைகளும் நுரைபோல அவற்றின்மீது படிந்துள்ளன. அங்கு எழும் மூன்று மலங்களுக்குங் காரணமாயிருப்பவை அகத் திலே உண்டாகும் கெட்ட எண்ணங்களை வெளிக்காட்டுந் தகைத் தவை. அதுமட்டுமல்ல அடக்க முடியாத் தீவினைகளாகவும் அவை உயிர்கொண்டு கரந்து வாழ்கின்றன.

இவற்றினுல் உண்டாகும் பயன்தான் பாவம். எனவே அதனை அகற்றுவதற்கு அன்பும் அறனுங் கொண்டு வாழ்வதே வாழ்வின் பேருகும். என்று உரைத்த உனது குழந்தைப் பெயர் மயில்வாகனன் என்பதல்லவா. எனவே குனிந்து செங்கீரை யாடுவாயாக.

## ஆரம்பக் கல்வி

அடிபரந் தகன்று அணைகிளை விரிந்த
அரசது தருகுளிர் அருநிழ லடைவோர்
அணைவரும் அதனின் அழகும் பருமனும்
ஆகிய அமைப்பை அறைவரே யன்றி
வடிவுற மரக்கிளை வளைவது போல
வலியுறத் தாங்கும் வன்வே ரறியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வசதியாய் வாழ்ந்து வளம்பல கண்டு
வாழும் வாழ்வே வாழ்வென் றிருப்போர்
பிடித்திடு பாவவேர் பிய்த்திட முடியாப்
பிணைப்பை கொண்டிடு பெருந்துய ரறியார்
பிறவிப் பெரும்பிணிப் பேதக மகற்றி
பெருமான் திருவருட் பேறதை நாட
முடிவிலாக் கல்வியின் முதன்மை அறிந்தோய்
முறையுறத் தமிழில் முளையிடக் கல்வி
முதுபதி காரை முனைந்தநல் யாழோய்
முகமே மலர்ந்துநீ செங்கீரை யாடே 7

அடி பெருத்து அகன்ற கிளைகளால் விரிவுற்றுப் பரந்துள்ள அரச மரம் தருகின்ற தண்ணென்ற நிழலிற் தங்கிச் செல்பவர்கள் அதனின் அழகு, செழிப்பு, பயன் ஆகிய நலன்களைத்தான் கவனிப்பது அல்லாது அதனைப் பிடித்துத் தரையுட் செல்லும் வேர்களையிட்டுச் சிந்திப்பதில்லை.

அதுபோல மனிதருங் குறைவற்ற செல்வத்துடன் வாழ்வதே வாழ்க்கை என்று இருப்பதல்லாது அவ்வாழ்க்கையைப்பற்றி அறுத் தெறியமுடியாத பாவமெனும் வேர்களையிட்டுக் கவலைப்படுவதில்லை.

இத்தகைய பிறவி என்னும் பெரிய நோயின் மனக்கிலேசத்தை நீக்கி, இறைவனின் அருள்பெறும் முத்திவழியை அறிவதற்குக் கல்வி எனுந் தீபம் அவசியம் என்பதை உணர்ந்து, காரைதீவு எனுந் தனது தாயகத்திலே ஆரம்பக் கல்வியைக் கற்ற யாழ்நூல் ஆசிரி யனே முகம்மலர்ந்து செங்கீரை ஆடுவாயாக.

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்

இணைகரம் நிறைய இரப்பவர்க் கிடினும்
ஏற்பவர்க் கன்பிலை எனின்பய னென்னே
இளமை செறிமுகம் இன்மொழி புன்னகை
என்பவை அத்தகை இயல்பா மறியே
பணைகரப் பரமன் பார்தனில் அளித்த
பையுடல் அழகினைப் பரிந்து பெற்றோர்
பார்தனில் அதற்காய் பற்றுறு அன்பைப்
பரிந்திடா விட்டால் பயன்தா னென்னே
துணைவரு பொருட்கள் தூயதாம் உள்ளத்
துறவற வாழ்வும் துயரிலா வன்பும்
துறக்கந் தந்திடு துன்பறு அறமுறத்
துய்த்திடக் கல்வியே துணைசெயு மென்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அணைவுறு குஞ்சித் தம்பியும் வசந்தரும்
ஆங்குரு நாத பிள்ளை களும்
அறிகநல் ரெத்தின மாதிய ஆசான்
அறைவதைக் கேட்டு ஆடுக கீரை 8

இரந்து நிற்பவர்களுக்கு இரண்டு கரங்களாலும் அள்ளி யள்ளி வழங்கினுலும் அதனைப் பெறுபவர்களுக்கு நன்றி உணர்ச்சி கொண்ட அன்பு இல்லாவிட்டால் அதனுல் என்ன பயனுண்டு. அதுபோல இந்த உலகத்திலே இளமை தவழும் வதனமும் இனிய மொழி பேசும் வல்லமையும் புன்னகை சிந்தும் இயல்பும் நமக்குப் பரமன் போதுமான அளவு தந்துள்ளான். அதற்கு நன்றிக் கடனுக அவர்மேற் பக்திகொள்ளாவிட்டால் பிறவிப் பயன்தான் எதுவாகும்.

நமது மறுமைக்குத் துணையாக இருக்கின்ற உண்மைப் பொருட்களும், உள்ளத் தூய்மையுள்ள பற்றற்ற வாழ்வும், மற்றவர் களை இம்சைப் படுத்தாத நேசமும், சுவர்க்கம் எனும் பலனைத் தரு கின்ற பிறரின் இடர்களை நீக்கும் தரும சிந்தையும் மாந்தருக்கு ஏற்படக் கல்விதான் வழிகாட்டும் என்று சொல்வார்கள். இத்தகைய கல்வியை குஞ்சித்தம்பி, குருநாதபிள்ளை. வசந்த ராசபிள்ளை, நல்லரெத்தினம் ஆதிய ஆசிரியர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அவர்கள் சொன்னதைச் செவிமடுத்து செங்கீரை ஆடு வாயாக.

**கல்முனையில் கற்ற ஆங்கிலக் கல்வி**

வாய்த்திடாப் பிறவி வாய்த்ததே என்று
வசுதையில் வீணே வாழ்ந்து கெட்டு
வன்செயல் புரியா வழிதரு கிருபை
வரத்தினுற் பெற்ற வளங்க ளெல்லாம்
காய்த்திடு தருபோற் கனிபலர்க் கீந்து
காசுற வாழ்தலே களிபே ரின்பம்
காமங் குரோதம் கசடு ஆதிய
கழித்துல காள்வதே கவினு று இன்பம்
மாய்த்திடும் ஆணவம் மாற்சரி யமென்னும
மமதை அகற்றியே மனித வன்பு
மலர்வுறக் காட்டும் மாபெருந் தியாக
மகனெளி பரப்பும் மதநெறிக் கல்முனைத்
தூய்மை உவெஸ்லி தொகுத்த வாங்கிலந்
துய்த்திடு பள்ளியிற் தொடர்ந்த கல்வித்
துறவோய் உலகிற் துன்பது நீங்கத்
துள்ளியே செங்கி ரையா டுகவே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிடைத்தற்கரிய மானுடப் பிறவி எங்களுக்குக் கிடைத்து விட்டது என்று சிந்தியாமல் வீணான வழிகளிலே வாழ்ந்து சீரழிந்து போகாது தடுத்து நல்வழி காட்டுவது இறைவனின் திருவருளாகும். இக்கொடையினாலே கிடைத்த வாழ்வின் நற்பேறுகளை கனிதரு விருட்சமாக மற்றவர்களுடன் பங்கிட்டு இலங்கி வாழ்வதுதான் பேரின்ப நிலையாகும்.

காமம் பகை, மனமாசுகள் என்பவற்றை இல்லாதொழித்து உலகத்தைத் தன்வயப்படுத்தலே நல்லின்பமாகும். தானென்ற அகங் காரம், பொறாமை, எனும் தன்மேம்பாட்டை அகற்றி மனித நேயம் என்பது உள்ளத்திலே மலர்தலே பெரிய தியாகமுமாகும்.

அத்தகைய இறைசுதனின் நாமத்திலே கிறித்தமதக் கொள்கைகளை தூதுப்பணி செய்யும் கல்முனை உவஸ்லிமிசன் ஆங்கிலக் கல்லூரியில் அடிகளார் தனது கல்வியை ஆரம்பித்தார். (இக்கல்லூரி காரைதீவில் இருந்து வடக்கில் மூன்று கற் தூரத்தில் உள்ளது) உலகத் துன்பங்களை அகற்றுதற்கு துறவு கொண்ட மதலையே துள்ளித் துள்ளிச் செங்கீரை யாடுவாயாக.

## கயிலாய புராண ஆசிரியரும் அடிகளாரும்

மலரெதும் மலரலாம் மணமெதும் வீசலாம்
மனதிற் கினியது மாண்புறு தமிழே
மருக்கொழுந் தன்ன மணத்தை விஞ்சும்
மதிமிகு சங்கநூல் மணமது அன்றோ
அலரில் நாணு மகத்திணை இன்பம்
அரண்புகுந் தயிலெறி அரும்படைப் புறத்தின்
அழகுறு இதழ்விரி அரும்புட் ததும்பும்
அளவறு மதுத்துளி ஆஞ்சுவை அமுதே
இலையிவர் போலொரு இலக்கண நூலர்
இலக்கியச் சாறு இயம்பிடு வாணர்
எனவே உலகோர் ஏற்றிடு மாறு
இணையறு தமிழின் இனிமை காட்டிய
பலமுடைக் கயிலா யபுராண மென்பனுவற்
படைத்த பருத்தித் துறையூர்ப் பாவலன்
பைந்தமிழ் வைத்திய லிங்க தேசிகர்
பண்பது சொல்லி யாடுக கீரை 10

உலகத்திலே எத்தனையோ பூக்கள் விரிந்து அழகூட்டலாம். அவற்றிற்கேற்ற நறுமணத்தை வீசலாம். ஆயினும் மனதிற்குகந்த அழகும் மணமுமுடையது இன்தமிழ்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மருக்கொழுந்திலும் மணமிக்கது அத்தமிழிற் செய்யப்பட்ட சங்கப் பாடல்கள்தான்.

மற்றவர்களின் பழிதூற்றலுக்கு வெட்கப்படும் காதல் வாழ்வின் களிப்பும், பகைவரின் காவல்களைக் கடந்து சென்று அம்புகளை வீசுகின்ற வீரவாழ்வின் விறலும் எடுத்துக் கூறும் அகத்திணை புறத்திணை எனும் இதழ்களுக்கிடையே பெருகி நிற்கும் தமிழ்த்தேன் எனும் அமுதம் உலகிற் சுவை மிக்கதே.

இவர்போல் தமிழிலக்கண அறிவும் இலக்கிய நயமுரைக்கும் தெளிவும் உடையவர் வேறு எவரும் இல்லை என்று உலகோர் சொல்லுமளவுக்குப் புகழ்பெற்றவரும், கயிலாய புராணத்தின் ஆசிரியருமான பருத்தித்துறையூர் வைத்தியலிங்க தேசிகரின் வழிகாட்டுதலால் தமிழின் சுவை கண்டனை. அவரது பண்புகளைச் சொல்லிச் செங்கீரை ஆடுக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 3வது தாலப் பருவம்.

### (அடிகளாரின் பள்ளிப் பராயம்.)

வெள்ளைநிற மல்லிகையும் வேறெந்தப் பூவுமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனூர் வேண்டுவது
- அடிகளார்

#### ஆங்கிலக் கல்வி

வெள்ளைப் பணிசெய் வெஸ்லிமிசன்
விதையில் ஒன்று கல்முனையில்
விதைமுகம் விட்டே விரித்தெழுந்த
வியன்லீஸ் ஆங்கிலக் கல்லூரி
பிள்ளைத் தமிழின் பெம்மானைப்
பெற்று ஆங்கில வாணியினைப்
பெருமைப் படுத்தும் பேறுற்ற
பேறே பேறும் பேரின்பக்
கொள்ளை யின்பங் கொண்டனையோ
கொந்தார் குழலார் குரவையிடக்
குக்குடங்'கூவிக் குரல்காட்டக்
குயிலாம் வாணி குழலூத
மள்ள ரோதை மத்தளமாய்
மாட்டின் மணிகள் சல்லரியாய்
மயிலாய் துயிலாய் தாலேலோ
மருவுக இமைகள் தாலேலோ 1

அக்காலத்திற் கல்வியைத் தூய நோக்கோடு கற்பித்துவந்த மெதடிஸ்தக் கிறித்தவத்தின் உவெஸ்லி மிசனரியார் பல ஆங்கிலக் கல்லூரிகளை ஆங்காங்கு நிறுவினர். அத்தகைய நிறுவன விதைகளில் ஒன்று கல்முனையில் விருட்சமாக வளர்ந்து லீஸ் ஆங்கிலக் கல்லூரியாகச் சிறப்புற்றது. அதிலே இப்பிள்ளைத் தமிழின் நாயகன் தனது ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்தார். இதனால் அக் கல்லூரி மேலுஞ் சிறப்புற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மயில்வாகனனே பேரின்பத்தின் அளவற்ற களிப்பை அடைந்தனேயோ அதனுற் துயில மறந்தனேயோ. மயிர்குழற்சி மங்கையர் குரவையிடுகின்றனர். சேவலும் கூவி ஓதையிடுகின்றது. குயில் எனும் இசைப்பெண்ணும் குழல் இசைக்கின்றுள். வயலில் உழும் காராளர்களின் ஓதை மத்தளமாகவும் எருதுகளின் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியோசை சல்லரி எனும் கஞ்சக் கருவியாகவும் ஒலிக்கின்றது. இதனைக் கேட்டாவது கண்ணுறங்குவாயாக

## மட்டக்களப்பு சென்மிக்கேல் கல்லூரியிற்<br>கற்றலும் கற்பித்தலும்

நிறத்தால் மனிதர் வேறென்று
நினைக்கும் மனத்தில் அன்பெழுமேல்
நிலைக்கு முறவே உறவாகும்
நிலவுங் கதிரும் நிலைப்பதுபோல்
அறத்தா லன்றே அருள்வளரு
மறிவா மறிவா லறத்தெளியு
மனைத்து முறவே ஐம்பூத
அருங்கலே மட்டுமா நகர்தனிலே
திறத்தால் மேலாஞ் சென்மிக்கேல்
திகழ்கல் லூரித் திருவிடத்துத்
திறனுற ஆறினிற் கற்றறிந்து
தெளிந்த ஆசான் பதவிதனில்
உறத்தே எட்டில் உன்னிப்பதி
னுயரா ருரும் ஆண்டுவரை
உழைத்த களைப்பு உள்ளாற
உன்விழி யுறங்குக தாலேலோ 2

வெள்ளை, கறுப்பு மனித இனங்கள் வேருனவை என்று நினைக்கின்ற மனிதரின் மனதில் அன்பு என்று ஒன்று உண்டாகுமேல் அத்தகைய நிற வேற்றுமைகள் இல்லாதொழிந்துவிடும். அப்போது உண்டாகின்ற மனித நேயமே நேயமாகும்.

நிலவுடன் ஒளி என்றும் பிரியாதிருப்பதுபோல தருமத்துடன் திருவருள் இணைந்துளள்ளது. அதனை அறிந்து கொள்ளுகின்ற போதுதான் மனத்தெளிவு ஏற்படும்.

விஞ்ஞானக் கல்வியை மட்டுமாநகரில் உள்ள தூய சென் மிக்கேல் கத்தோலிக்கக் கல்லூரியில் 1906ம் ஆண்டிலிருந்து கற்ற பின்னர் 1908ம் ஆண்டு தொடக்கம் 1016ம் ஆண்டுவரை ஆசிரியனு [redacted] கற்பித்தார் [redacted]அதனுல் எற்பட்ட களைப்பு நீங்கத் துயில்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அடிகளாரின் கல்வியும் போனஸ் பிதாவின் உறுதுணையும்

மல்லிகை குரவம் மருவிடுகா
மாதவி நீழல் மறைந்திருந்து
மன்மதன் கணைவிட மயக்கமுறு
மாதர் மலைவுறு மட்டுநகர்
எல்லெறி மிக்கேற் கல்லூரி
எய்திய பதினறுமகவை
ஏற்றமாங் கேம்பிரிட்ஸ் சீனியரில்
எழிலுறு தேர்ச்சி இசைகொண்ட
வல்லப முணர்ந்த போனஸ்பிதா
வழியே காட்ட வளமுற்ருய்
வளையா நோக்குடை வாய்மைஉளம்
வகுத்த வுன்தாய் பரஞ்சென்ருள்
செல்வா தாலே தாலேலோ
சிதைத்தாய் மதனைத் தாலேலோ
சிங்கமே யுன்னுற் தேனடு
சிறப்பே யுற்றது தாலேலோ 3

பலவித மல்லிகைகளும் குரவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து அடர்ந்துள்ள சோலையுள், மன்மதன் மறைந்திருந்து தனது பஞ்ச பாணங்களைத் தொடுப்பதால் மங்கையர் காதல் மயக்கு அடைகின்றனர். அந்தகைய அகத்திணை வளமிக்க மட்டக்களப்பில் பிறந்து துறவு கொண்ட மன உறுதி மிக்க அடிகளார் சூரியனின் ஒளிபோல் மிளிரும் தூய மிக்கேற் கல்லூரியில் பதினறு வயதிலே கேம்பிரிட்ஸ் சிரேட்ட தராதரப் பரீட்சையிற் தேறினர்.

அவரின் அறிவு மேம்பாட்டை கண்டறிந்த போனஸ் எனுங் கத்தோலிக்கத் துறவி மேற்கல்விக்கு வழி வகுத்துக் கொடுத்தார். உறுதிமிக்க உளத்தை உன்னிடத்தே உண்டாக்கிய , உனது, தாயும் அக்கால கட்டத்துள் கடவுளின் பாதம் சேர்ந்தாள்.

காமனைவென்ற சிங்கமே உன்னல் மீன்பாடுந் தேனடு எனும் மட்டக்களப்பு மாநிலம் சிறப்புற்றது. எனவே கண்துயில்வாய்.

## தென்கோவைக் கந்தையாப் பண்டிதரும் அடிகளின் தமிழறிவு விருத்தியும்

வேறென் றெண்ணுய் வீட்டெண்ணம்
விழுமிய தூயோய் விண்ணுசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விதையாம் வேதப் பொருளுண்ணி
விழிகள் மூடிட மறந்தனையோ
பேறுகள் கண்டோய் தென்கோவைப்
பெரியார் கந்தையப் பண்டிதரின்
பிழையறு தேன்தமிழ் பிழிந்துண்டு
பெற்றனை முத்தமிழ் பெரும்புலமை
தேறும் மயில்வா கனராகத்
திகழ்ந்தாய் பயிற்சி ஆசானாய்
திறமுறக் கொழும்பிற் பதினொன்றில்
தெளியப் பயின்று உயர்வுற்றாய்
ஊறும் வாயிற் தமிழமுத
முள்ளத் துணர்விற் தமிழ்நறவு
உறவே உறங்காய் தாலேலோ
உலகத் துறவி தாலேலோ 4

உலகின் சுகங்களை நினையாது சுவர்க்க நாட்டமே கொண்ட மாசற்ற மனத்தாய் அதன் கருவாகிய மறைப் பொருளான இறைவனையே நினைந்துருகுவதால் நித்திரையை மறந்தனையோ.

பலவித உலகப் பிரகாரமான சாதனைகளைச் செய்து வெற்றி கண்டவனே, தென்கோவைக் கந்தையாப் பண்டிதர் என்பவர் அளித்த நசையற்ற தமிழ்த் தேனை ஐயந் திரிபறக் கற்று முத்தமிழ் புலமை அடைந்தார்

மயில்வாகனன் எனும் பெயருடன் ஆசிரியனாகப் பயிற்சி பெறுவதற்காக 1911ம் ஆண்டில் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் சேர்ந்து தேறினார்.

உனது வாயிலிருந்து சுரப்பது தமிழ் அமுதம். உள்ளத்தில் ஊற்றெடுப்பது தமிழ்த் தேன். அப்படியிருந்தும் ஏன் கண்துயில மறுக்கின்றனை. உலகப் பற்றற்றவனே கண்ணுறங்குவாயாக.

## விஞ்ஞானக் கல்வியில் வித்தகர்

எந்தவோர் வழியில் வாழ்ந்திடினும்
இப்பெரும் சகமோர் சதமாமோ
எந்தைப் பரம னெழிலடியே
என்றுஞ் சதமென் உணர்விபுலா
முத்தி வழியில் முனைந்திருந்தாய்
முத்தமிழ் தன்னுடன் விஞ்ஞானம்
முடித்தனை வித்துவம் பதினாறில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முயன்று கற்றனே கலேமாணி
அந்தநல் வேளே அருணந்தி
அறிவன் ஞானப் பிரகாசர்
அருமைச் சாலே நண்பர்களாய்
ஆயினர் பதினெட் டாண்டதிலே
மைந்தா வருவாள் தமிழன்னே
மறைத்தமிழ் அமுதப் பாலூட்ட
மலர்ந்த விழியாய் கண்ணுறங்கு
மரகத மணியே தாலேலோ 5

விபுலானந்தா எவ்வாறுதான் உயர்ந்தோ தாழ்ந்தோ வாழ்ந்தாலும் இந்த உலகம் நமக்கு உறுதுணையாவதில்லே. எமது அப்பனுகிய கடவுளின் திருப்பாதங்களே துணைசெய்வ தொன்றுகும் என்று உணர்ந்து அதற்கேற்ற வீடடடையும் மார்க்கத்திற் பற்றுற்ருய்..

அத்துடன் முத்தமிழையும் கற்ருய். விஞ்ஞானக் கல்வியிலும் மேன்மையுற்ருய். 1916ம் ஆண்டில் பொறியியல் வித்துவான் பட்டம் பெற்றதுடன் 1918ம் ஆண்டில் விஞ்ஞானக் கலேமாணியாகவும் ஆயினே. அக்காலத்தில் உந்தன் உடன்சாலே மாணவர்களாக இருந்தவர்களுள் அருள் நந்தி, ஞானப்பிரகாசர் அடிகள் என்பவர் தலே சிறந்த அறிஞர்களாவர்..

தமிழன்னேயின் தவப்புதல்வனே. மலர்ந்த விழியனே. மரகத மணியே இப்போது தமிழன்னே ஞானத் தமிழ்ப் பாலூட்ட வந்து விடுவாள் . கண்ணுறங்குவாயாக.

## மதுரைச் சங்கத் தமிழ்ப் பண்டிதரான முதல் இலங்கை மகன்.

பூவோ பொலிவுறு பூமுலேயோ
பொசிதேன் பலாவின் வடுவென்னும்
போலியாம் மாற்றங் காயாகிப்
பொருந்திடு கனியாய் முதிர்வதுபோல்
பாவோ ரறியாய்ப் பக்குவத்தே
பவக்கனி படர்ந்து பாழ்படுத்தி
பதைக்க நரகென் படுகுழியில்
பலியே இடலே நினேந்தனேயோ
நாவோர் மேவும் நல்மதுரை
நற்தமிழ்ச் சங்க நாவலர்கள்
நயமுறு தமிழை உணிற்கண்டார்
நல்கினர் பண்டித நனிமதிப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மோஹர் இலங்கை முதல்மணியாய்
முதிர்ந்தனை பதினுருண்டினிலே
முனிவா பயமேன் உளம்வெருத்த
முகையே உறங்காய் தாலேலோ 5

இது பூவா அல்லது பூமொட்டா என்று நாம் சந்தேகப்படும் பலா வடு அதன் போலித்தன்மையை விட்டு பிஞ்சாய்க் காயாய் பின் கனியாக முதிர்ந்து விடும்.

அதுபோல பாவலர்கள் கூட அறியாத பக்குவமாக நமக்குள் பாவம் வளர்ந்து, பழுத்து நமது வாழ்க்கையைப் பாழ் செய்துவிடும். அதுமட்டுமல்ல நரகம் எனுப் பாதாளத்திற் தள்ளிப் பலியிட்டும் விடும். இதனையிட்டு நினைந்து கண்ணுறங்காது இருக்கின்றனையோ.

நாவலர்கள் குழுமும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே 1916ம் ஆண்டில் உள் தமிழறிவைக் கண்டு பண்டிதர் எனும் பட்டமும் அளித்தனர். அதனுல் மோனம் மிக்க புத்தரின் போதம் துலங்கும் இலங்கை நாட்டிலே முதல் முதலாக அச்சிறப்புப் பெற்ற தமிழ் மகனுகவுஞ் சிறந்தாா்.

உலக பாசங்களை முனிந்தவனே. வெள்ளை உள்ளம் படைத்த தமிழ்மொட்டே. எதற்காக அஞ்சித் துயிலாது இருக்கின்றனை. அச்சம் வேண்டாம் கண் துயில்க.

விபுலாநந்த அடிகளும் யோக சுவாமியும்

உள்ளக் கவலை உருவாக்கு
முதவாப் பாசங் கண்டஞ்சி
உலகை ஒறுத்திட உள்ளினையோ
உருட்டும் விழிகள் உறக்குமுரு
கள்ளக் கவலை தனைமாற்றக்
கருதினை அதனுல் யோகனவன்
களிந்தே கண்டான் கருணை கொண்டு
கரத்தால் தாங்கி உனைத்தேற்றிப்
பிள்ளாய் உனக்கேன் புவிப்பயங்கள்
பொல்லாப் பில்லை முற்றுண்மை
போதோ முடிந்தது யாமறியோம்
போத மிதுவெனப் புகன்றிதனை
மெள்ள மனதிற் கொண்டவனே
மெல்லவே வெருட்டும் [redacted]
மெலிக்க யோகன் வந்திடுவான்
மெட்டுதல் விடுவாய் தாலேலோ 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனதிலே எழுங் [redacted] உண்டாக்கும், ஒருபோதும் துணை செய்யாத உலக பந்த பாசங்களை கண்டு அஞ்சி, இந்த உலகை வெறுத்துவிட நினைத்து உறங்காது இருக்கின்றனையோ.

அப்படியான மாயக் கவலையை அகற்ற யோக சுவாமிகள் வந்தார். உன்னைத் தனது கைகளாற் தூக்கித் தாங்கி தேற்றி, மகனே உனக்குப் புவிப்பய மெதற்கு. ஒரு பொல்லாங்கும் இல்லை. எல்லாம் உண்மை. அது மட்டுமல்ல எப்பவோ முடிந்து போனவைகள். எதையும் யாம் அறியோம். என்ற தத்துவத்தைச் சொன்னார்

அதனைச் சிந்தையிற் கொண்டு இடையிடை வந்து வெருட்டு கின்ற உலகப் பந்தமான நரியை விட்டுவிடு. யோக சுவாமிகள் வந்து விடுவார். அஞ்சாதே துயில்க.

**குமாரசாமிப் புலவரும் நவநீத கிருட்டின பாரதியாரும் அடிகளாரின் தமிழ் வளத்தைப் பெருக்கினர்.**

கமலத் தடியிற் சேறிருந்தும்
கவையறு சுகந்த மணம்பரப்பிக்
கதிரோன் வரவாற் கட்டவிழுந்து
கடவுளின் பூசைக் குருகதையாம்
முமலஞ் சூழு மிதயமெனும்
முகையும் முதல்வனற் கட்டவிழ்ந்தால்
முனையும் பவவினை நெடிவீசா
முக்தியாம் வீட்டில் முருகுபெறும்
அமல னருளைக் காட்டுவபோல்
அளிநிகர் விழியைச் சுழற்றுகின்றாய்
அறிந்தனை ஐந்தமிழ் ஆசானெனன்
அங்குமா ரசாமிப் புலவரிடம்
நிமலன் நவநீத கிருட்டினனார்
நின்செவி தமிழ்த்தேன் நிரப்பிவைத்தார்
நிமுற்றுங் கரந்தைக் குடநிழலில்
நின்விழி உறங்குக தாலேலோ 8

தாமரை மலருக்கு அடியிலே கெட்ட நாற்றம் மிகுந்த சேறுஞ் சகதியும் இருந்தாலும், சூரியனின் உதயத்தால் மலர்ந்து நல்ல மணம் பரப்பி இறைவணக்கத்திற்கு ஏற்றதாகுகின்றது.

ஆணவம் கன்மம் மாயை எனும் மூன்று மாசுகளும் நிரம்பிய இருதய மொட்டும் இறை வழிபாட்டால் மலர்ந்தால், பாவத்தின் கெட்ட மணம் வீசாது, சுவர்க்கபதியை அழகுஞ் செய்யும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீ இறையின் திருவருளை எங்கே பெற்ருய் என்று பிறர்க்குச் சொல்வது போலக் கருவண்டன்ன கண்களைப் பலபக்கமும் சுழற்றிக் காட்டுகின்ருய். தண்டியலங்காரம் யாப்பருங்கலக் காரிகை என்ப வற்றிற் தேர்ந்த குமாரசாமிப் புலவரும், நவநீத கிருட்டின பாரதி யாரும் உனக்குத் தமிழின் சுவையை ஊட்டி வைத்தனர். இதன் பேருக கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உயர் மதிப்புப் பெறுமளவிற்கு உயர்வடைந்தனை. எனவே இன்னுமேன் கவலை. கண்ணுறங் குக.

படைப் பயிற்சி பெற்ற அடிகளார்.

உத்தமன் பதிகொள உலகாசை
உரிந்திடத் தவம்புரி உணர்வோடு
உரமுறு பயிற்சி பெற்றும்நீ
உய்ந்தனை விண்பெறு உயர்வீரம்
யுத்தத் திறன்கொள் ஊகமறி
உயர்படைக் கலன்கள் தாங்கிக்கள
முற்றனை பதிஞல் உருளாண்டில்
உளப்பிறழ் வழிக்கும் உருவுற்ருய்
வித்தகா விபுலா ஆனந்தனே
விசிட்டமார் நகைய்யாய் மேதிநிறை
விளைவயல் சொரிபால் கன்னலுடன்
வேண்டிக் கலந்து சங்கூற்றி
சித்தானைக் குட்டி செறிந்தூட்டச்
சிலம்புடன் வந்தான் சிறுமலரே
செந்தமிழ் சுரக்க மாந்திடுவாய்
செல்வா துயில்க தாலேலோ 9

இறைவனின் பதியை அடைவதற்காக உலகப் பற்றை உரிந் தெறியும் உறுதியுள்ள உள்ளத்தோடு தவப் பயிற்சி பெற்று வானகர் செல்லும் வன்மை படைத்தாய்.

அதே வேளையில் மண்ணசையுடன் மன்னவர்கள் பொருதும் படையிற் சேர்ந்து, யுத்த கலன்களைத் தாங்கி இராணுவப் பயிற்சியும் 1914ம் ஆண்டிற் பெற்றனை.

அறிஞனே, பற்றற்றவனே, அதனுற் களிகொள்பவனே. மேன்மைகொளும் நகைமுகைத்தாய், நெல் விளையும் வயல்களில் மேயும் எருமைகள் சொரிகின்ற பாலுடன் அங்கு வளரும் கரும்பின் சாறுஞ் சேர்த்து சங்கிலே ஊற்றி காரைதீவில் வாழ்ந்த சித்தானைக் குட்டி எனும் சித்தர் வந்து உன்பசி தீர்ப்பார். சின்னப் பூவே, சிலம்பின் சுவையென்ன அதனை உண்டு கண் துயில்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடிகளாரின் பன்மொழிப் புலமை

வேண்டுவ இறைவனின் வீடாகும்
விழைந்திதை வாழ்தலே நல்வாழ்வு
விரித்திதை உரைக்கும் வேதவொளி
விஞ்ஞா னத்துடன் விளக்கமுற
வேண்டியாங் குதவிடு பன்மொழிகள்
விரும்பிக் கற்றனை வேதமுறை
வியன்மொழி சமத்தம் லத்தீனும்
விரித்துணர் பாளி சிங்களமும்
நீண்டுயர் ஆங்கிலம் நெறியரபு
நிலைமொழி யவனம் பிரஞ்சுசீனம்
நிறைவுள முத்தமிழ் கற்றறிந்து
நெடும்பணி செய்திட முனைகளைப்போ
மாண்டொழி மாந்தர் மறையமுன்பு
மறையறிந் துலகின் மருளகற்றி
மலரடி சேரும் வழிகாட்டும்
மறைக்கண் துயில்க தாலேலோ 10

உலகத்தில் வேண்டுவது சுவர்க்கபதி சேரும் வினைதான். இதனை அடையத் தக்கதாக வாழ்தலே நல்ல வாழ்வாகும். இந்தத் தத்துவத்தை மெஞ்ஞான ரீதியாக மாத்திரமல்ல விஞ்ஞானத்தின் ரீதியாகவும் எடுத்து விளக்குவதற்காக உலகின் சிறப்பான பல மொழிகளைக் கற்றறிந்தனை.

சமஸ்கிருதம், லத்தீன், பாளி, சிங்களம், ஆங்கிலம், அரபு, கிரேக்கம், பிரஞ்சு, சீனம், முத்தமிழ் என்பன அவற்றுட் சிலமொழி களாகும். இப்படிக் கற்றதால் இறை வழிகாட்டும் பணி செய்வது உனக்கு இலகுவாயிற்று.

அதனல் ஏற்பட்ட களைப்பினல் கண்ணுறங்காது இருக்கின் றனையோ. இறக்கும் நியதி உள்ள இந்த மானுடப் பிறவி அழிந்து போகமுதல் வேதப் பொருளை அறிந்து, மாயையை அகற்றி இறைவனின் பாதஞ் சேரவழி காட்டும் விழியானே துயில்வாயாக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 4. சப்பாணிப் பருவம்.

### அடிகளாரின் ஆசிரியப் பணி

காப்பவிழ்ந்த தாமரையோ
கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ

- அடிகளார்

### கத்தோலிக்க பாடசாலைகளில் ஆசிரியப் பணி

காப்பைக் கரத்திற் தான்சூட்டிக்
கருணை யமுதைச் சுரந்தூட்டி
கவிகள் பாடித் தாலாட்டிக்
களித்த வுன்தாய் காலன்வாய்த்
தோப்பில் நுழைந்தாள் துயர்மிக்குத்
துறவோர் துறக்கம் எனத்திகழ்ந்து
துன்ப மகற்றுந் தூயமிக்கேல்
தொல்கல் லூரி தனிலுறைந்து
கூப்பித் தொடர்ந்த ஆசிரியக்
குறையில் பணியை பதினொன்றில்
குற்றமில் கல்முனைக் கதலிக்கு
குருமார் பள்ளியில் புரிந்தனையே
வேப்பின் நிழல்சேர் வெண்மணலில்
விரித்திடு பட்டில் வீற்றிருந்து
விபுலா கொட்டுக சப்பாணி
விரைவாய்க் கொட்டுக சப்பாணி 1

மருங்கைமணி எனும் காப்பை உனது கையிலே அணிந்து நோய்தடுத்தும், அன்பைத் தனது சுரக்கும் பாலுடன் ஊட்டியும், கவிகளை இசைத்துத் தாலாட்டியும், ஆனந்தமுற்ற தனது அன்னையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடிகளார் 1911ம் ஆண்டில் இழந்தார். இதனுற் சோகமுற்ற அடிகளார் துறவிகளின் துறக்கமென்று சொல்லுந் தகையுடைய மட்டக்களப்பு சென் மிக்கேல் பாடசாலையில் சேர்ந்து ஆசிரியனுனர். அதன் பின்னர் கல்முனையில் உள்ள கத்தோலிக்கப் பாடசாலையில் ஆசிரியரானுர்.

வெண்மணற் தரையில் வேப்ப மர நிழலில் விரித்த பட்டுத் துணியில் இருந்து விபுலானந்தனே சப்பாணியை விரைவாகக் கொட்டுக.

## கொழும்பில் ஆசிரியராகப் பணிசெய்தல்

அவிழும் முகைகள் மணம்பரப்ப
அணையுங் காதலர் மணம்வேட்க
அசையுந் தென்றல் மெய்சிலிர்க்க
அசையா நினதுள மமைதிபெற
கவிழுங் கார்முகில் சுனைநிரப்பக்
கயல்பாய் வாவி கவிரெழுப்ப
களப்பெனும் பரப்பு கட்டறுக்க
கல்வியு மதுபோற் கரைதேடி
குவிழுங் கொழும்பிற் குருப்பயிற்சி
கொண்டிடு சாலை ஒளிபெற்று
குன்றென நின்ருய் சென்மிக்கேல்
குருகுலந் தனிலே மீண்டுமுற்று
அவிழும் மலரா யீராண்டு
அறிவெனும் நறுமண அலைபரப்பி
ஆக்கம் புரிந்தாய் அன்னைநில
மமர்ந்தே கொட்டுக சப்பாணி 2

மலரும் மொட்டுகள் நறுமணத்தை வீசுகின்றன. இணைந்த காதலர்கள் திருமணஞ் செய்து கொள்கின்றனர். அசைத்துச் செல்லும் தென்றல் உடம்பைச் சிலிர்க்கச் செய்கின்றது. இவற்றிற் கெல்லாம் இடங்கொடுக்காத அடிகளாரின் மனதிலே அமைதி தவழ்கின்றது.

வானிற் சூழும் கார்கொண்ட மேகங்கள் ஆங்காங்குள்ள நீர்நிலையங்களை நிரப்புகின்றன. மட்டக்களப்பு வாவியும் இதனுற் பெருக்கெடுக்கின்றது. பாயும் கயல்மீன்கள் இரவில் அங்கு எழும் ஒருவித கவிர் எனும் ஒளியைச் சிந்தச் செய்கின்றன. இதுபோலவே அடிகளாரின் கல்வி வேட்கையும் அதிகரிக்க சனங்கள் நெருங்கி வாழும் கொழும்பு நகரத்தில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயின்று மீண்டும் மட்டக்களப்புச் சென் மிக்கேற் கல்லூரியில் ஆசிரியராக இரு வருடங்கள் பணி செய்தார்.

இத்தகைய சாதனைகளைப் புரிந்த அடிகளே உனது தாயக மண்ணில் அமர்ந்திருந்து சப்பாணி கொட்டுவாயாக

## விஞ்ஞானக் கல்வி கற்றலும் கற்பித்தலும்

தாமரை மலர்வா ழிருமகளிர்
தருவ ருலகின் பெருவாழ்வு
தரள வெண்மை யாள்கல்வி
தகைசெம் பவளத் தாள்நிதியம்
பாமரம் வறுமைப் பற்றிமக்கள்
பழுதுரு வண்ணம் வாழ்வதற்கு
பண்புறு கல்வியும் தொழிற்துறையும்
பாரில் உதவு மெனவுன்னி
காமருங் கல்வியைக் கற்றிடற்காய்
கடிநகர் கொழும்பிற் கால்பதித்து
கவின்பொறிக் கல்விக் கல்லூரி
கரைகடந் தாங்கே கற்பித்தாய்
நாமரும் வேதியற் பொருளுணர்ந்து
நற்றமிழ் நடையில் அதையுரைத்தாய்
நல்லன வல்லா நாடாத
நாயகா கொட்டுக சப்பாணி 3

முத்தன்ன வெண் நிறத்துத் தாமரையில் வாழும் கலைமகள் கல்விச் செல்வத்தையும்,பவளமன்ன செந்நிறத்துத் தாமரையில் வாழ் திருமகள் பொருட் செல்வத்தையுந் தருவாள்.

அறிவின்மையும், வறுமையும் மக்களைப் பற்றிப் பாழ்செய்யா திருப்பதற்கு வாழ்க்கையின் பண்பைத் தருகின்ற அறிவுக் கல்வியும், சீவனோபாயத்திற்கு உதவும் தொழிற் கல்வியும் உதவும் என்பதை மனதிற் கொண்டு, அத்தகைய தொழில் நுட்பக் கல்வியைக் கற்பதற்காகக் கொழும்புப் பொறிக் கல்வியிற் கற்றுத் தேறினை.

அதுமட்டுமல்ல அங்கேயே பொறிநுட்பவியல் கற்பிக்கும் ஆசிரியனாக நியமனம் பெற்று கற்பித்ததுடன், ஆங்கிலத்திலேயே இருந்து வந்த விஞ்ஞானக் கருத்துகளைத் தமிழிற் சொல்லித் தமிழுக்கு வளமூட்டினை. என்றுமே நல்லன அல்ல என்று கருதும் எதனையும் சிந்தையாற் கூட நாடாத ஞானத் தமிழறிந்த தலைவனே சப்பாணி கொட்டுவாயாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதியியல் நூல் கற்பித்தல்.

கழுநீர்க் கங்கை கனைத்தோடுங்
கருணைக் கடலாம் புத்தருறை
கவின்மணி விகாரம் நிலவூட்டும்
கலமுறை துறைமுகங் கலகலக்கும்
பழுவுடன் மாந்தர் பகல்போக்கும்
பதியாங் கொழும்பில் அரசினரின்
பாலனப் பொறிதேர் பள்ளியிலே
பஞ்ச பூதப் பண்புரைக்கும்
வழுவிலா வேதி நூல் ஆசானாய்
வல்லாய் கணிதக் கலைவிரித்து
வந்தனை பதினேழ் வருடத்தே
வகுப்பார் வகுத்தார் வல்லோனாய்
தொழுவத் துறையு மாவினங்கள்
தொழுதே அம்மென விறைபோற்றும்
தொல்பதி காரை மண்ணிருந்து
துயோய் கொட்டுக சப்பாணி 4

அரிசியைக் கழுவிய தவிட்டு நீரையொத்த செந்நிற நீர் ஓடுவதால் கழுநீர்க் கங்கை என அழைக்கப்படும் கழனி கங்கை அருகில், அன்பே உலகிற் பெரியதென்று போதித்த புத்தரின் விகாரைகள் உள்ளன. வெண்ணிறங்கொண்டு உயர்ந்த அந்த விகாரங்கள் தன்னிலே பாயும் மதியொளியைப் பிரதிபலித்து மேலும் நிலவை எறிக்கச் செய்யும்.

கடற் கப்பல்கள் வந்து ஏற்றுமதி செய்வதாலும், இறக்குமதி செய்வதாலும், பயணத்திற்கான பொருட்களைப் பெற்றுச் செல்வதாலும் அவை தரித்து நிற்கும் துறைமுகம் இரவு பகலாகக் கலகலப்பாகச் சந்தடியாக இருக்கும்.

வேலைப் பழுவுடன் மக்கள் பகல் வேளையைப் போக்குவர். இத்தகைய சூழல் நிறைந்த கொழும்பு நகரத்தில் உள்ள விஞ்ஞானக் கல்லூரியில் 1917ம் வருடத்தில் வேதியல் கற்பிக்கும் ஆசிரியனாகிப் பணி புரிந்தனர், அக்காலத்தில் உனது கற்பிக்குந் திறத்தை வகுப்பு மாணவர்கள் வியந்து கற்பிப்பதில் வல்லவனென்று போற்றினர்.

காலைகண்டு மாட்டுத் தொழுவங்களிலே உறையும் பசுக்கள் அம்மென அழைத்து ஆண்டவனை போற்றுகின்ற காரைதீவின் மண்ணிலே இருந்து சப்பாணி கொட்டுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாழ்நகர் சம்பத்திரிசியார் கல்லூரியில் கற்பித்தல்.

தொடைபல வணிந்தும் புகழேணித்
தொலைவினைத் தொட்டுந் துகளுறுதாய்
தொகைபடு தமிழ்நூற் தொல்சுவையை
துய்த்தழை விருப்பால் யாழ்நகரில்
கொடைவளக் கல்விக் குருகுலமாம்
குன்றுத் தூய்சம் பத்திசிரியார்க்
குரவனுய் வேதிநூல் விரிவுரைகள்
குறையற வூட்டிய கோளரியே
மடையெலாங் கெழிறு பாய்ந்தோடி
மதகினில் மோதிநற் குரலெழுப்ப
மலர்ந்த ஒட்டி மகிழ்ந்தாடும்
மட்டக் களப்பின் மாண்புதனை
எடையிடு நிறுகல் லாயினையே
எடுத்தனை அப்புகழ் நிமிரிமய
மெழுவரை தமிழ்த்தாய் தலைநிமிர்ந்தாள்
எங்கோன் கொட்டுக சப்பாணி 5

பல காரியங்களிலும் சிறந்து புகழேணியின் உச்சத்திற்குச் சென்றாலும், அறிஞர் குழாம் ; பல புகழ் மாலைகளை அணிவித்துப் பாராட்டினாலும் மன மேட்டிமை எனும் , மாசுருதவர். , [redacted]

பண்டைத் தமிழ்நூற் சுவைகளை சுவைத்தறிய வேண்டு மென்ற விருப்புற்று அதற்குகந்த இடம் தமிழ் மணங்கமழும் யாழ்ப்பாணமே என்று நினைத்து அங்குள்ள தூய சம்பத்திரிசியார் கல்லூரியில் வேதியியல் ஆசானகப் பணிசெய்தார்

தண்ணீர் பாயும் வாய்க்கால்களில் கெழுற்று மீன்கள் நிறைந் தோடி அங்குள்ள மதகுகளைக் கடந்து செல்ல முடியாது மோதிக் குரலெழுப்புகின்றன. அதை இசையாகக் கருதி தண்ணீரின் மேலே தலை நிமிர்ந்து மலர்ந்துள்ள ஒட்டி மலர்கள் நடனமிடுகின்றன.

இத்தகைய மட்டக்களப்பின் மாட்சியை மற்ற நாட்டவர்கள் எடையிடுவதற்கு ஒரு எடைக் கல்லாக விளங்கினுர்

அதனுல் தமிழின் புகழ், ஊழியூழியாய் நிலைத்து உயர்ந்து நிற்கும் இமயமலை வரையும் பரந்தது. தமிழன்னையும் தலை நிமிர்ந்து தனது பண்டைப் பெருமைகளை பல மொழிகளிற் பரப்பி சிறப்புற்றுள். அத்தகைய எங்கள் இராசாவே உனது செங்கரங் களாற் சப்பாணி கொட்டுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பிற்கால அரசியல் மேதை செல்வநாயகத்தின் நட்பு

, மாப்பிளைக் கேற்றநன் மலரெதுகாண்
மனமெனுந் தூய மலரன்றி
மானிலத் தெப்பிற மலருண்டோ
மாந்தரே சொலுமென மலர்ந்தார்காண்
காப்பறச் சுதந்திரக் கட்டீழக்
காளையர் 'விழித்து மொழிகாக்க
கரிகொல் லுழுவைத் தமிழ்த்தந்தை
காமரு செல்வ நாயகமும்
முப்புறு யாழ்நகர் மெதடித்த
முதிர்நிலை மத்தியக் கல்லூரி
முன்னு ளாசாற் பணிபுரிந்த
முருகுறு காலம் அடிகளவர்
தோப்புறு சம்பத் திரியாரதிலே
தொடர்பணி புரிந்தமாத் தூயவனே
தோதற இம்மை முனிந்தவனே
தோயக் கொட்டுக சப்பாணி 6

ஆண்டவனை வணங்க எந்தமலரைச் சாத்தலாம் என்பதற்கு எம்முள்ளமெனும் வெள்ளை மலர்தான் உகந்தது,அதைவிட உலகில் வேறு எந்த மலர்களும் இல்லை என எடுத்துரைத்த விபுலானந்தர் சோலைகள் சூழ்ந்த சம்பந்திரியார் கல்லூரியிற் கற்பித்தார்.

அடிமைத் தளையை அகற்றிச் சுதந்தரமான ஈழத்தைப் பெறுவதற்கு தமிழிளைஞர்கள் விழிப்புணர்வு பெறுவதற்காக, யானையைப் புலி எதிர்ப்பதுபோல சிங்கள அரசை எதிர்த்து தமிழ் மொழி காக்கும் சத்தியாக்கிரகம் ஆதிய மனுநேய போராட்டங்களை நடாத்திய ஜே. வி. செல்வநாயகம் என்பவர் பக்கத்திலே உள்ள மெதடிஸ்த கல்லூரியில் ஆசிரியராகப் பணிசெய்துகொண்டிருந்தார். இதனால் சமகாலத்தவர்களான இவர்களிடையே நட்பு அரும்பியது. இம்மைக்குரிய தீமைகளை ஒறுத்த முனிவனே இரு கரங்களும் ஒன்றோடு ஒன்று சேரச் சப்பாணி கொட்டுக.

## யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பணிசெய்தல்

வந்தவ ரெல்லாம் வையகத்தில்
வந்திடு கருமம் தனைமுடித்தே
வனருகக் குவிவாய் வலியன்கை
வசமுற் றிழிந்து மறைந்தனர்காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொந்தமும் பந்தமுஞ் சுகவாழ்வுஞ்
சொர்ப்பன மெனவே சோர்ந்துவிடும்
சொல்லாட் டெல்லாம் அயர்ந்துவிடும்
சொர்க்க நினைவே நிறைந்துவிடும்
இந்தவோர் நீர்மை வருமுன்னே
இறுவாய்த் துறவா லிறைகண்டாய்
இலங்குமா னிப்பாய் இருவருடம்
இந்துக் கலையகத் ததிபதியாய்
முந்துறப் பணிசெய் முனிவாயுன்
முருங்கை நிகர்க்கும் மொட்டதரம்
முழுமதி வதன மொய்மலரில்
முகிழக் கொட்டுக சப்பாணி 7

உலகத்தில் வந்து பிறந்தவர்கள் யாவரும் தாங்கள் இங்கு வந்த ஏதோ ஒரு காரணத்திற்கான வாழ்க்கையை முடித்துவிட்டு தாமரை மலர் குவிவதுபோல காலனின் கரத்துள் வலியிழந்து மறைந்துவிடுவர்.

அப்போது சொந்த பந்தங்கள் சுகவாழ்வு என்பவையாவும் கனவுபோல இல்லாததாகிவிடும். வாய்ச் சொல்கூட வலியிழந்து விடும். அப்போதுதான் மறுமைபற்றிய எண்ணமும் வீட்டுப் பேறடைதல்பற்றிய விழைவும் மனதில் நிறையும்.

இந்த இறுதிநிலை வரும், இடர்தரும் என்ற உண்மை யுணர்ந்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக துறவறத்தை மேற்கொண்ட விபுலானந்தர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்று அங்கே இரு வருடங்கள் பணிசெய்தார்

அத்தகைய அருந்தவனே உனது முருக்கம் பூவொத்த இதழ்கள் மதிபோன்ற வதனத்திற் மலர சப்பாணி கொட்டுக.

### அண்ணாமலைப் பல்கழகத்தின் அழைப்பு

வாய்த்த காலம் வறிதாகும்
வலியன் வரவும் விரைவாகும்
வந்திடு வேளைதனக்காகும்
வழிகள் தேர்தலே வாழ்வென்று
ஆய்ந்தாய் நூல்பல் லாயிரமாய்
அறிஞா முப்பத் தொன்றினிலே
அருந்தமிழ்த் துறையிற் பணியாற்ற
அண்ணா மலையின் அழைப்பேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காய்த்த கனித்தரு வெனவிலங்கும்
கலைவளர் பல்கலைக் கழகத்தில்
கன்னித் தமிழவைப் பேராசான்
கடமை தாங்கித் தமிழாய்வை
பாய்த்த தமிழகப் பட்டாங்கின்
பரப்பி லெங்கும் பரந்திடச்செய்
பங்கயக் கைகளைக் கொட்டாயோ
பைந்தமிழ்ச் சப்பாணி கொட்டாயோ 8

உலகத்தில் வாழக் கிடைத்துள்ள காலம் சிறிது. அதனைக் கவர்ந்து செல்ல இயமனது வருகையும் அண்மிவரும். அத்தருணத்தில் வாழ்வின் உறுதிதரும் உண்மைப் பொருளெது என்று அறிவதற்காக அடிகளார் பல நூல்களைக் கற்றறிந்தார்.

அறத்திலும் துறவிலும் அறிஞனை அவரது அரும்புகழைக் கேட்டு தமிழக அண்ணாமலைப் பல்கழகத்தவர்கள் 1931ம் ஆண்டு தமிழ்த்துறையில் பணிசெய்வதற்கு அழைப்பு விடுத்தனர்.

அதனை ஏற்ற அவர் முதன்முதல் தமிழ்த்துறையை உண்டாக்கி அதன் பேராசிரியராக விளங்கினர். தமிழாய்வு எனும் ஒரு புதிய அமைப்பை ஆரம்பித்து தமிழின் பெருமைகளை எங்கும் பரந்திடச் செய்தார்.

அத்தகைய அடிகளே உமது தாமரை மலர்போன்ற கரங்களை விரித்துச் சப்பாணி கொட்டுக.

**இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தோற்றம்.**

மலர்க்கா வளைத்து மகாவலிபாய்
மலைவளஞ் சூழ்வேய் புதரிடையே
மதஞ்செறி வேழம் மறித்துநிற்க
மந்திகள் தாவிப் பந்திசெயும்
புவர்மா லையிலே புள்ளீட்டம்
புயலெனப் புடைத்து விரைந்தோடும்
புதுமை இலங்கைப் பல்கழகம்
புகழ்நாற் பத்து மூன்றுண்டில்
நலங்கார் தமிழ்த்துறை ஆக்கிவைத்து
நற்பே ராசான் பதவியுற்று
நலிவிலா துழைத்து நாற்றிசையும்
நற்றமிழ் மொழியின் நாகரீகம்
பலரு மறியப் பணிசெய்தாய்
பண்ணு மிசையும் பல்லியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்டைக் கூத்தும் பரந்தநெறி
பாரிற் தெரித்தாய் கொட்டுகவே 9

மலர்ச் சோலைகளை வளைத்து வளைந்து மகாவலி நதி பாய்கின்றது. மலைவளத்தைக் காட்டும் மூங்கிற் புதர்களிடையே மதயானைகள் தம்மை எதுவுமே கடந்து செல்லமுடியாதவாறு மறித்துத் தடை செய்கின்றன. ஆயினும் குரங்குகள் மரத்திற்கு மரம் பாய்ந்து வரிசை செய்கின்றன.

வாட்டத்தைத் தருகின்ற மாலை வேளையில் தமது கூடுகளுக்குத் திரும்பும் பறவைகள் புயல்போல ஒலியை எழுப்பி விரைகின்றன.

இத்தகைய இயற்கை வளஞ்சூழ் பெரதெனியா எனுமிடத்தில் அமைந்துள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தினரின் வேண்டுகோளை ஏற்று 1943ம் ஆண்டில் தமிழ்த்துறையை ஆரம்பித்து அதன் பேராசிரியராகப் பணி செய்தாய்.

இதனல் தமிழின் பெருமையும் தமிழிசை வளமும் நாடகத் தமிழ் நயமும் இசைக்கருவிகளின் இயல்புகளும் உலகின் பல பக்கங்களிலும் பரக்கச் செய்த விபுலானந்தனே கைகொட்டுக.

## இருள் நீக்கும் கல்வியொளியைத் தனது கடனுகக் கொண்ட அடிகளார்

எதுநற் பாதை யெனவறியா
திகைக்கும் வேளை நல்வாசா
னிருள்சே ரறிவிலா மனக்குகையி
லிலங்கு மறிவா மொழியேற்றி
இதுவுன் செலவெனு மியலூட்டி
இடரதவிர்த் திருமை வழிகாட்டி
இடித்தும் வருத்தியு மிடுங்கல்வி
இருள்மனம் ஒளிசெய் இரவியதே
அதுவே என்கடன் எனவுணர்ந்து
ஆற்றினை ஆசான் பணியேற்றே
ஆகம் மிகமிக நலிந்தாலும்
அகமே தளர்வுறு அண்ணலன்றே
மதுசேர் மலரில் வண்டூதி
மகிழும் வண்ணம் நகைசிந்த
மனதின் மலர்ச்சி முகம்நிறைக்க
மகிபா கொட்டுக சப்பாணி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலகத்திற் பிறந்தவர்கள் வாழும் வழி எது என்று திகைக்கும் போது, நல்ல ஆசிரியன் அஞ்ஞான இருள் சூழ்ந்த மனக் குகை யிலே அறிவு எனுந் தீபத்தை ஏற்றி வைத்து இதுதான் நீ செல்ல வேண்டிய பாதை என்று இம்மை மறுமைகளை உணர்தற்கான பாதையைக் காட்டுவதற்காக இடித்துரைத்தும்.கற்குக கற்குக என வருத்தியும் தருகின்ற கல்வி மனவிருளைப் போக்கும் தீபமாகும்

இத்தகைய கல்விப் பணியே நான் உலகினர்க்குச் செய்ய வேண்டிய கடன் என்று உறுதிகொண்டு ஆசிரியப் பணியாற்று வதிலே ஆத்ம திருப்தி கண்டவனை அதனால் உடல் நலங் குன்றினும் உள்ளத்துறுதி தளராத அடிகளே, தேன் ததும்பும் மலரின் கரு வண்டுகள் ஊதி மகிழ்வதுபோலஉனது மனதின் மகிழ்ச்சி முகத்தை நிரப்ப,மகிமைக்குரியவனே சப்பாணி கொட்டுக.

----------==================----------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 5.முத்தப் பருவம்

## பள்ளிச் சாலைகள் அமைத்த பணிகள்

காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடிகோமகனுர் வேண்டுவது
- அடிகளார்

### கோப்பாய் இராமக் கிருஷ்ணமிசன் பாடசாலை

காப்பும் படைப்புங் கலைத்தழிப்பும்
கலந்துறை பரத்தின் கழல்நாட
கற்பதே கல்வியா மெனுங்குறளின்
கருத்ததை உணர்ந்த கலைவல்லான்
மூப்பும் பிணியும் முடுகுமுன்னே
மூடிடு கசட்டிருள் முடிவுறவே
மூலமாங் கல்வியால் மூழ்கலஞ்சேர்
முட்டினைத் தடுத்துக் கரைசேர்க்க
யாப்பாய்க் கொண்டு நாடெங்கும்
யாவரும் கற்றிட வழிவகுத்தே
நற்றமிழ்ப் பள்ளிகள் அமைத்ததனுல்
நலைவசெறி மனவிருள் நலித்தெடுத்தாய்
கோப்பாய் இராமக் கிருஷ்ணமிசன்
கொழுந்தாய்க் கல்விக் கொடிவளர்த்தோய்
கொஞ்சங் கன்னஞ் சிவப்பேறக்
கொள்ளை முத்த மீந்திடுக 1

அடிகளார், உலகின் சீவராசிகளைப் படைத்துங் காத்தும் அழித்தும் பராமரிக்கின்ற பரமனின் பாதத்தை நாடுவதே கல்வியின் நோக்கமாகும் என்ற திருக்குறளின் பொருளை உணர்ந்தவர்.

முதுமை, நோய், சாக்காடு எனும் மூன்றும் நம்மை வந்தடையும் முன்னரே நமது உள்ளத்தை மூடியுள்ள தீமை எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருள் அகலவும், பாவக் கடலில் ஆழ்ந்துபோகின்ற கலமெனும் ஆத்துமத்தினை கரை சேர்க்கவுங் கல்வி அவசியமெனக் கண்டறிந்தவர்.

இதனையே ஒரு திட்டமாகக் கொண்டு யாவரும் எவ்வித பேதமும் இல்லாது, சமமாக, இலகுவாகக் கற்பதற்காக கல்வியகங்களை நிறுவினர். ஆரம்பத்தில் இராமக் கிருஷ்ண மிசன் உதவியுடன் கோப்பாயில் அக்கல்விக் கொடியை வளர்த்தார்.

அத்தகைய விபுலாநந்த அடிகளே உமது கன்னங்கள் சிவப்புற முத்தந் தருவாயாக.

## தமிழ்ப் பண்டிதப் பரம்பரையை உண்டாக்கினர்

அவிழ்ந்துவீ ழாடை அணைக்குங்கை
யனையவே யிடுக்கண் நீக்குபவ
ரன்னை மொழியை யயல்மொழியார்
அறியச் செய்த பெருமகனே
தவிசி லிருந்த தமிழ்மொழியைத்
தழலிற் தகித்த மதவெறியர்
தலையே குனியத் தமிழ்ப்பணிசெய்
தலைவா தமிழிற் தகுவிருதாய்
தெவிட்டாத் திராவிட மொழிவிருத்தி
திகழ்சபை திருநகர் யாழ்ப்பாணத்
திலகமென் சதாசிவ ஐயருடன்
திட்டமிட் டமைத்து வளர்த்ததனுல்
செவிக்குச் செந்தேன் சேர்த்தளிக்கும்
செந்தமிழ்ப் பண்டிதர் பரம்பரையை
செழிக்கச் செய்தாய் முதிர்திவாய்
செல்வமே முதுதமிழ்த் தேனீவாய் 2

உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் நீக்கும் இயல்புடைய அடிகளார் தனது தாய் மொழியாகிய தமிழின் பெருமையை மற்ற மொழியினர் உணரத்தக்கதான காலத்துக்கேற்ற பணிகளைச் செய்தார்.

பண்டுதொட்டு ஆட்சி செய்த மொழியாகிய தமிழை ஒரு காலத்தில் மதவெறி கொண்டவர்கள் எரித்து அழித்தனர். அப்படிப்பட்டவர்களே நாணித் தலை தாழ்த்தும்படிக்கு அதனை விருத்தி செய்வதற்காக திராவிட மொழி விருத்திச் சபையை உண்டாக்கக் கருதினர். அப்பணியை தி. சதாசிவ ஐயர் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிஞருடன் இணைந்து செய்து அதன் மூலம் பரீட்சைகளை நடாத்தி பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் எனும் விருதுகளை அளிக்கச் செய்தனை.

இதனால் தாழ்வுற்றிருந்த தமிழ் கற்றோர் உயர்வுற்றனர் இத்தகைய தமிழ்ப் பண்டித பரம்பரையை ஈழத்தில் உருவாக்கிய தமிழ்ப் பெருமகனே முத்தந் தருவாயாக.

**கிழக்கிலங்கையில் இராமக் கிருட்டின மிசன் பாடசாலைகளை அமைத்தார்.**

மலர்க்காத் தாவிடு மான்மயங்க
மறித்து உழுவை மாய்த்துண்ணும்
மனித மனமும் மலைவுறலால்
மதங்கொள் மும்மலம் மறித்துண்ணும்
மலயமா மருந்தாய் மதுப்பொதுவன்
மாதவ ரிராமக் கிருஷ்ணமகான்
மாசறு மிசனரிப் பள்ளித்தல
மகவினை மாதா வென வளர்க்க
தலக்கிழக் கிழத் தரைமண்டூர்
தாயகம் பற்று, கல்முனையும்
தகுவளை ஆரை உப்போடை
தாண்டி பந்தி மலைசோலை
அலரில் காம... மாமிடத்தே
ஆங்கிலம் தமிழ்மொழி அறிவூட்டும்
அரும்பணி செய்தாய் அமுதுண்டு
அணைத்தே முத்த மீகுகவே 3

பூக்கள் செறிந்த காடுகளிலே தாவிப் பாய்ந்து விளையாடும் மான் அங்குள்ள சூழ்நிலையை அனுபவித்த சுகத்தில் மயங்கும்போது புலிகள் பாய்ந்து தடுத்துக் கொன்று உண்டுவிடும்.

அதுபோல மனிதருடைய மனமும், இக வாழ்க்கையில் உள்ள சுகங்களை அனுபிபவித்த சுகத்தில் தியங்கி மயங்கும்போது மூன்று மலங்களும் நம்மைத் தடுத்து உண்டுவிடும்.

இத்தகைய வாழ்க்கையை நல்வழிப்படுத்தும், பொதிகை அகத்தியனாரின் அவுடதமான கல்வியை, சமரச மார்க்க ஞானி இராமக் கிருட்டின மிசனின் உதவியுடன் பள்ளிகளை ஆரம்பித்துத் தாய்போலக் காத்து வந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவற்றுள் கிழக்கிலங்கையில் மண்டூர், காரைதீவு, அக்கரைப்பற்று, கல்முனை, கழுதாவளை, ஆரைப்பற்றை, உப்போடை சித்தாண்டி, ஆனைப்பந்தி கொக்கட்டிச்சோலை, திருகோணமலை பழுகாமம் எனும் இடங்களில் அமைந்த பாடசாலைகள் குறிப்பிடத் தக்கவை.

சில இடங்களில் ஆங்கில மூலமும் பல இடங்களிற் தமிழ் மூலமும் கல்வி கற்கப் பணிகள் செய்த விபுலானந்தனே முத்த மொன்று தருவாயாக.

**காரைதீவு சாரதா மகளிர் வித்தியாலயம்.**

கழுதிர் முற்றங் களிசுரப்பக்
கழுநீர்க்குருவிகள் கால்பதிப்ப
கவிக்கு அசையிசை அலகிடவே
களப்பில் நீரரர் பண்வகுப்ப
உழுவார் வாழும் காரைதீ
வுற்றிடு மகளிர் உயர்கல்வி
உறவே சாரதா நற்தேவி
உதிநற் பள்ளி யுருவாக்கி
எழுவான் கதிராய் கல்விகலை
எழுச்சிசெய் பத்தைந் தாண்டினிலே
எண்ணு மெழுத்தும் இயல்வித்த
எண்ணம் மறையாச் சிலையெடுத்தார்
வழுவில் வசந்தன் வளைந்தாடி
வந்தனர் மத்தளம் குழைந்தோடி
வசையற வொலித்தன நலந்தேடும்
வளவா முத்த மீந்திடுக 4

சமைப்பதற்கு அரிசி கழுவிய கழுநீர் மனைகளின் முற்றங்களிலே சுரந்து கிடக்கின்றது. அதில் கலந்துள்ள துணிக்கைகளை கழுநீர்க் குருவிகள் உண்பதற்காகக் காலாற் கிழறுகின்றன. மட்டக்களப்பில் பிரபலியமான நாட்டுக் கவிகளுக்கு நீரர மகளிர் பண்வகுக்கின்றனர்.

இத்தகைய உழுதொழிற் சிறப்புள்ள காரைதீவில் பெண்கள் உயர் கல்வி கற்பதற்காக சாரதா மகளிர் பாடசாலையை 1925ம் ஆண்டில் அமைத்தனை.

இவ்வாறு கிழக்குத் திசையில் உதயமாகும் சூரியனைப்போல கல்வி எழுச்சி செய்தனை. அதனை என்றும் மறவாத் தமிழ் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உனக்குப் படிவம் எடுத்தனர். அதனை நிறுவ மட்டக்களப்புக்கே உரிய சிறப்பான வசந்தன் கூத்தை பாலர்கள் வளைந்தாடி வருகின்றனர். அதற்கேற்ப மத்தள ஓசை ஒலிக்கின்றது. கல்வியின் வளர்ச்சியே கண்ணகை உள்ள அடிகளே முத்தந் தருவாயாக

**தமிழிற் கலைச் சொல் படைக்க வழிகாட்டினார்.**

தொடையுமிழ் வேடர் தொடைதொடுவில்
தொலைவிற் றெறிக்குங் கணைபடுகால்
தொடுவான் வீழாத் தொல்காப்புத்
தொன்மை என்றுமே அழியாப்போற்
படையொடும் பண்பொடும் பாராண்ட
பண்டைத் தமிழினம் பழுதுறுமோ
பைந்தமிழ்க் கலைகளிற் பயிற்சியில்லா
பாரா முகத்தால் அயல்மொழியில்
எடையிட் டாங்கிலத் தொழில்நுட்பத்
தேந்திர வைத்தியத் தியல்பாதி
ஏற்றிடா தென்று இயம்பியவர்
ஏமாற் றுறவே சென்னைநகர்
தடையில் கருத்துடன் கலைச்சொற்கள்
தான்செய் குழுவின் தலையாகி
தந்தாய் தமிழிற் தகுசொற்கள்
தருக முத்தந் தவமுனியே 5

வேடர்களின் வில்லிருந்து விண்ணென்று புறப்படும் அம்புகள் மேலே எழுந்து போயினும் ஒருபோதும் அவற்றால் தொடுவான் வீழ்வதில்லை. அதுபோல அகமும் புறமுஞ் சிறக்க ஆட்சி புரிந்த தமிழினமும் மற்றவரின் தாக்கங்களாற் பழுதுபடுவதில்லை.

ஆனாலும் தமிழிற் போதிய அறிவும் பயிற்சியும் இல்லாதவர்களின் அலட்சியத்தால், ஆங்கில மொழிபோல் புதுச் சாத்திரங்களைத் தமிழிற் சொல்வதற்கு ஏற்ற சொற்கள் இல்லை எனும் நிலை உருவாகிற்று. அத்தகையோர் வெட்கித் தலை குனியத் தக்கதாக சென்னை அரசின் ஆதரவில் நடந்த கலைச்சொற்கள் ஆக்கக் குழுவிற்குத் தலைமைதாங்கி, பல சொற்களைத் தந்தனை. அத்தகைய தமிழ் வித்தகனே முத்தந் தருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூப்பிய கரத்தோர் குறையகற்றுங்
குணமலை யொருவனைக் குவலயத்தோர்
குறையிரந் தென்றுஞ் சமசரமென்
குவளைமலரால் தொழத்துயர்போம்
காப்பியம் மணக்குந் தமிழ்மொழியைக்
கவினுறச் சுவைத்தோன் துறவுகொண்டோன்
கல்வியிற் பிற்படு இலங்கைதனின்
கல்வி முறைகளின் கசடறுக்கும்
யாப்பதைச் செய்திடு மவைபுக்கு
ஆண்டா முப்பத் தணைமூன்றில்
அணிபல சூட்டி அறிவுரைத்து
அருளக லேற்றிய அடிகளேசீர்
சீப்புருக் கதலிமா செழும்வருக்கன்
சேர்ந்திடு முக்கனி சிந்துரசஞ்
செந்தமிழ்ச் சுவைக்கு மீடாமுன்
செவ்விதழ் முத்தந் தந்திடுமே 6

கையெடுத்துக் கும்பிடுவாரின் மனக்குறைகளை அகற்ற வல்ல எண் குணத்தான், ஏகன் எனும் இறைவனை வேண்டி சமரசம் எனும் குவளை மலரால் வணங்கினுல் எல்லாத் துயர்களும் அகன்றுவிடும்.

காப்பிய நயமிகுந்த இனிய தமிழ் மொழியை நன்கு ஆய்ந்து சுவைத்தவன். இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொண்டவன் என்றெலாம் புகழப்படும் விபுலானந்த அடிகள் 1933ம் ஆண்டில் இலங்கையின் கல்வி முறைகளை ஆராயும் சீர்திருத்தக் குழுவினில் உறுப்பினராகினர். அங்கு குறைகளை எடுத்துக் கூறி நிறைவு செயும் மார்க்கங்களையும் விளக்கினர். அதனல் கல்விச் சீர்திருத்தத்தில் பல நலன்கள் உண்டாகின.

அடிகளே முக்கனிரசத்துக்கு ஒப்பான தமிழ் மொழிக்கு உனது அதரங்களே நிகராகும். அவ்வித அதரங்களால் முத்தம் தருக.

### மதச்சார்பற்ற கல்வியகங்களின் தோற்றம்

கைக்கொள் கற்பனை கனதியெனில்
காலக் கழிவலால் கடவுளருள்
கனிந்திடு மென்று காத்திருந்து
காலனின் கையில் மடிதல்நன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பைக்கொள் விசத்தாற் பயமுற்றால்
பணைத்த அமுதப் பயனுறுமோ
பாரிற் தனைப்போல் அயலவரிற்
பரிவு கொள்வதே பரமநெறி
மைக்கொள் முகில்கள் வளம்பெருக்கும்
மட்டக் களப்புத் திருமலையில்
மதத்தார் கல்வி மறைந்தொழிய
மதச்சார் பற்ற மதியுரைத்தாய்
வைக்கோற் போர்கள் வரைமறைத்து
வயலைக் குறிஞ்சி வனப்பாக்கும்
வளஞ்சேர் பதிகளில் கல்வியகம்
வளர்த்தோய் முத்த, மீந்திடுக 7

நாம் கைக்கொள்ள வேண்டிய சமய நியதிகளும் நியமங்களும் அதிகமாயிருந்தால் அவைகள் காலத்தை வீணாக்குமே தவிர கடவுளருளைப் பெறலாமென்று காத்திருப்பது வீண். உய்வின்றிக் காலன் வாய்ப்படல்தான் அதனாற் கிடைக்கும்பலன்.

பாம்பின் விசத்திற்கு பயப்பட்டால் அதன் அமுதத்தைப் பெற முடியுமா. அதுபோலத்தான் கற்பனைகளுக்குப் பயப்படாது தன்னைப் போல மற்றவரை நேசிப்பதே இறைவனைக் காணும் வழியாகும்.

கருக்கொண்ட மேகங்களால் செழிப்படையும் மட்டக்களப்பு திருகோணமலை எனும் இடங்களிலே நடைபெற்ற மதத் தாபனங்களின் கல்வி மறைந்து, சமயச் சார்பில்லாத கல்வி உருவாக ஏற்ற புத்திமதிகளைப் புகட்டினாய்.

வயல்களில் உள்ள வைக்கோற்போர்கள் வரையென உயர்ந்து மருதநிலத்தைக் குறிஞ்சி நிலமாகத் மாற்றும் வளம் நிறைந்த அந்த இடங்களிலே பாடசாலைகளை நிறுவிய அடிகளே முத்தந் தருக.

## விவேகானந்த சபையிற் தமிழ்ப்பணி.

காந்தட் பூவின் கவின்வண்ணங்
கண்டு வானவிற் கலவைசெயும்
ககனக் கருப்பை கனிந்திழிநீர்
கழனி நிறைக்கக் கதிர்விளைக்கும்
வேந்த ராட்சி மிளிர்காரை
விளைவாம் விபுலா னந்தவடி
வியக்க விவேகா னந்தப்பேர்
விழுமிய கொழும்புச் சபைசார்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாந்தப் பதினேழ் பகராண்டில்
பலநூற் தமிழில் மொழிபெயர்த்தார்
பலவாந் தமிழ்ப்பணி பாராட்ட
பாரில் அறுபத் திரண்டினிலே
சாந்தந் தவழுஞ் சற்குணனுர்
சார்த்திய படிவநன் மலர்த்தொடையல்
சரிந்து தழுவத் தமிழ்மணக்குச்
சங்கத் தமிழின் முத்தியே 8

காந்தட் பூவைப் பார்த்து வானவில் தனக்குரிய ஏழு நிறங்களைக் கலந்து எடுக்கும். வானமெனும் கருக்கொண்ட மேகங்களிலிருந்து இறங்கும் நீர்வளத்தால் வயல்கள் நிறையும். வரம்புயர்ந்து நெல் விளையும். அத்தகைய நாட்டின் ஆளுநர்களான காராளர் வாழும் காரைதீவில் விபுலானந்த அடிகளார் பிறந்தார்.

அவர் கொழும்பு விவேகானந்த சபையில் 1917ம் ஆண்டில் சேர்ந்து விவேகானந்தரின் பல ஆங்கில நூல்களைத் தமிழிலிலே மொழி பெயர்த்தார்.

இத்தகைய பணிகளைப் பாராட்டுமுகமாக எடுத்த சிலைக்கு சற்குணனுர் என்பவர் 1962ம் ஆண்டில் அடிகளாரின் வரலாறும் புகழும் அடங்கிய ஒரு படிவ மலரை ஆக்கி வெளியிட்டார்.

அத்தகைய மலர்மாலைசரிந்து உன்னைத் தழுவி நிற்க சங்கத் தமிழ் மணக்கின்ற முத்தமொன்று தருவாயாக.

## சிவானந்த அனுதை இல்லம்

கோமகன் சிவத்தி லானந்தங்
கொண்டிடு நிலையைக் குறிப்பிடற்குக்
குருகுலக் கல்வியின் அடிப்படையில்
குலவுங் கல்லடி உப்போடை
நாமப் பதியில் நாற்றிட்டு
நலிந்த அனுதைப் பாலர்களின்
நன்மை காக்கும் பணிசெய்தாய்
நாடெலாம் சமரச மணஞ்செய்தாய்
பூமகள் புன்னகை பூத்துநின்றுள்
புவிமகள் புன்மை போக்கிநின்றுள்
புகலிட மற்றவர் புணைபெற்றுர்
புலர்ந்தது வாழ்வெனப் பூரித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாமகன் பெரியதம் பிப்புலவன்
பாரதில் மீட்சிப் பத்ததனை
பண்வழிப் பாடுவன் பைந்தமிழின்
பாலகா முத்தமொன் றீந்திடுமே 9

சிவானந்தர் முக்தியடைந்ததின் நினைவாகக் கல்லடி உப்போடை எனுமிடத்தில் குருகுலக் கல்வி முறையில் அநாதை மாணவர்களுக்கான பாடசாலையை நிறுவினர். அதற்கு சிவானந்த வித்தியாலயமெனவும் பெயரிட்டார். இது ஏனைய அநாதைப் பாடசாலைகளின் நாற்று மேடையுமானது. சமரச மதம் அதனுல் நிலைகொண்டது.

இப்பணியினுல் கலைமகள் மலர்ச்சியுற்ருள். பூமகள் துன்பத்தை விட்டு விலகி நின்ருள். வாழ்வில் அநாதைகளான பாலர்கள் தமது வாழ்வு ஈடேற ஒரு துணையைப் பெற்றனர். தமது வாழ்க்கை இப்போதுதான் உதயமானதென்று களிப்புற்றனர்.

அடிகளார் உடல்நலம் குறைந்திருந்தபோது பாட்டிற் பெரிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எனும் அவர் மாணுக்கன் மீட்சிப் பத்தெனும் விண்ணப்பத்தை இயற்றிப் பண்ணுடன் பாடினுன். குழந்தையே முத்தமொன்று தருவாயாக.

## விபுலானந்த மணிமண்டபம்.

வேண்டுவ வேண்டா தெலாமறியும்
விண்ணுறை யெம்மிறை வியனுலகில்
வேண்டிடு மலரது உள்ளமென்ற
விபுலா னந்த வித்தகனுர்
காண்டிடு கல்விக் குறையகற்றக்
கைக்கொள் துறவுடன் அவையாய்ந்து
கலைகளுந் தமிழுங் கலைநுட்பக்
கவின்களும் சிறந்திடப் பரமஹம்சர்
மாண்புறு மடத்தின் மகிடமென்ன
மாசறு பணிகள் புரிந்ததனுல்
மாதவன் சமரச மார்க்கமதில்
மதக்காழ்ப் பற்றறு பத்துமூன்றும்
ஆண்டதில் நின்பணி அகம்நிறைக்க
அமைத்தனர் கல்லடி உப்போடை
அழகுறு மணிசெய் மண்டபமே
அமுதா முத்தந் தந்திடுக 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எமக்கு எது வேண்டும் எது வேண்டப்படாததென்று யாவற்றையும் அறிந்து வழிநடத்தும் இறைவன், இந்த உலகத்திலே தனக்கென வேண்டுவது நமது வெள்ளை மனமே என்று அடிகளார் எடுத்துச் சொன்னார்.

தான் கைக்கொண்டு வரும் பற்றற்ற வாழ்வுடன் சமுதாயத்திற்கு உதவாத கல்விக் கொள்கைகளைக் கண்டு அவற்றை நீக்கும் மார்க்கங்களை ஆராய்ந்து அதற்கேற்ப மதம்,கலை, கலை நுட்பங்கள் என்பவை கல்வியினால் மேலோங்க இராம கிருஷ்ண மடத்திற் சேர்ந்து தொண்டாற்றினார். இதன்பேறாக கல்வியிற் சிறப்பும் மதக்காழ்ப்பின்மையும் சமரச மனப்பான்மையும் ஓங்கியது.

1963ம் ஆண்டில் அவரது பணியைப் பாராட்டி நினைவு படுத்துமுகமாக மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் ஒரு மணிமண்டபத்தை நிறுவினர். அமுதமே முத்தமொன்று தருக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 6. வருகைப் பருவம்.

## தமிழ்ப்பணி

பாடடளிசேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முருதவர்க்கு
வாய்த்த மலரெதுவோ

- அடிகளார்

### இலங்கைத் தமிழின் இனிமை உணர்த்திஜ

பாட்டளி யிசையிற் பகுவாய்ப் படப்பை
பரந்திடு வைகை பாய்மதுரை
பழநகர்சங்கப் பதியெனப் புலவோர்
பைந்தமிழ் காக்கும் சங்கத்தில்
கோட்டமில் முனிவன் குறையற முத்தமிழ்
கூடற் தலைமை கொண்டாங்கு
கூர்ந்துநாற் பத்திரண் டாண்டினிற்
கூறிய பேருரை கொள்ளறிஞர்
நாட்டளித் தமிழ்ச்சுவை நயந்தன ரின்பம்
நல்லுரை வாழ்த்திட நம்மீழ
நங்கைத் தமிழ்நடை நனிதெனத் தாயக
நாட்டவர் விதந்து நடுச்சொன்னூர்
காட்டளி யூதக் கயல்விழி மோதிக்
கலந்திட காமனை வென்றவிறல்
கவினிடு முகமலர் காட்டியே கருணைக்
கடலே விபுலா வருகவேவா 1

இசைபாடும் வண்டினங்களின் இசையால் கட்டவிழ்கின்ற மலர்ச்சோலைகள் சூழ்ந்துள்ள வைகைநதி பாயும் பண்டை மதுரை நகரிலே, தமிழ்ப் புலவர்கள் தமிழாய்ந்து வளர்த்துவரும் மதுரைத் தமிழ்ச் சங்கம் உண்டு. இச்சபையிலே மாசற்ற விபுலானந்த அடிகளார் 1942ம் ஆண்டு தலைமை தாங்கி அங்கு முத்தமிழ் ததும்பும் பேருரையைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதனைச் செவிமடுத்த தமிழகத்தார் இலங்கைத் தமிழ் இனியது என்று பாராட்டினர். இலங்கை மாதாவும் தலை நிமிர்ந்தாள்

காவில் உள்ள வண்டுகள் சங்கூதுகின்றன. மாதரின் கயல்போன்ற துள்ளும் விழிகள் காளையருடைய விழிகளுடன் மோதி[redacted]கலக்கின்றன ஆனால் நீயோ மன்மதனை வென்று தூய்மைமிக்க வதனத்துடன் துலங்குகின்றாய். அப்படியான அடிகளே கருணைக்கடலே ஓடி வருவாயாக.

**கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் யாழ்நூல் அரங்கேற்றம்**

சேர்கலை திருக்கொள் எம்பத் தூரினில்
செந்தமிழ் வளர்க்குங் கரந்தையிலே
செகம்புகழ் அவையில் நாற்பத் தேழினில்
செப்பினை நின்யாழ் நூலெடுத்தே
தேர்நிலை இறைவன் திருவடி சேரத்
திருப்பா வோதுந் திருவாயால்
திருத்தகு வில்யாழ் திறனதை ஆய்ந்து
திரட்டிய உரையாற் திகழ்வுற்றாய்
கார்கலை வானிற் கலைமதி எனவொளி
கரந்தைத் தமிழவைக் கண்ணமர்ந்த
கந்த சாமிப் பிள்ளை யென்கனவான்
கனிவால் நின்புகழ் ஓங்கியதே
பார்புகழ் தமிழ்ப்பண் பாங்கினை ஆய்ந்து
பாவமுந் தாளமுந் தானோர்ந்து
பலவித யாழினம் பகுத்தனை யாழோய்
பைந்தமிழ் மகனே வருகவருக 2

கலைவளஞ் சான்ற திருக்கொள்ளம்புத்தூரில் உள்ள செந்தமிழ் வளர்ச்சியில் முன்னிற்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலே 1947ம் ஆண்டில் உனது யாழ்நூல் அரங்கேற்றம் நடைபெற்றது.

துறவறம்பூண்டு இறைவன் பதஞ்சேரத் துதிபாடும் உனது செவ்விதழால், பண்டைக் காலத் தமிழர் உபயோகித்த மகரயாழ் கோட்டியாழ் என்னும் பலவித யாழ்களின் அமைப்பை விஞ்ஞான வழியில் ஆராய்ந்து யாத்தெடுத்த யாழ்நூல் உனது பெருமையை மேலும் உயர்த்தியது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் களங்கமற்ற வானத்திலே முழுமதிபோலத் திகழ்ந்த கந்தசாமிப்பிள்ளை எனும் புரவலனுடைய அன்பினால் இத்தகைய பணியை இலகுவாக ஆற்றினை. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அழிந்துபட்ட தமிசைக்கு உயிர் தந்து யாழ்நூலோன் என அழைக்கப்பட்ட தமிழ்ச் செல்வமே ஓடி வருவாயாக.

## தீண்டாமை எதிர்ப்பு

மலருறு மணமும் மலர்ச்சியும் வண்ணமும்
மகிழ்விற் குரியன மற்றெல்லா
மலர்க்குறு தன்மை மட்டிட மாந்தர்
மதிப்புறுப் பாகக் கொள்வதுண்டோ
அலர்படு வாருள் அடிமை யருந்ததி
யாரென அறையுந் தீண்டாமை
அகற்றுதற் கானவை அடிசெய் திட்டார்
அதனல் திருவேங் கடப்பதியில்
சிலரொடு சேர்ந்துசெய் சேரிப் பணியாற்
சினங்கொள் அந்தணன் தன்மகவைச்
சிக்கெனப் பிடித்துச் சாணியாற் சேந்திச்
சென்றிடா நீர்த்துறை தடுத்ததறை
கலக்குறு பரம சிவானந்த மகர்க்குப்
கவின்மயில் வாகனப் பெயர்சூட்டி
காரைத் திருமகன் தேசியப் பணிசெய்
கலங்கரை யாகினை வருகவேவா 3

பூக்கள் எனும்போது அதன் வாசனையும், நிறமும், அழகாதிய தன்மைகளுந்தான் நமக்குப் புலனுகின்றன. ஆனல் அவற்றின் வாடல் அழிதல்போன்ற ஏனைய தன்மைகளை எவருமே மட்டிடுவதில்லை.

இவ்வாறே மனிதர் எனும்போது அவர்களையிட்ட மனதுக்கு உகந்த காரியங்களையே நாம் சிந்திக்கின்றேமே அல்லாது அவருள் கீழ்நிலைப்படுத்தப்பட்டுள்ள மக்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. ஆனல் தீண்டப்படாதவர்களாக சமுகத்தினரால் தள்ளிவைக்கப்பட்ட மக்களைக் கண்டு மனம் புழுங்கி இரங்கினர். அவர்களுக்கு மீட்புக் கொடுப்பதற்கான பணிகளிலே இறங்கினர்.

அதன்பொருட்டு திருவேங்கடம் எனும் இடத்தில் அங்குள்ள முற்போக்குவாதிகள் சிலரைத் தனக்குத் துணையாகக் கொண்டு சேரிகளிலே புகுந்து சேவை செய்தார்.

அதனைக் கண்டு வெகுண்ட ஒரு அந்தணன் அவருடன் அப்பணியில் ஈடுபடடிருந்த தனது மகனைப் பிடித்து தீட்டை நீக்குவதற்காக பசுச் சாணத்தைப் பூசினன். நீர்த்துறைக்குப் போகாது தடுத்தான்.

THE PUBLIC LIBRARY 14-9-1991 BATTICALOA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதைக் கண்ட சிவானந்தர் என்பவர் தனது குழந்தைக்கு அடிகளாரின் இளமைப் பருவப் பெயரான மயில்வாகனன் எனும் நாமத்தைச் சூட்டினூர். அத்தகைய மனிதநேயமுள்ள சேவையாளனே காரைதீவிலே பிறந்த கருணைக் கடலே வருக.

**சிதம்பரத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.**

கொன்றை நிறத்தூய்க் குவிதுவ ராடைக்
கோமான் சென்னைப் பல்கழகக்
குழுவிற் குரைத்த குறைதீர் மதியுரை
குழுமினேர் ஏற்கச் சிதம்பரத்தில்
நன்றுறை நிறுவினுர் நசையினுல் வணிகர்
மலர்தமிழ் ஆசனஞ் சிறப்புறவே
நாடினர் அண்ணு மலைநகரில்
நற்றமிழ்த் துறையை நமதடி ஏற்பின்
நந்தமி ழோங்கு மெனவுணர்ந்தே
மன்றினை அமைத்த இராசா வண்ணு
மலையாம் வைசிய மாபுரவன்
மறையறி வுணர்ந்த மகனுர் தன்னுல்
ஒன்றெடு முப்பது ஓங்குநல் வருடம்
ஒப்பிலா வடியை உவத்தேற்று
ஒழுங்குற் ஓவிய மொன்றினை வடித்தார்
உயர்புகழ் விபுலா வந்திடுமே 4

கொன்றைமலர் போன்ற காவியாடையே தரிக்குந் துறவிய ரான விபுலானந்த அடிகளார் சென்னைப் பல்கழகக் குழுவிற்கு சில மதியுரைகளை மலர்ந்தார். அதனை ஏற்றுக்கொண்ட அவர்கள் சிதம் பரத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவினர். அதைநிறுவிய வணிகப் பெருமகனுர் அடிகளாரையே அங்கு தமிழ்த்துறைத் தலை மையை ஏற்கும்படி வேண்டினர்.

அதனை உவந்து ஏற்று 1930ம் ஆண்டில் தமிழ்த்துறை தலை வரானுர். அதுமட்டுமல்ல அங்கே அவரது திருவுருவப் படத் தையுந் திறந்துவைத்தனர். அத்தகைப் தமிழின் செல்வமே வருக

**பாரதியாரின் பாட்டருமை உரைத்தார்.**

பாரிற் பறிபோம் பாரதச் சுதந்திரப்
பற்றினை பாடிப் பாமரரும்
பங்குற விழித்தெழப் பாச்செய் புலவன்
பாரதி என்பவன் பார்தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாரில் மலர்கள் நற்தொடை யாவதோ
நற்சுதந் திரமில் லார்குடிகளோ
நரகமே அல்லாது நல்லவோர் நாடதோ
நாமினி பொறுப்பதோ என்றறைந்தே
சேரி தொட்டுசெங் கோட்டை வரையும்
சிந்திக் கவைத்த சீர்மையால்
சீரிலாப் பாடல்கள் செய்தன னென்று
செந்தமிழ்ப் பண்டிதர் சினந்தக்கால்
வேரிற் பழுத்த பலாச்சுவைப் பாட்டென
வியந்தே மன்ற முதலமைத்தார்
விசும்பும் வியனும் வியந்தது பின்னரே
விபுலா எழுந்து வருகவேவா 5

பாரததேசத்திலே வணிகராக வந்து வஞ்சகச் செயல்களால் ஆளுநர்களான ஆங்கிலேயர் ஆதிய ஐரோப்பியர், இந்தியரிட மிருந்து பறித்தெடுத்த சுதந்தரமென்னுந் தன்னாட்சி உரிமையை; கற்றவர்கள் அல்லாதவர்களும் உணர்ந்து பங்குபற்றி மீட்டெடுக்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவன் பாரதி எனும் புலவன்.

பூக்களைக் கட்டுவதற்குரிய நாரில்லாவிட்டால் எப்படி பூமாலை உருவாகும். அதுபோல சுதந்தரமற்றவர்கள் எவ்வாறு அந்தநாட்டுக் குடிமகராகுவர், அப்படிப்பட்ட நாடு நரகமல்லவா. இனியும் நாம் பொறுத்துக்கொண்டிருப்பதா என்று வீரமுழக்கமிட்டான்.

இதனால் சேரிவாழ் பாமரரும் பெரிய நகரங்களிலே வாழும் கற்ற பெருமக்களும் சுநந்திர தாகமுற்றனர். ஆயினும் சில தமிழ் வித்துவான்களும் பண்டிதர்களும் அவரது பாக்களில் இலக்கணப் பிழைகளும் யாப்பு வழுக்களும் உண்டென்றனர்.

ஆனால் அடிகளோ அவரது பாட்டுகள் வேரிற் பழுத்த தேன்சுவை சொட்டும் நல்ல தமிழ்ப் பாக்கள் என்று கூறியது மாத்திரமல்ல அவருக்குத் தமிழகத்தில் மன்றமும் அமைத்தார். அதனல் பாரதியாரின் புகழ் மேலும் பரவிற்று. அத்தகைய விபுலாநந்தரே வருக.

## அகத்தியரும் அடிகளாரும்

கற்பகக் கரும்பனைக் கவின்மிகு யாழகக்
காரை மூதூர்க் கனிவுற்று
கல்வியிற் தேறிக் களப்பினில் வந்து
கடிமணம் புரிந்து நெடிதுயர்ந்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொற்புறு புலமை நடரா சனுரின்
பொருள்பொதி புகழுரை புகலுவகேள்
பொதிகை நாடித் தமிழ்கா ரகத்தியர்
பொன்மலை இமய மிழிந்துவந்தார்
கற்புறு மாதர் கணணகை கோயிற்
கரமலர் குவித்துக் கருணைபெறும்
காப்புறு மட்டக் களப்பினை விட்டுக்
கடும்பனி இமயங் கால்வைத்து
அற்புதத் தமிழினைக் காத்தவர் விபுலர்
ஆயினு மிருவருந் தமிழ்காத்த
அறங்கார் துறவிய ருந்தமிழ் செய்த
அரும்பணி கூறிட அருகேவா 6

பூலோகக் கற்பகத் தரு என அழைக்கபபடும் நெடிய பனை மரங்கள் செழித்து வளர்ந்து சிறப்புச் செய்யும் யாழ்ப்பாணக் குடா நாட்டில் காரைதீவு எனுமிடத்திற் பிறந்து மட்டக்களப்பில் திருமணஞ் செய்து வாழும் தமிழறிஞர் மகாவித்துவான் நடராசனுர், அகத்தியர் வடக்கிருந்து தென்னகப் பொதிகைக்கு வந்து தமிழ் செய்தளித்தார்,

ஆனுல் விபுலானந்த அடிகளோ கண்ணகி கோயிலிற் கற்புடைய மாதர்கள் கரங்கூப்பித் தொழுது அவளின் கருணையும் அருளையும் பெறுகின்ற மட்டக்களப்பிலிருந்து வடக்கில் உள்ள இமயத்திற்குச் சென்று தமிழ் வளர்த்தார் என்று சொல்வார்

அகத்தியரும் ஒரு துறவி. விபுலானந்தரும் ஒரு துறவி. இவர் இருவரும் தமிழ்மொழிக்கு வளமூட்டினுர்கள். அத்தகைய தமிழ்ப் பணி செய்த விபுலானந்தனே அருகில் வா

## மதுரைத் தமிழ்ப் பண்டிதரான சிறப்பு

வாட்டமும் மலர்தலும் மரைமலர்க் கீந்திடும்
வலிமிகு கதிரோன் வண்ணம்போல்
வன்புட னன்பு மனிதருக் களித்திடும்
வலிமிகு மனமது தாஞெடுங்கக்
காட்டினில் மேட்டினில் கடுங்குளிர் கூட்டினில்
கடுந்தவ மியற்றிக் கண்டடைந்து
கனித்தமிழ் தெளிவதைக் காண்டே அடையக்
காவிய நாயகன் பதினுறில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேட்டிடைத் திபமாய் மிளிர்ந்திடு மெனுமெய்
மெத்தவு முணர்ந்திடு உத்தமராம்
மேன்மை கொள்விபு லானந்த வடியே
மேதகு மதுரைச் சங்கத்தார்
ஈட்டிய பண்டிதப் பரீட்சையிற் றோற்றிய
ஈழத் தலைமக னென்பரிசை
எய்தினை விருதுகள் ஏற்றனை பைந்தமிழ்
இன்பமே எழுந்தே வந்திடுமே 7

தாமரை மலர் காலையில் விரிதலும் மாலையிற் குவிதலும் பகலவனின் செயலால் நடைபெறுகின்றன. இதுபோல அன்பையும் இரக்கமின்மையையும் மனிதருக்குத் தருவதற்குக காரணமாக இருப்பது அவர்களின் உள்ளமாகும். இத்தகைய மனதை கட்டுப்படுத்தி அமைதி காண்பதற்காக காட்டிலும் மலையிலும் பனிபடர்ந்த இடங்களிலும் பாலை நிலத்திலும் அலைந்து தவஞ் செய்தவர் விபுலானந்த அடிகளார்.

அத்துடன் தமிழின் முழுஇனிமையைக் கண்டறிய நாட்டங் கொண்டு 1916ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ்ப் பண்டிதத் தேர்வுக்குத் தோன்றி சித்தி பெற்றார்.

அதுமட்டுமல்ல முதன்முதலில் இலங்கையிலிருந்துஇப்பரீட் சைக்குத் தோற்றி சித்திபெற்ற முதற் தமிழ் மகன் எனும் புகழும் பெற்றார். அத்தகைய இனிமை குன்றாத தமிழ் இன்பமே வருக

### மதுரைச் சங்கத்தில் மதங்க சூழாமணி

உருதவிவ் வுலக ஊழ்கொ ளின்ப
ஊற்றும் பற்றறுத் துலங்கு மாமணியே
உலகெனுங் கடலில் உழன்றிடு மாந்தரை
உறுகரம் நீட்டி உயர்த்துமுன் பணியே
மருதுநீ மாந்திய மதங்கர் திறன்களை
மதுரைத் தமிழ்மன் றதினில் [redacted]
மறைந்தொழி நாடக மாண்புறு தமிழில்
மதங்கர் சூழா மணியென் பனுவல்
அருதவா ருய்ந்தவுன் அரும்பணி தன்னு
லாங்கில வாணி யரங்கமைப் பாடல்
அமைப்பிலும் பண்டை அருந்தமிழ்க் கூத்தர்
அளவற வுயந்ததென் றவனி யோர்க்கு
பெருதவோர் உண்மை பெய்தனை உன்னைப்
பெற்றனள் ஈழப் பெருந்தகை மற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெருந்தவக் கோலம் பெரும்புகழ் படைத்த
பெம்மான் விபுலா பெருமநீ வருகவே 8

சதமில்லாத இந்த உலகவாழ்வின் ஊற்றுன சிற்றின்பத்தைத் துறந்து தூய்மையுற்ற விலைமதிக்க முடியாத நவஇரத்தினமே, நீ அடைந்த பேரின்பம் மற்றவர்களும்' அடைய வேண்டுமென்ற ஆவலினுல் வாழ்க்கை எனும் கடலிற் தத்தளிக்கின்ற மக்களை கைதந்து உயர்த்திவிடும் பணி செய்தார்.

தமிழில் அழிக்கப்பட்டுவிட்ட தென்று அனைவரும் கவலையுறும் [redacted] தமிழினை பண்டை நூல்களில் ஆராய்ந்து அறிந்து வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள கூத்தர்களின் உதாரணத் துடன் விளக்கி மதங்க சூளாமணியெனும் நாடக நூலை ஆக்கினுர்.

அதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே அரங்கேற்றிய விபுலானந்த அடிகளே உன்னைப் பயந்த ஈழத் திருநாடு பெருமையுற்றது. அத்தகைய தமிழ்ப்பணி செய்த அண்ணலே வருக.

## சென்னைப் பல்கழகச் சபையின் உறுப்பினருகுதல்.

வாய்த்தநற் கொடைகளோ வாயிர மாயிரம்
வண்டமிழ்க் கொடையதே வலிய தென்று
வடமலைச் சாரல் வளமதைத் தொகுத்து
வனப்புறு மறைச்சொல் வாரியே செய்தாய்
பாய்ந்த தமிழ்நதி பரவியே பாரதப்
பாரினில் பாணினி படைத்த வடக்கு
பதமுறு ஆரியம் தனக்கிணை யென்றே
பல்துறை யாவிலும் பாங்கிணை செய்தே
ஆய்ந்தநின் ஆய்வுரை ஆயிர மாயிரம்
அத்தனை யுந்தமிழ் அணிபெறச் செய்த
ஆற்றலாற் சென்னை பல்கலைக் கழகத்
தவையுறுப் பாகினை ஆண்டு முப்பதன்
மாய்த்த வாறினில் மலர்ந்தது மறைத்தமிழ்
மாசற நிறுவினை மதகிணை வயலின்
மணலைத் திரளது மறித்துதிர் சுரக்கும்
மட்டக் களப்புமாண் மணியே வருக 9

ஆயிரமாக எவ்வளவோ அளவற்ற அருளும் பொருளும பெற்றிருந்தாலும் தமிழ்க் கொடைதான் கிடைத்தற்கரியதென்று உறுதி கொண்டார். வடக்கின் இமயமலைச சாரலின் வண்ணங்களைத் தொகுத்து அளவற்ற கட்டுரைகளாகத் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடிகளார் தமிழ்நதி பொங்கிப் பரந்து வடக்கில் ஓடியது பாணினியார் இலககணம் வகுத்த ஆரியமொழிக்கு தமிழ் நிகரான மொழியென்று பலதுறைகளிலும் எடுத்துக் காட்டியும் ஆராய்ந்து உரைத்துந் தெளிவு செய்தார்! அத்தனை ஆராய்வுரைகள் கூட ஆயிரக்கணக்கானவையே.

இத்தகைய திறமையைக் கண்டறிந்த சென்னைப் பல்கலைக கழகத்தினர் தமது அவையில் சேர்த்து 1930ம் வருடத்தில் உறுப் புரிமை தந்தனர். அதனால் அங்கு தமிழ் மலர்ச்சி புரிந்தார்,

மதகுகள் இணைப்புச் செயுகின்ற வயலிலே கயல் மீன்கள் திரண்டு வந்து செறிதலால் நீர் ஓட்டத்தைத் தடைசெய்கின்றன. அதனால் வயல்களுக்கு வேண்டிய நீர் போதிய அளவு பாய்கின்ற மட்டக்களப்பு தந்த தமிழ்மணியே வருகுக.

## துறவறத்துடன் செய்த கல்விப்பணி

மலரெதும் மலர்ந்து மணங்கொள விலையெனில்
மாட்சிமை அதற்கு மற்றுண்டோ
மானுடர் தாமும் மாண்புறு புகழினை
மருவிடா ராயின் மாண்புண்டோ
மலமறு துறவறப் பணியுட னருந்தமிழ்
மதர்த்திடச் செய்த மாமணியே
மலயமுர் பொதிகை மாமுனி நிகர்க்கும்
மாதவா நின்புகழ் மாவிலங்கை
குலமுறைக் கல்விக் கோளறு பணியைக்
குருகுலக் கல்விக் குவைசெய்த
கொள்கை தன்னைக் குவலயம் போற்றிய
கோனே குறுநடை பயின்றிடவா
நலமுறை வெம்பதி நயந்தே வருக
நமனுர் பயமிலாத் துரைவருக
நற்றமிழ் நலியா நானிலஞ் சிறக்க
நற்பணிப் பெரியோய் வந்திடுமே 10

பூக்கள் மலர்ந்து வாசனை தராவிட்டால் அதற்கு எந்த வித மதிப்புமே இல்லை. அதுபோல உலகிலே பிறந்த மனிதர்களும் மாட்சியுடனும் புகழுடனும் வாழாது விட்டால் மானுடப் பிறவியின் பயன்தான் என்ன.

மும்மலங்களை அறுத்து துறவறம் பூண்டும் தமிழ்ப் பணியை விடாது 'தினமும் முயன்று தமிழ் வளமுறச் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதிகை அகத்தியரை நிகர்க்கும் விபுலானந்த அடிகளே உனது புகழ் இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தத்தால் விளங்கலாயிற்று. அத்தகைய அரசே குறுநடை பயில்வதற்கு ஓடிவா.

எங்களின் நன்மைகள் சிறந்திட வருக, காலனுக்கு அஞ்சாத ஐயனே வருக. தமிழ்ப்பணிசெய்த தகலவனே வருக

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 7. அம்புலிப் பருவம்.

## பொதுப்பணி

பாட்டளிசேர் கொன்றையல்ல
பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
நாயகனுர் வேண்டுவது

*- அடிகளார்*

**மகாத்மா காந்தியின் வரவும் சுதந்திர உணர்வும்**

*பாட்டும் பண்ணும் பயிலிசையும்*
*பண்ணுடன் இணைந்த கூத்தமைப்பின்*
*பாங்குகள் பயிலும் கிழக்கிழப்*
*பதிபிறந் திமயம் பரந்தவடி*
*தாட்டுணை தழுவிய பாரதத்தின்*
*தகைகொள் மக்களின் தளையகற்றி*
*தமைத்தாம் ஆள வழிவகுக்குந்*
*தந்தை காந்தி யாழ்ப்பாண*
*நாட்டிடை மேவிய போதெழுந்து*
*நல்வர வேற்பு நல்கிடவே*
*நாடாள் வெள்ளையர் தனக்கஞ்சா*
*நயமுற விருபத் தேழினிலே*
*கூட்டினை இளைஞர் குழாமதனை*
*குன்றெனத் தலைமை தாங்கிநின்று*
*கொண்டனை சுதந்திரப் பெருந்தாகம்*
*குருவே அம்புலி ஆடிடவா* *1*

*விபுலாநந்த அடிகளார், பாட்டு அதற்கேற்ற பண்ணமைப்பு, இசை, தாளம் என்பன சேர்ந்த ஆட்டத்துடன் கூடிய வடபாங்கு தென்பாங்கு எனும் கூத்துகளும் நாடகங்களும் பரவலாகப் பயிலப் படும் மட்டக்களப்பிலே பிறந்தவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறைவனே எல்லாவற்றையும் ஆளுகின்றவன் என்ற உயரிய நோக்குடன் அரசமைக்கப்பட்டுள்ள பாரத தேசம் ஆங்கிலேயருடைய அடிமை விலங்குற்றிருந்தபோது, அதனை அறுத்தெறிந்து பாரததேசத்தவர்களே தமது நாட்டை ஆளும் விடுதலை வேட்கையை எழுப்பியவர் காந்தி மகாத்மா.

அவர் 1927ம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்தபோது, இங்கு ஆட்சி புரிந்த வெள்ளையர்களுக்கு அஞ்சாது, நெஞ்சுரத்துடன் யாழ்நகரில் உள்ள இளைஞர்களையுஞ் சேர்த்துக்கொண்டு வரவேற்பளித்தார். அத்தகைய சுதந்தர வேட்கையை மக்களுக்குக் கற்பித்த ஆசானே அம்புலி ஆட வருவாயாக.

### சர்வானந்தரைச் சந்தித்தல்

அளிசேர் மலர்கள் சொரிவனங்க
ளருவிக ளிழியு மருவரைகள்
அலையென நெற்கதி ரசைவயல்க
ளகல்வா னெனப்பரந் திடுகுளங்கள்
ஒளிரு மிலங்கைத் திருநாட்டில்
ஒறுக்கா மனமா மிருட்குகையில்
ஒதுங்கு மறிவிலித் தனமகற்றி
ஒளியெனுங் கல்வி ஓங்குதற்கும்
வெளிறும் அடிமை விலகுதற்கும்
வேட்கை கொண்டு வினைசெய்ய
வேதன் மயிலாப் பூரமைந்த
விரிமடம் இராமக் கிருட்டனரின்
தளிராஞ் சுவாமிசர் வானந்தா
தயைமிகு கொழும்பின் வரவதனால்
தன்னிய ருகினை பதினேழில்
தாவியே அம்புலி ஆடிடவா 2

வண்டூதும் மலர்கள் மலர்ந்த சோலைகள், அருவிகள் பாயும் அழகிய மலைகள், கடலலைபோலக் காற்றிற் கதிராடும் நெல் வயல்கள், வானத்தின் பரப்பைப்போலப் பரந்த நீர் நிலையங்கள் என்பன அமைந்து இலங்கையைச் செழிப்புறச் செய்கின்றன.

இத்தகைய நாட்டிற் பிறந்த அடிகளார் அறியாமை எனும் இருள் நிறைந்த மக்களின் உள்ளங்களிலே கல்வியெனும் விளக்கை ஏற்றி வைப்பதற்கும், அந்நியராதிக்கத்துள் அவலமுறும் அடிமைத் தனத்தை அகற்றுதற்கும் அகத்திலே எழுச்சி கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதற்கான காரியங்களில் ஈடுபடும் நோக்கமாக வாழும்போது மயிலாப்பூரில் உள்ள இராமக் கிருட்ண மடத் துறவி சர்வானந்தா 1917ம் வருடத்திற் கொழும்புக்கு வந்தார். அங்கே அடிகளார் அவரைச் சந்தித்து தனது துயரங்களை அகற்றும் வழிகளைக் கண்டறிந்தார். அத்தகைய அடிகளே அம்புலி ஆடுவதற்கு வா.

### திக்கையுந் துறவும்

கொன்றை யுதிர்த்த பொன்மலர்கள்
குவலயப் பெண்ணுடல் தனைப்போர்க்க
கோங்கி னரும்புகள் கச்சையிடக்
குளிர்மரை வதனத் தெழிலூட்ட
வன்றே விரியும் மலர்க்காபோ
லழகிற் சிறந்த முதுகாரை
அம்மை பயந்தாள் அகத்தியனு
ரடைந்தார் மறுபிறப் பெனும்படியாய்
நன்றே யிளமை மொட்டினது
நாமம் மயில்வா கனமென்பார்
நறுமலர்ப் பெயரோ பண்டிதனுர்
நலிவகல் திக்கை பெறும்போது
ஒன்றிடு பிரபோ சைதனியர்
உலகை வெறுத்த வேளையிலே
உற்றனை விபுலா னந்தவடி
ஒளியே அம்புலி ஆடிடவா 3

உதிர்ந்த கொன்றை மலர்கள் மண்மகளின் ஆடையாக அமைந்துள்ளன. கோங்கரும்புகள் மார்புக் கச்சையிடுகின்றன. தாமரை மலர் வதனத்திற்கு எழில் தருகின்றது. இத்தகைய அழகு கொண்டது காரைதீவு.

அங்கே விபுலானந்த அடிகளாரின் அன்னையார் இக்குழந்தை அகத்தியனுரின் மறுபிறவியோஎன மககள் கூறும்படிக்கு அடிகளாரைப் பயந்தாள். அவருடைய இளமைப் பெயர் மயில்வாகனம். பின்பு பண்டிதர் மயில்வாகனனுர்.

ஆரம்பத்தில் பற்றறுக்குந் தீட்சை பெறறபோது சூட்டப்பட்ட பெயர் பிரபோத சைதன்யர். உலகப் பற்றை முற்றுகத் துறந்த போது விபுலானந்த அடிகள் எனும்பெயரைத் தரித்தார். இவ்வாறு காலத்திற்குக் காலம் 'வேறு' பெயர்களால் அழைக்கப்பட்ட ஞான ஒளியே அம்புலி ஆட வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அநாதை இல்லங்கள் அமைத்தார்

பாரிற் பற்றற வாழ்ந்தாலும்
பழந்தமி ழின்பந் துய்த்ததினுற்
பணைத்த குடும்பப் பாங்குற்று
பலரு மெந்தை எனவழைக்க
வேரிலா மரத்திற் கனியாக
வித்திலா விருட்ச விரிவாக
விம்மிடு அனாதைச் சிருர்தமக்கு
வித்தகத் தந்தை எனவானுய்
நீரிலே இசைமீட் டரமகளிர்
நிரைக்கும் வாவி மட்டுநகர்
நிறைமலை யாழ்பதி ஆமிடத்தில்
நிறுவினை அனாதை யில்லங்கள்
சீரிற் சிறந்து கல்விபெற்ருர்
சிதறிய ஏழைச் சிறுவர்கள்தாம்
சீலமுங் மாண்புந் திகழலுற்ருர்
செல்வமே அம்புலி ஆடிடவா 4

உலகப் பற்றில்லாது வாழ்ந்தபோதும் சங்கத் தமிழின்பத்திற் பற்றுள்ளவராக இருந்தார். இதனுல் தமிழ்க் கல்வியுடன் தன்னைப் பிணித்துக்கொண்டார். தமிழ் மாணவர்கள் எனும் ஒரு பாரிய குடும்பத்தைத் தனக்கென ஆக்கிக்கொண்டார்.

மாணவர்கள் தந்தையே என அழைக்கலாயினர். இவ்வாறு இலலற வாழ்வெனும் வேரற்ற மரத்தின் கனித்த கனிகளாகவும் வித்தில்லாது விரிந்தெழுந்து விருட்சமாகவும் மாணவர் கள் அவரது குடும்பமாயினர். சிறப்பாக அநாதை மாணவர்களுக்கு கல்வித் தந்தையாகினுர்.

நீரர மகளிர் இசைபாடும் மட்டக்களப்பு, திருகோணமலை யாழ்ப்பாணமாதிய இடங்களிலே அநாதை மாணவர்களுக்கான இல்லங்களுடன் கூடிய கல்வியகங்கள் அமைத்தார்.

பெற்ருர் உற்ருர் இல்லாத ஆருமற்ற சிறுவர்களும் சிறுமிகளும் தங்கி இலவசமாகக் கற்குந் தயையை அளித்தார்.

இதனுல் ஒழுக்க சீலர்களாக மாத்திரமல்ல பிற்காலத்தில் பல துறைகளிலும் மேம்பட்டவர்களாகவுந் திகழ்வுற்றனர். இத்தகைய சீரியபணி செய்த செல்வக் கொழுந்தே அம்புலி ஆடுவதற்கு வருவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல்லா இடைய ரிடுமின்ஞ
விரியு மிளைஞர் படுமின்னல்
இல்லா வடியார் ரிறுத் தோம்பு
மிலங்கை நாட்டி லிறைக்கல்வி
யில்லா விடுக்கண் தீர்பணியை
யியற்றும் முயற்சி எடுத்தோத
இனிதெனக் கண்ட இந்துமக்கள்
இணங்கி ஏற்று இயன்றனரே
கல்லா மக்கள் பல்லாயிரம்
கற்பவ ரொருசில ரவர்தாமுங்
கற்றிலர் தம்மத மதஞலே
கவையறு இராமக் கிருட்ணமகான்
வல்லார் மிசனின் பள்ளிசெய்து
வளர்த்தார் மறையின் பொதுக்கல்வி
வரையிற் திகழ்ந்து மறைமுகிலில்
வளரு மம்புலி யாடிடவா 5

இல்லை என்று சொல்லத்தக்கதான இடையழகுள்ள மாதர்கள் உண்டாக்கும் காமத் துயரமென்பது ஒருபோதும் தன்னிடத்தே இல்லாத அடியார் அவர்கள், இலங்கைத் தேசத்துக்குரிய சமயக் கல்வி பாடசாலைகளிற் கற்பிக்கப்படாத நிலையை அவதானித்தார்.

அதற்கான சாதனைகளை எவ்வாறு செய்யலாம் என்று மக்களுக்கு விரிந்துரைத்தார். அதனை உற்றுணர்ந்த இந்து மக்கள் தம்முள்ளே கல்லாதவர்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள் இருக்கின்றார்கள். படித்தவர்கள் சிலரே. அவருள்ளும் தமது சமயத்தை அறியாதவர்கள் அதிகமாக உள்ளனர் என்பதை உணர்ந்தனர்.

இந்த அடிப்படையில் இராமக் கிருஷ்ண மகானின் சமரச மத அடிப்படையில் பொதுக்கல்வியை வளர்த்தார். இத்தகைய சாதனைகளைப் புரிந்த விபுலானந்த அடிகளே அதோ மலையிடுக்குகளிற் தவழ்ந்து மறைக்கின்ற மேகங்களிடை யே வளர்ந்து உலவுகின்ற அம்புலியுடன் ஆடுவதற்கு வருவாயாக.

## நவநீத கிருஷ்ண பாரதியாரின் உலகியல் விளக்கப் பதிப்பு

பூவுடன் நாரிணை பூந்தொடைபோல்
புணர்த்திடும் வாழ்வினைப் புவியாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போக்கியே சுகம்பெறுர் மயங்குதலோ
புனலிடை எழுந்துடை நீர்க்குமிழி
ஆவுங் கன்றும் அருகருகே
அலப்படை தோழ்கொள் மள்ளருட
னவனி புரக்கும் நடைபயின்று
அஃகங் குவிக்கும் காரைநகர்
நாவு முடலுந் தமிழ்மணக்கும்
நம்விபு லானநந்த வடியூக்க
நவிநீ தகிருஷ் ணபாரதியார்
நவின்ற உலகியல் நூ லுருவாய்
பாவும் விளக்கப் பதிப்பாகி
பாரோர் மெச்சப் பரந்ததுவே
பணைத்த முகில்கள் பரக்குமய்யே
பாலா அம்புலி அழைத்தாடே 6

பூமாலையில் பூக்களைத் தொடுத்து அழகு செய்வது நாராகும். அதுபோல வாழ்க்கை உலகாசைகளைக் கோத்துள்ளது. இத்தகைய ஆசைகளை அகற்றி பேரின்ப சுகம் பெறுதவர்கள் உலகவாழ்க்கையே பெரிதென்று மயங்குவது நீரிடை எழுந்து உடைகின்ற நீர்க்குமிழியை நிகர்க்கும்.

பசுக்களும் அவற்றின் கன்றுகளும் அருகருகே கலப்பை ஏந்திய உழவருடன் நடைபயின்று உயிர்காக்கும் தானியங்களை விளைவித்து, நெற்பட்டறைகளிலே சேர்த்து வைக்கின்ற காரைதீவில் பிறந்து, நாவின் பேச்சில் மாத்திரமல்ல தேகத்தின் செயல்களிலும் தமிழ் மணங் கமழ வாழுகின்ற விபுலானந்த அடிகளார் நவநீத கிருஷ்ணபாரதியாரின் உலகியல் விளக்கம் என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். இதனுல் அந்த நூல் தமிழறிஞர்களுடைய பாராட்டுதலைப் பெற்றது

அவ்வாறு தமிழ்ப்பணி செய்த விபுலானந்தனே பெருத்த முகிற் கூட்டங்கள் மதியை மறைக்கப் போகின்றன. அதன்முன்பு அம்புலி ஆடுவவதற்கு வருவாயாக,

நீரர மகளிரின் இன்னிசை கண்டான்.

நாட்டமார் விழிகளில் இறைக்காட்சி
நலிவிலா உணர்வில் மறையாட்சி
நயமிகு வாயிற் சொல்லாட்சி
நலைவகண் டெரியும் மனச்சாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாட்டிற் பெரியன் பண்ணுளன்
பகுத்தான் மட்டக் களப்பேரி
பவுர்ணமி தினத்தில் பாடுமிசைப்
பாவையர் குரலிற் பாடிடுமீன்
கேட்டான் இசைத்தேன் எனத்துணிந்தான்
கின்னர ரிசையை விஞ்சியெழும்
கிளருந் தென்றல் வருடையிலே
கிழக்கில் மதிதான் கிழம்பியபின்
மோட்டிருல் பிடிப்போர் முயற்சிக்கோ
மோனத் தவமகன் முத்திக்கோ
மோருஞ் சோறும் ஊட்டிடவோ
முனைந்தது அம்புலி ஆடிடவா 7

நல்நோக்குடைய கண்களிலே காண்பது இறைவனின் காட்சி. என்றுமே தழும்பாத உணர்வில் தென்படுவது வேதப்பொருளின் ஆளுமை. குற்றமில்லாத வாயில் வருவது தமிழ்ச் சொற்களை மரபு கடவாது பேசுதல், மனச்சாட்சியிலோ குற்றங்களைக் கண்டாற் குமுறி எழும்பும் உணர்வு.

இத்தகைய இயல்புகளை உடைய விபுலானந்த அடிகளார். பாக்கள் செய்வதிலும் அவற்றிற்குப் பண்ணிசை தாளம் காண்பதிலும் பெரியவர். அவர் மட்டக்களப்பு வாவியிலே முழுமதி நாளில் பாடுமீன் பெண்குரலில் இனிமையாகப் பாடுவதை ஆய்ந்தறிந்து அவை நீரரமகளிரின் இன்னிசை என்று துணிந்துரைத்தார்.

இவ்விசை தேவ இசைவாணர்களின் பண்ணிலும் மேலான சுவையுடையது. தென்றல் தழுவுகின்ற வேளையில் முழுமதி கிழக்கில் உதித்தவுடன் உண்டாகும். அவ்விசை வாவிக் கரையில் பெரிய இருல்களைப் பிடிப்பவர்களுக்கு ஊக்கத்தைத் தரவோ அல்லது முத்திக்கேதுவான உனது தவத்திற்கோ உண்டாகின்ற நிலையில் தயிரும் சாதமும் பிசைந்து ஊட்டி அம்புலி ஆடுவதற்கு வருக.

### இலங்கைகல்விச் சீர்திருத்தக் குழுவில் அங்கத்துவம் வகித்தல்

நெய்தற் கரையி லடரடம்பு
நிலம்மறை யப்படர் பெருமணலில்
நெய்தற் கண்ணியர் கயல்பிழந்து
நெடுவெயி லுணர்த்து நெறியீழ
மெய்தற் கரிதாய்க் கல்விநிலை
எள்ளற் தகைத்தா யிடருறுங்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுந்தியை கல்விச் சபைதனிலே
எரிகதி ரெனவே எடுத்தோதி
செய்தற் குரிய செயல்செப்பி
செம்மைக் கல்வி வழிகாட்டச்
செழித்தது தமிழ்மொழி எங்ஙனுமே
சிதைந்தது மடமை இம்மெனவே
பெய்திடு மழையாற் தரைகுளிரப்
பெருகிடு கிளையாற் பெருகுநதி
பேரலை புகல்நிக ரிறையிணைந்த
பூமா னம்புலி ஆடிடுக 8

கடற்கரையில் அடம்பு படர்ந்து நிலத்தை மறைத்துள்ளது. அங்காங்கு உள்ள பெருமணற் தரையில் நெய்நற் பூவொத்த விழிப் பரதவப் பெண்கள் கயல்மீன்களைப் பிழந்து வெயிலில் காயவைக் கின்றனர்.

அத்தகைய கடல்வளம் மிக்க இலங்கையிலே கல்வி நிலை மிகவும் நகைப்புக்குரியதாக இருந்தபோது, அதனை கல்விச் சபைக்கு எடுத்துச் சொல்லி தக்க பரிகாரமுஞ் சொன்னர். இந்த நடபடிக் கையால் கல்வி நிலைமேம்பட்டது. தமிழ் மொழியுஞ் சிறப்புற்றது. மடமை தழர்ந்தது.

மழையாற் தரைகுளிர்ந்து. சிறுசிறு கிளைகளாக ஊற்றெடுத்து நதியாகி பின்பு கடலிற் சேர்வதுபோல பரமனுடன் தன்னை இணைத் துக்கொண்ட மாட்சிமைக்குரிய விபுலானந்த அடிகளே அம்புலி ஆடுவதற்கு வருவாயாக.

## இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நாடகத் தமிழ்ப் பரம்பரை

நாயனுய் முத்தமிழ் நயமோர்ந்து
நாடகத் திறனெலாம் நனிதாய்ந்து
நல்லடி இளங்கோ சிலம்பாய்ந்து
நாலெண் வகைக்கூத் தெழிலறிந்தார்
நேயனுய்ப் பல்கலைக் கழகமதில்
நிலைகொள வடதென் பாங்கமைந்த
நெறியே படுத்தி நிரைசெய்தாய்
காயனுய் வாழினுங் கடிந்துலகின்
கடல்கடந் திம்மைப் பேரின்பங்
கண்டபின் அப்பணி தொடர்ந்திடவே
கணபதிப் பிள்ளைப் பெயர்ச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாயக விழந் தனிற்கூத்து
தமிழ்வடி விற்றலை எடுத்தோங்க
தந்தனன் சங்கிலி மணிமாலை
தகையிரு நான்கு ஆடுகவே 9

விபுலானந்த அடிகளார் இயல் இசை நாடகமாதிய முத்தமிழ் நாயகன். அவற்றின் நலமெலாம் உணர்ந்தவர். விசேடமாக நாடகத் தமிழின் இயல்புகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து வரம்பு கண்டவர். இளங்கோவடியின் சிலம்பிலே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு வகைக் கூத்துகளின் அழகுகளை அறிந்தவர்

இதனால் இலங்கைப் பல்கழகத் தமிழ்த்துறை ஆசானாக இருந்த காலத்தில் வட தென் மோடிகள் எனும் கூத்துவகைகளை நெறிப் படுத்தி நடைமுறைப்படுத்தினர்.

மோட்சத்திலே நாட்டமிருந்தாலும் உலகின் பற்றறுத்து வாழ்கைக் கடலின் கரையைக் கண்டாலும் இத்தகைய தமிழ்ப்பணி அவரது மூச்சாக இருந்தது.

இப்பணியை அடிகளாரின் மறைவின் பின்னர் அவரின் மாணாக்கன் அமரர். மு. கணபதிப்பிள்ளை என்பவர் தொடர்ந்தார். அதன்பேறாக சங்கிலி, மணிமாலை, இருநாடகங்கள், நாடகங்கள் என்பனவற்றை அவர் இயற்றினர். இந்த நல்ல செய்தியைக் கேட்டு அம்புலி ஆடுக.

## அடிகளார் செய்த தோத்திர நூல்கள்

வேண்டுவ தெதுகொல் வேந்தனுக்கு
வெள்ளை உள்ளமாம் மலரன்றே
வெறெம் மலரும் மலராத
வேதனே உந்தனின் தூயபக்தி
தூண்டவே பரனடிப் பாமாலை
துதிபல யாத்து தொண்டுசெய்தாய்
தோத்திரங் கணேசர் பஞ்சகமும்
தொடையல் குமார வேணியுடன்
மீண்டுயர் மாணிக்கப் பிள்ளையார்
மேலே இரட்டை மணிமாலை
மேதகு சுப்பர மணிசுவாமி
மேலும் இரட்டை மணிமாலை
ஈண்டுவத் துறைந்தே எமைப்புரக்கும்
இறைகளைப் பணிந்துசொல் விசைப்பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்தமிழ் தந்தாய் இளங்கோவென்
எண்ணினே மம்புலி ஆடிடவா 10

இறைவனுக்கு இதயசுத்தி உள்ள மனமலர்தான் உகந்தது. அதைவிட பிற எந்த மலர்களாலும் பூசித்தாலும் அவரது திருவருள் கிடைக்காது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட அடிகளார், அதற்கு இறைவனின்மேல் பக்தியை உண்டாக்குதலே தக்கவழி எனத் தேர்ந்தார்.

எனவே பலவிதமான தோத்திரப் பாடல்களை யாத்து வழங்கினர். கணேசர் தோத்திரம், கணேசர் பஞ்சகம், மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணி சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமாரவேணி மணி மாலை, இசைப்பதிகம் என்பன அவற்றுட் சிலவாகும். இத்தகைய தோத்திரப் பாக்களால் மக்கள் இறைவனைத் துதிக்கலாயினர். தற்கால இளங்கோ என்று மதிக்கத் தக்க பெருமையுடைய அடிகளே அம்புலி ஆடுவதற்கு வருவாயாக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 8.சிற்றிற் பருவம்

## துறவுப் பணி

மாலைப் பொழுதுஞ் சாலவந் திறுத்தது நின்
கருநிறக் குஞ்சி வெண்மை சான்றது
தனிமையி னுய்ந்தனை சாலவு மினிவரும்
கதியினியல்பு கண்டனையோ
- பூஞ்சோலைக் காவலனில் அடிகளார்

### அடிகளாரின் துறவு

மாலைப் போதும் மந்தமா ருதமும்
மதியத் தோற்றமும் மாணுமிறையை
மனமாந் தடாக மதினிலே மலர்த்தி
மயக்கந் தீர்ந்திடார் மானுடரோ
காலைக் கதிரவன் காட்சியி தென்ன
காரிருள் செறிந்த கசட்டுள்ளக்
கருங்குகை தனிலுறை காம விகாரம்
கடுகி மறையக் கனிந்துருகே
சாலை மானிப் பாயிந்துத் தாபனச்
சமரசப் பள்ளியின் அதிபரென
சகலசீ ருற்றே தானியங்கிடினும்
சலிப்புற இருபதில் தானுற்று
வேலை யெழுமலை போலுறு வாழ்வினை
வெறுத்தனை அதனால் வேதனடி
வேண்டிடத் துறந்து விடுதலை பெற்றனை
வித்தகா சிற்றில் சிதையாதே 1

மாலைக் காலத்திற் வீசும் தென்றலையும் அப்போது உதய மாகின்ற முழுமதியையும் நிகர்க்கின்ற இறைவனை எங்களது மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மெனும் வாவியிலே மலரவிடாது இரிந்தால் நாம் மானுடப் பிறவி களே அல்லர்.

கயமை மிக்க இருட்குகையான மனதிலே உறைகின்ற காமம் முதலிய பாதகங்கள் காலையிலே சூரியனைக் கண்ட இருள் அகலுவது போல அகல அவரை நினைந்து கசிந்து உருக வேண்டும்.

1920ம் ஆண்டில் யாழ்நகர் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராக இருந்து பெருமையுடன் பணியாற்றி வாழ்ந்தாலும், உலகவாழ்வு எனும் பெருங் கடலை வெறுத்து இறைவனடியைப் பற்றுவதற்காக அப்பதவியைத் துறந்த அடிகளே நாங்கள் அமைத் துள்ள இந்தச் சிற்றில்லத்தை அழித்துவிடாதே

அடிகளாருக்குப் படிவமமைத்தது.

சாலை வந்தது சார்ந்தன மென்று
சந்தோ சங்கொள் வழிப்போக்கா
சாலைச் சந்திப் பிதுவென வோர்ந்திலை
சங்கடப் பிரிவு ளங்குண்டே
ஆலைச் சங்க முழங்குவ தொப்பிட
ஆர்க்கு மோர்நாள் அப்போது
அத்தனை பொதியை ஆங்காங் கிட்டு
ஆண்டவ ராணை தனையேற்பாய்
ஓலை வருமுன் னுய்த்துணர் வாய்நீ
ஒருதனி முதல்வனில் ஓய்ந்திடுவாய்
ஓதிய விபுலர் உள்ளொளி பரந்தது
உலகமே அவரை வாழ்த்தியதே
பாலைப் பண்ணிசை யாழ்நூ லடிகளின்
படிமம் மட்டக் களப்பிடத்தே
பைந்தமிழ்ப் பணிசெய் தமிழ்க்கலை மன்று
பாங்குற வமைத்தது சிற்றில் சிதையேல் 2

செல்ல வேண்டிய வழி வந்துவிட்டதென்று சந்தோசப்படும் வழிப்போக்கனே இது வழியல்ல பலவழிகள் சந்திக்கும் இடம் என்பதனை உணர்ந்திலையோ. இதைவிட நீ செல்ல வெண்டிய பாதையிலே பல சந்திப்புக்கள் இன்னும் உள்ளன.

தொழிற் சாலைச் சங்கு பணியாளர்களை அழைகின்ற தற்கு ஊதுவதுபோல அவரது கட்டளை ஒரு நாட் கேட்கும். அப்போது உன்சுமைகள் அத்தனையும் போட்டபோட்ட இடத்திலே விட்டுவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அக்கட்டளைக்கு அடிபணிந்து செல்வாய். இத்தகைய அழைப்பு வருமுதல் இறைவனை உணர்ந்து அவருக் குள்ளே ஆறுதல் பெறு என்று விபுலானந்தர் உரைத்தார்.

பலவகைகளிலும் அடிகளாரின் பெருமை எங்கும் பரந்தது. யாழ்நூல் செய்த தவத்திரு அடிகளின் நினைவாக மட்டக்களப்பு தமிழ்ப் பணி மன்றம் அடிகளாரது படிமத்தை ஆங்கு நிறுவிற்று. ஆகவே எங்களது சிறுமனையைச் சிதையாதே

### விபுலானந்த அடிகளாரின் துறவு

இறுத்தது நின்பெரு மிளமை துறக்கம்
மெய்திடு வழிதனை ஏற்றிட வென்று
இலங்கிய தளைகளை எறிந்தனை பிய்த்து
இம்மை மறைந்தனை இறைவனைத் தேடி
உறுத்திய துயரம் உலைபடு பஞ்சென
உவந்தே தீக்கை ஈந்தனன் பரம
ருடனுறை சீடன் சிவானந்த மாமுனி
உதிமதி சித்திரைத் ஓங்குநா லாறில்
அறுத்தனன் னுன்பற் றெலாமறத் துறவு
அவனியி லடைந்து விபுலா நந்தனுய்
ஆனதும் அயமதை அணைந்திடு காந்தம்
ஆகின அமலன் அமைதியி லாழ்ந்தும்
வெறுத்தனை யில்லை தமிழ்ப்பணி மேலும்
விழைந்தனை அதற்காய் விண்செலு மட்டும்
வித்தகா முத்தமிழ் வினைபட வாழ்ந்தாய்
வேளே எம்மனச் சிற்றில் சிதையேல் 3

தனது இளமைக்காலச் சுகத்தினை வெறுத்தார். இறைபதத்தை அடைவதற்கான வழிகளை ஏற்றுக்கொள்வதற்காக உலகப் பந்தங்களை அறுத்து எறிந்தார். இந்த உலக வாழ்வை மறந்தார்.

பரமனின் பதத்தை நாடிய மனத் துயரங்களை அடியுடன் வாழ்ந்த சிவானந்தர் எனுந் துறவி 1924ம் ஆண்டு சித்திரைப் பௌர்ணமித் தினத்தன்று நெருப்பிற் பட்ட பஞ்சுபோல எரித்து தீக்கை தந்தார். அன்றிருந்து விபுலானந்த அடிகளாக மாறி. காந்தத்தை இழுக்கும் இரும்புபோல பரனடி வாழ்க்கையை நண்ணி அமைதி கண்டாலும் தமிழ்ப் பணிமேலுள்ள பற்றை துறக்கவில்லை இவ்வுலக வாழ்வை விட்டு அகலுமட்டும் முத்தமிழ்ப் பணிக்காக உழைத்தார். அத்தகைய அடிகளே எங்களது சிற்றிலை பாழடித்துவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கருநிறக் குஞ்சியோ கவினதை இழந்து
கால்கரந் தளர்ந்து கண்பஞ் சடைத்து
காலனுர் கைபடாக் கரந்தவர் யாரோ
கடுங்குளி ரிமயக் கைலை யம்பதி
யிலிருமைப் பிறவியி லிடர்படா தின்பம்
எய்திட ஏகி இயற்றினை தவமே
இடும்பதை அறுத்தாய் இன்னலை எதிர்த்தாய்
ஏகனின் தாழடி இதயத்தி லூன்றி
பெருகு மின்பம் பெட்புட னடைந்த
பேறுடைக் கயிலைப் பிரயா ணஞ்செய்
பெற்றமார் முப்பத் தேழா மாண்டெனப்
பெருந்தகை அறிந்தோர் பின்ன ரோதுவர்
மருவிடு மயிலும் மானும் மருளும்
மன்மதன் கணைதனை மறித்துநீ தகர்ததாய்
மனமதில் தூய்மை மலர்ந்திட நின்ருய்
மண்வினைச் சிற்றில் மாறிடச் சிதையேல் 4

கறுத்த சிகை தனது அழகை இழந்து பஞ்சென நரைக்கும். கால்கள் கைகள் பெலனிழந்து தளரும். கண் பார்வை மங்கிவிடும். இந்த நிலை வருவதும் காலனுலகு செல்வதும் உறுதி. இதற்கு ஒழிந்து மறைந்து தப்பித்துக்கொண்டவர்கள் எவருமே இல்லை.

இந்த உண்மையை நன்கு உணர்ந்த அடிகளார் பனியும் குளிரும் நிறைந்த இமயமலைக் கைலையம் பதிக்குச் சென்று இருமைப் பிணியை அகற்றுவதற்காகத் தவஞ் செய்தார். அதற்காக 1937ம் ஆண்டில் தனது மன அகங்காரம் தகாத பிடிவாதம் என்ப வற்றை வெட்டி எறிந்து வடக்குநோக்கிப் பயணமானுர்.. பல துன்பங்களை எதிர்கொண்டார். இறைவனின் நினைப்பே மனதில் உற்றவராக மாறினுர்.

மான் மயில் என்பவற்றைக்கூடத் தனது மன்மத பாணங் களால் மயக்குகின்ற காமனைக் கடிந்து, மனதிலே தூய்மையை மலர்த்தி உறுதியாக நின்ருர். அத்தகைய அடிகளே எங்களது மண்ணுற் செய்த மனையை சிதைத்துவிடாதே

மாயாவதியில் பிரபுத்த பாரதப் பத்திரிகை.

வெண்மை சான்றுவிண் வியனகந் தொட்டிடு
வெள்ளியங் கிரியெனும் விஞ்சைய ரிமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெண்பனி மாய்க்கும் வேதனை மறந்து
விதிபெறு மாயா வதியெனும் தபதியர்
அண்மிடு மிடத்தே அமைந்துள இராம
ரண்ணலாம் கிருஷ்ண அகமெனும் மடத்தில்
அழிவிலாத் தத்துவ அறிவொளி பரப்பும்
ஆங்கிலச் சஞ்சிகை ஆம்பிர புத்த பாரத
உண்மை முலகெலாம் பரவிட ஆசிரிய
உயரிடங் கொண்டே உரைத்தனை அதனால்
உணர்ந்தன ருலகார் உயரிய தமிழின்
உறுதிகொள் ஞானம் உன்பணி தன்னால்
வண்மைத் திறத்தோய் வளர்முப் பத்து
வகிரோன் பானில் வடமலைப் பணியால்
வாழ்கென மக்கள் வாழ்த்தின ருன்னை
வனருகச் சிற்றில் வளைத்துநீ சிதையேல் 5

வெள்ளியை உருக்கி வார்த்தாற்போன்று விண்வரையும் உயர்ந்து எழுந்து வித்தியாதரரின் உறைவிடமான இமய மலையிலே பனியின் குளிராற் படும் அவதியையுஞ் சிந்தையிற்கொள்ளாது தவம் இயற்றுவதற்காக ச் சென்றார்.

அங்கே மாயாவதி எனுமிடத்தில் உள்ள இராமக் கிருஷ்ண மடத்தில் வாழ்ந்தார். அக்காலத்திலே இராமக் கிருட்டினரின் சமரசத்தை உலகிற் துலக்கும் பத்திரிகையாக விருந்த பிரபுத்த பாரதம் எனும் ஆங்கிலச் சஞ்சிகைக்கு 1939ம் ஆண்டில் ஆசிரியரானார்.

அதன் மூலமாக தமிழில் உள்ள தத்துவ நூல்களையும், தமிழரின் இறையியற் தத்துவங்களையும், நெறிகளையும் மற்றவர்கள் அறியத்தக்கதான பணியினைச் செய்தார். இதனால் மற்றவரின் மதிப்புக்குரிய மாமேதையானார். அத்தகைய அடிகளே எங்களின் தாமரைமலர்போன்ற சிறுகுடிலைச் சிதையாதே.

## விவேகானந்தரின் நூற்களைத் தமிழாக்கஞ் செய்தல்.

தனிமை நாடினை தன்னை அறிந்தனை
தலைவன் தாளிணை தஞ்சமுற
தத்துவ ஞானந் தந்திடு பன்னூல்
தகையுறக் கற்றனை தன்னைப்போல்
இனிமை மற்றவர் ஏற்றிட எண்ணினை
இறைமுறைக் கருத்துகள் இலங்கிடுநல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இராமக் கிட்டினர் இடுவழி நடந்திடு
இளவல் விவேகா னந்தரின் நூற்
கனிகளைத் தமிழிற் கவினுற வாக்கினை
கலந்துரை யாடல் ஞானதீபம்
கரும ஞான யோக மென்றிடுங்
கனிரசம் பிழிந்து தந்தனையே
பனிமை படர்தரு பாவில் நின்புகழ்
பண்டிதர் பூபா லப்பிள்ளை
பல்சுவை மணிமொழி நாற்பதினை
படைத்தான் சிற்றில் சிதையாதே 6

அடிகளார் தனித்திருந்து தவஞ்செய்வதையே அதிகமாக விரும்பினர். அதனால் தன்னைப் பற்றிய ஆத்தும உண்மைகளையும் தனக்கும் இந்த உலக வாழ்க்கைக்கும் உள்ள பந்தத்தின் தாத்பரி யத்தையும் அறிந்து கொண்டார் பரமனின் பாதங்களிலே தஞ்சம டைவதற்கான வழிகளைக் காட்டும் பல தத்துவ நூற்களைக் கற்றி றிந்தார். அத்துடன் நின்றுவிடாது தன்னைப்போல யாவரும் இறை யின்பம் பெறவேண்டுமென்று அவாவினர்.

ஆகவே இறைவனடிகளை அண்மிக்கும் வழிகளைப் போதிக்கும் ஆகமப் பொருட்கள் துலங்கும் இராமக் கிருஷ்ணபரமகம்சரின் போதனைகளைக் கைக்கொண்டொழுகிய அவரது சீடன் விவேகா னந்தர் ஆங்கிலத்தில் எழுதிய பல நூற்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

அதன்பேருக; விவேகானந்தர் சம்பாசணைகள், ஞான தீபம், கருமயோகம், ஞானயோகம், எனும் அவரது நூல்கள் தமிழ்மொழி தெரிந்தாருக்கும் பயன்தரலாயின.

இப்பணி செய்த அடிகளாரை குளிர்ச்சி மிக்க தண்தமிழ்ப் பாக்களிலே பண்டிதர் .செ.பூபாலபிள்ளை என்பவர் விபுலானந்தர் மணிமொழி நாற்பது எனும் நூலைச் செப்பிச் சிறப்பித்தார். ஆதலால் எங்களது சிறிய மண்வீட்டை சிதைத்து விடாதே

## இராமக் கிருஷ்ண விசயம் வேதாந்த கேசரி ஆசிரியர்

ஆய்ந்தனை அறிவுசால் ஆகம வித்துவ
மடைந்தனை இறைசார் மறைகளின் தத்துவ
மலசினை சமரச மலரெனும் சத்துவ
வண்ணலாம் இராமக் கிட்டினர் வழிகளிற்
தோய்ந்தனை துறவு தொகைகொளுங் காலம்
துலங்கினை பிரபோ தசைதனி யராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தோதிலா மயிலை துகழறு மடத்திற்
தொடர்ந்தனை இருபத் திரண்டா மாண்டில்
பாய்ந்திடு மறைப்பொருள் பகரும் மாசிகை
பண்ணுறு இராமக் கிருஷ்ண விசயம்
பைந்தமிழ் தன்னுடன் பார்கொள் ஆங்கிலப்
பாடை வேதாந் தகேசரி வெளிவர
காய்ந்திடு காம மாதிய கடந்த
கதிரொளி மேவும் ஆசிரி யராக
கடமை செய்தனை கயிலையிற் சிறந்த
காரைத் திருவே சிற்றில் சிதையேல் 7

ஞானத்தைத் தருகின்ற மறைகளை ஆராய்ந்து அதிலே தேர்ச்சி அடைந்தார். இறைவனையிட்டு மற்ற மதங்கள் கூறும் உண்மைகளையும் அலசி ஆராய்ந்தார். சமரச மலர்ச்சியை உலகிற்குக் காட்டிய இராமக கருஷ்ண பரமஹம்சரின் போதனைகளில் ஈடுபட்டார்.

இவ்வாறு ஞானக் காட்சி கண்ட காலத்திலே மயிலாப்பூரில் உள்ள இராமக் கிருஷ்ண மடத்திற் தங்கி யிருந்தார். அப்போது அவரைப் பிரபோதசைதன்யர் என்னும் பெயரால் அழைத்தனர். 1922ம் வருடத்தில் அங்கிருந்துகொண்டே இராமக் கிருஷ்ண விசயம் எனும் தமிழ்ப் பத்திரிகைக்கும் வேதாந்த கேசரி எனும் ஆங்கிலப் பத்திரிகைக்கும் உலகப் பற்றறுத்த நிலையில் ஆசிரியராக இருந்து நடாத்தி வந்தார். இவ்வாறு அடிகள் காரைதீவிற் பிறந்து கைலையிலே சிறப்புப் பெற்றவர் ஆதலால் எங்களது சிறிய மணல் வீட்டைச் சதைத்து விடாதே

சிந்தைக்கிதந்தரு சிவபுரி

சாலவு மினிமை பெற்றிடு மமைதி
சார்ந்திடு முந்தனின் தகுவழி பெரிதே
சமயப் பணியுடன் சமரசப் பணியும்
சலிப்பிலா தியற்றி சாந்த முற்றனை
காலமென் சக்கரம் கடிதில் உருளினும்
கண்டிலார் போலக் கருமமே ஆற்றும்
கசடர்தம் மனவிருள் காய்ந்திட எங்கும்
கழறினை தத்துவக் கடவுளின் போதம்
ஓலமிட் டோடிடும் உயர்கரைப் பரப்பில்
ஒதுங்கிடு கிளிஞ்சல் ஒளிசால் நெய்தல்
உயர்வுறு கல்லடி உப்போ டைதனிலே
உன்மன அமைதி உலவிட வேண்டி
சீலமார் பள்ளிசி வானந்தத் தருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிவபுரி என்றொரு சிறுகுடி லமைத்து
சிந்தைக் கிதமளி செவ்னே எங்களின்
சிற்றில் சிதையாச் சிந்தை கொள்ளே 8

எப்போதும் அமைதி இன்பம் பெறும் அடியாரின் வாழ்க்கை சொல்லுந்தரத்தன்று. எனினும் சமரசம் சமயம் என்னும் பணிகளை ஆற்றவும் அயர்ந்து விடவில்லை.

காலச் சக்கரச் சுழற்சியின் வேகத்தைக் காணுதவர்கள்போல உலகக் காரியங்களையே செய்து வருபவர்களின் பாவ மனத்தின் இருள் அகலக் கடவுளின் அருட் தத்துவங்களை எடுத்துச் சொன்னுர்.

ஆரவாரித்து அலையெழுப்பும் அகன்ற கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கும் கிளிஞ்சுல்கள் ஒளிவிடுகின்ற நெய்தல் நிலதுதில் அமைந்தசிவானந்த வித்தியாலயத்தின் அண்மையில் மன அமைதி காணும் தவக் குடிலாகச் சிவபுரி என்பதை அமைத்து வாழ்ந்தார்.

எனவே நாங்கள் அமைத்த இந்தச் சிறு குடிலை அழித்துவிடாதே

அடிகளாரின் புகழ் பரப்பிய அருட் செல்வநாயகம்

கதியின் மிக்க காற்றுல் கடல்நீர்
கதிக்கப் பேரலை கரைதழுவும்
காலன் விழையுங் காலமுன் கருணைக்
காலினைத் தழுவும் என்கரங்கள்
விதியின் வலிமை வென்றிடு பொருளென
விண்மண் போற்றும் வித்தகனே
விபுலா னந்தனென் விரிதமிழ் முனியை
விரித்துரை செய்திட விழைந்ததனுல்
நிதியென அடிகளார் நிறைவுறு வாழ்க்கை
நிறைந்திடு வெள்ளம் ஆராய்வு
நித்தில அமுதம் நிகரிலாச் சொல்வளம்
நிரையிடு கவிதை ஆதியன
பதிகொள் குறுமன் பரப்புறு வெளியின்
பாலன் அருட்செல் வநாயகமென்
பண்பினன் திரட்டிப் பதிப்பித் திட்டான்
பாங்குறு சிற்றில் சிதையாதே 9

வேகமாக வீசுகின்ற காற்றினுல் கடலலை உயர்ந்து பேரலையாக வந்து கரையினைத் தழுவுவதுபோல மறலி வரும்போது உண்டாகும் மலைவிலே கருணையுள்ளம் மிக்க கடவுளின் பாதங்களையே எனது கரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பற்றிக்கொள்ளும். அப்போதுதான் விதியை வெல்லலாம் .அதுவே விதியை வெல்லுந்தாரக மந்திரமாகும் என்று அடிகளார் உரைத்தார்.

இத்தகைய மகானையும் அவர்தம் சமயம், தத்துவம், முத்தமிழ், சமுதாய மாதியன சார்ந்த சற் பணிகளையும் அவரது மறைவிற்குப் பின்னர் எடுத்து உலகத்தவர்க்கு வெளிப்படுத்துவதற்கு இலங்கை மட்டக்களப்பு குறுமண்வெளி எனுமிடத்தில் வாழ்ந்த அருட் செல்வநாயகம் என்பவர் முயன்றார்.

அதன்பேறாக அடிகளாரது வாழ்க்கை வரலாற்று நூல் திருநெல்வேலிச் சைவ சிந்தாந்தக் கழகப் பதிப்பாக வெளிவந்தது. அதையடுத்து விபுலானந்த வெள்ளம். விபுலானந்த அமுதம், விபுலானந்த ஆய்வு, விபுலானநதர் கவிதைகள் எனும் திரட்டுகள் நூலுருவாகின். இவைகள் யாவும் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற பதிப்பகத்தாரின் வெளியீடுகளாகவே வெளிவந்தன.. இப்பெருமை களைச் செவி மடுப்பதன்றி எங்களது சிற்றில்லை அழித்துவிடாதே

### ஆங்கிலத்தில் தமிழ்ப் பனுவல்கள்

*கண்டனை இறைவன் கழலடிப் பெருமை*
*கலந்தனை திருவருட் கருணையங் கடலில்*
*கசிந்தனை தமிழ்த்தேன் காதலிற் திழைத்து*
*காமங் கடிமணம் கடிந்தே வொதுக்கி*
*விண்டனை தமிழ்நூல் விரித்தே ஆங்கில*
*வியன்மொழி தனிலே விளக்கமே செய்தாய்*
*வியந்தனர் பிறமொழி வித்தகர் தமிழின்*
*விலையிலா மதிப்பினை விபுலா னந்தா*
*பண்டுனைத் தம்பிப் பிள்ளை யென்றார்கள்*
*பற்றறு காலை விபுலா நந்தன்*
*பைந்தமிழ் தனிலே ஆங்கில வாணியின்*
*பாவலர் நூல்பல படைத்தனை அதனால்*
*உண்டிட தமிழின் உறுசுவை தந்தாய்*
*உணர்ந்தனம் எமது உறுதியாம் நிலையே*
*உயர்ந்தனை இமயத் தோங்கு சிகரமாய்*
*ஊர்ந்தெம் சிற்றிலை உடைத்துச் சிதையேல்* 10

இறைவனின் திருவடிப் பாதங்களின் கடாட்ச மாண்பினை அறிந்தார். அவரது திருவருட் கடலிலே கலந்தார். காமத்தையும் திருமண ஆசையையும் கடிந்து விலக்கிவைத்தார். எனினும் தமிழ் மொழியிற் பற்று வைத்தார். அதன்மேலே தீராத ஆசையுங் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆங்கில மொழியிலே தமிழ் நூற் கருத்துகள் விளங்க வேண்டுமென்று விரும்பினர். அதன்படி தமிழ்க் கருத்துகளை ஆங்கிலத்திலும் ஆங்கிலக் கருத்துகளைத் தமிழிலும் தொகுத்து உரைத்தார். இதனுற் தமிழின் பெருமையை மற்றமொழியினர் கண்டு வியந்தனர். தமிழர் களும் ஆங்கில நூல்களின் தமிழாக்கத்தை நுகர்ந்து மகிழ்ந்தனர்.

இத்தகைய தமிழ்ப்பணி செய்த அண்ணலே உன்னை ஆரம் பத்தில் பண்டிதர் மயில்வாகனன் என்றூர்கள். உலகப் பற்றறுத்த போது விபுலானந்தனென்று பெருமைப்பட்டார்கள். ஆதலால் எங்களது சிற்றிலைச் சிதைக்காதே

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 9. சிறுபறைப் பருவம்

## தமிழ்ப்பணி

நீல வானிலே நிலவு வீசவே
மாலேவேளையே மலேவு தீருவோம்
சாலநாடியே சலதி நீருளே
பாலேபாடியே பலரோடாடுவோம்
நிலவு வீசவே மலேவு தீருவோம்
- அடிகளார்

### செந்தமிழ்ப் பத்திரிகையில் அடிகளாரின் கட்டுரைகள்

நீலவான் மதிநில வொளிமிகக் கால
நெய்தற் கரையினில் நெடுங்கலஞ் சூழ்ந்து
நெடுங்கை நிகரிருள் நிழற்றியே ஆழ்த்தில்
நிரைந்திடு தாரகை யார்கவின் வீசும்
ஆலவா யூரம ரிறைவர வேங்கி
அகத்துட னைம்புல அடக்கமே தாங்கி
அறிவெனும் மதியது அரும்பிடு போது
ஆணவ மென்னும் ஆழிருள் மூட
ஞாலமே தனதெனும் நசைசிறு இன்ப
நவைதரு தாரகை நம்மிடை எழுமே
நலித்ததை வென்றேன் நவின்றிடு கட்டுரை
நயமுறு மதுரை நற்பதி சங்க
சாலவாஞ் செந்தமிழ் தனிலிடம் பெற்றதே
சார்பதி தாயகந் தனிலோர் நூலகம்
சற்குணன் பரசு ராமர்தான் ஆக்கி
சாதுனக் களித்தனன் சிறுபறை கொட்டே 1

களங்கமற்ற ஆகாயத்திலே முழுமதி தனது கதிர்களை வீசுகின்றது. அதனுல் வானில் எந்தவொரு தாரகையும் தோன்ருதிருக்கின்றது. ஆனுல் கடற்கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஓடங்கள் யானைகளைப்போல நிரைந்து நிழலை உண்டாக்குகின்றன. இந்த நிழல் வானிற் பரந்து மதியொளியை மூடுகின்றது. அவ்வேளை யிலே தாரகைகள் பிரகாசிப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதுபோல இறைவனின் அருள் வரத்தை நாடி மனத்தையும் ஐம்புலன்களையு மடக்கும்போது ஞானமெனும் ஒளி வீசும். இத்தரு ணத்தில் நானென்னும் அகங்காரம் உண்டாகும் அத்தருணத்திலே மனதிலே உண்டாகும் இருளினுல் உலக வாழ்க்கைதான் உயர்ந்ததென்று எண்ணும் மதியீனத் தாரகை எழும்.

இத்தகைய உலக வாழ்க்கை இன்பத்தை துறந்த அடிகளார் எழுதிய தமிழ்க் கட்டுரைகள் மதுரைச் சங்கத்தின் செந்தமிழ் எனும் பத்திரிகையிலே வெளிவந்து அவரின் சிறப்பை மேலும் பெருக்கிற்று.

அதையும் அதைப்போன்ற பல சாதனைகளையும் நினைவுறுத்த அடிகளாரின் பிறந்த மண்ணிலே சற்குணம், பரசுராமன் என்பவர்கள் ஒரு நூலகத்தை நிறுவினுர்கள். இதனை எடுத்துச் சொல்லி சிறுபறை கொட்டுவாயாக..

### கரந்தைத் தமிழ்ப் பொழிலும் அடிகளாரும்

நிலவு வீசிட நீரரர் இசைக்கும்
நெறிக ளாய்ந்ததன் நீர்மை உரைத்தனை
நெடுங்கரை வாவி நிரைசெய் களப்பு
நீர்நிலை மட்டு நகரதில் என்று
துலக்கி உரைத்துத் தொடர்ந்ததை ஆய்ந்து
தொகுத்த இசையாழ் நூலிடை வைத்தாய்
தூயவுன் அறிவதைத் துய்த்திடு கரந்தை
துகழறு சங்கம் தொடர்தமிழ்ப் பொழிலிற்
நலமுறப் பதித்து நானிலம் மெச்ச
நல்கிய தமிழ்ரச நயமெலாம் சுவைத்தேன்
நாணலுங் குசையும் நற்கரை அரண்செய்
நாடதில் உன்புகழ் நாட்டிடும் சீடன்
குலமுறைக் கந்தை யாவெனுந் தமிழ்ச்சீர்
கொண்டிடு பண்டிதன் குறைவிலா துன்வழி
கூத்தும் தமிழுங் குலவிடு பணியைக்
குறைவறச் செய்தான் சிறுபறை கொட்டே 2

நிலவு ஒளிர்கின்ற முழுமதி நாளில் மட்டக்களப்பு வாவியிலே நீரர மகளிர் எனும் பாடும் மீன்பெண்ணுரின் இயல்புகளையும் அவர்தம் இசைப் பண்புகளையும் ஆராய்ந்து அறிந்தார். அதனை மேலும் ஆய்ந்து யாழ்நூல் எனும் மேலான தமிழிசை நூலைப் படைத்து அதிலே புகுத்திஞர்.

மெய்த் துறவறம் பூண்ட அடிகளாரின் அறிவுத் திறனை அறிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தனது தமிழ்ப் பொழில் எனும் மாசிகையில் அவரது ஆய்வுகளை வெளியிட்டு வந்தது.

கரையிலே நாணலும் தர்ப்பையும் அடர்ந்து வேலியிடும் வாவி சூழ்ந்த மட்டக்களப்பில் அடிகளாரது மாணுக்கன் வித்துவான் பண்டிதர் வீ.சீ. கந்தையா அவர்கள் அவரது அடியொற்றி நாடகத் தமிழை வளர்ப்பதற்கு முயன்று பல கூத்துகளை நூலுருவாக்கினுர். இச்செய்தியைக் கூறி சிறுபறை கொட்டுவாயாக.

*செந்தமிழ் மாசிகையில் அடிகளார்*

*மாலை வேளை வந்திறு பகலின்*
*மன்னவன் குடதிசை மலைதனிற் கரைய*
*மகர மெழுந்து மட்டக் களப்பு*
*மதிநிறை வாவியில் மகரிச பரப்ப*
*நாலை மூன்ருய் நல்கிடு வள்ளுவ*
*நயவுரை கலந்து நாவினிற் துலங்கும்*
*நற்பதி காரை நன்மகன் புகழை*
*நாடிய திருநெல் வேலியின் சைவ*
*சாலை சித்தாந்த சங்கந்தன் சார்பில்*
*சாற்றிடும் செந்தமிழ்ச் செல்வியில் அடிகளார்*
*சரமெனச் சார்த்திடு சங்கத் தமிழின்*
*சாகர வலைகளைச் சாசனஞ் செய்தார்*
*சோலை நிறையஞ் சுகமுடன் பூவை*
*சொல்லிடு பைந்தமிழ்ச் சுவையிடு மதலை*
*சொரி ந்தன யாழிசை சோர்விலா தளிப்பாய்*
*சொக்கிடச் சிறுபறை சோர்வறக் கொட்டே* 3

அடிகளார் அவதரித்த காரையம்பதி மிகச் சிறப்பு வாய்ந்தது. அங்கே பகற்பொழுது முடிவுற்று சூரியன் மேற்கு மலைகளிடை மறைகின்ற மாலை வேளையிலே மீன்கள் சுரவரிசை பாட ஆரம் பிக்கின்றன. அதுமட்டுமல்ல நாற்பொருளை அறம் பொரு ளின்ப மென்று மூன்ருக வகுத்துத் திருக்குறளை இயற்றிய வள்ளுவரின் நல்லுரைகளை மக்கள் ■ சாதாரணமாய்த் தம்முட் பேசுவார்கள்.

அவரது புகழை உற்றுணர்ந்த திருநெல்வேலி சைவசித் தாந்தக் கழகத்தார் தங்களது செந்தமிழ்ச்செல்வி எனும் மாசிகையில் வெளியிட்டு பெருமிதங் கொண்டனர் அடிகளாரும் சங்கத் தமிழ் எனும் கடலிற் ஓங்கியெழும் தமிழலைகளைக் கட்டுரைகளாக வரைந்து கொடுத்தார்.

சோலைகளிலே கிளிகளும் மைனுக்களும் பைந்தமிழ் சொற்கூறி மதலை இசை பொழிகின்றன. அதற்கேற்ப பலவிதமான இசைகளைத் தரவல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கணக்கற்ற யாழ்களைப் படைத்து இசைக்கும் வல்லமை கொண்டவர். அவர் கேட்டு மகிழும்படிக்கு சிறுபறை கொட்டுக.**

## தமிழ் கற்றவர்களுக்கு ஒரு விருது.

*மலைவு திரவும் மயக்க மகலவும்*
*மண்ணதில் வாழ்ந்திடு வாழ்க்கை பற்றிய*
*மதியுரை நவின்ற மாமுனி விபுலர்*
*மறையென் நறையுடன் மதுத்தேன் தமிழை*
*நிலைகொளக் கலந்து நிரைத்திடு பணியால்*
*நிமிர்ந்தது தமிழ்மொழி நெடும்புகழ் கொண்டே*
*நிறுவினு ராரிய திராவிட விருத்தி*
*நிறுவன மதற்கு நேரியர் சதாசிவ*
*தலைமகன் ஐயரின் தயவது பெற்றுர்*
*தமிழ்மொழி கற்றவர் தகுதிகாண் பண்டித*
*தலைகொள் பரீட்சை தான்பல நடாத்தி*
*தகுதியும் அதனுல் தக்கதோர் ஊதியங்*
*கலைவுரு தரசினர் கணித்திட வைத்தார்*
*கண்டனர் அச்சபை கவினிரு பதிலே*
*கற்றவர் பண்டிதர் கணக்கிலாத் தொகையர்*
*கனித்தனர் என்று சிறுபறை கொட்டே* 4

அடிகளார் உலக வாழ்வின் தடுமாற்றம் நீங்கவும் போலித்தன்மை விட்டுவிலகவும் உலக வாழ்க்கை எத்தகை யதாகஇருக்க வேண்டுமென்பதை எடுத்து வேதப் பொருட்களைத் தேன்சுவைத் தமிழுடன் கலந்து என்றும் அழிவில்லாத நல்லுரைகளாகப் பகர்ந்தவர். இம்முயற் சியால் தமிழ் மொழிமறை மொழியாகும் பெருமையு முடையதென தலை நிமிர்ந்தது.

இவைபோன்ற பெரும்புகழ் கொண்ட அடிகளார் தமிழ் கற்பவர்களுக்கு ஆங்கிலக் கல்வியால் ஏற்பட்டிருந்த தாழ்வு நிலையைப் போக்கச் சித்தங்கொண்டு யாழ்நகரின் வசித்த அறிஞர் சதாசிவ ஐயர் என்பருடன் இந்து ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கத்தை 1920ம் ஆண்டில் நிறுவினுர்.

அச்சங்கம் தனித் தமிழ்மொழியிற் தேர்ச்சிபெறத் தக்க பிரவேச, பால, பண்டித வகுப்புகளையும் பரீட்சைகளையும் நடாத்தி தேர்ச்சி பெற்றவர்களுக்கு தமிழ் வித்துவ விருதுகளை அளித்தது. மேலும் இத்தராதரப் பத்திரங்களுக்கு கல்விப் பகுதியார் தக்க மதிப்புக் கொடுக்கவும் ஏற்பாடுகளைச் செய்தார்.

நாளடைவில் தமிழ்ப் பண்டித பரம்பரை ஒன்று கணிசமான அளவு உருவாகிற்று இதனை எடுத்துக் கூறிச் சிறுபறை கொட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சீமந்தனி புராண வெளியீடு.

சால நாடியே சான்றோர் ஆய்ந்திடு
சங்கத் தமிழதின் சாறதை உண்டனை
சார்ந்து தமிழவை சாதனை செய்ததிற
சங்கம மாகியே தமிழ்த்திரு நாட்டின்
பாலமாய்ப் படர்ந்து பயந்திடு ஈழம்
பரிவுட னிணைக்கும் பணிபல செய்தனை
பைந்தமி ழிலங்கைப் பாவலர் நூற்களை
பயனுற எங்கும் பரவிட வைத்தனை
ஞாலமார் வித்துவான் நற்றமிழ் பூபால
நயமிகு பிள்ளை நவின்றசீ மந்தனி
நடுகற் காப்பியம் நம்வர லாறென்பன
நானில மறிய நற்பதிப் பாக்கினை
தாலமாய் வாழினும் தமிழ்க்கிளை விரித்த
தயவினா லனாதை தமக்கருள் புரக்கும்
தந்தை யாகினை தவமுறைத் தலைவா
தண்ணிளி பாடுவோம் சிறுபறை கொட்டே 5

தமிழறிஞர்களின் அவைகளில் பங்குபற்றிச் சங்கத் தமிழின் சுவையை மாந்தினார். அச்சபைகளிலே பல அரிய ஆய்வுச் சொற்பொழிவுகளைச் செய்தார். தமிழகத்திற்கும் இலங்கை நாட்டிற்கும் ஒரு தமிழ்ப் பாலமாக விளங்கினார்.

இலங்கையில் உள்ள அறிஞர்களின் பல நூற்களை தமிழகத்தில் வெளியிட உதவினார். இத்தகைய பணியால் இலங்கை - மட்டககளப்பு வித்துவான் செ. பூபாலபிள்ளை என்பவரின் சீமந்தனி புராணம், தமிழர் வரலாறு என்பன போன்ற அரிய நூல்கள் வெளிவந்தன.

கிளையற்ற தாலம்போல வாழ்ந்தாலும் அநாதைப் பாலரைக் காத்தளிக்கும் தமிழ்க் கிளை கொண்ட பெரிய தந்தையாக இருந்தார். இத்தகைய துறவியின் புகழைப் பாடிச் சிறுபறை கொட்டுக

## தேசியப் பற்று

சலதி நீருளே சார்ந்திடு தரங்கம்
சணப்பொழு தழிவுறும் சாயலில் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சகமெனும் மரங்கிலே சதுரது ஆடிச்
சாய்ந்திடு மென்பதை சாற்றிய முதல்வா
பலபல தியானம் பண்ணினும் பயனென்
பாரிற் பிறந்தவர் பயனுள்ள செய்து
பற்றதை விட்டுப் பவமதைப் போக்கிப்
பாருள ரார் தமக்கு பணிபல செய்யார்
நலமிலா மாந்தரே நாடதின் பற்று
நாட்டமும் இருப்பது நாடற் குரியதே
நயந்திதை உணர்ந்து நல்லண்ணு மலையின்
நடந்தவோர் விருது நல்கிடும் விழாவில்
உலவு தேசிய உயிர்க்கொடி மனையிலே
உயர்த்தினை முப்பது மூன்றும் வருடம்
உணர்ந்தனர் விபுலர் உயிருக்கு மஞ்சா
உத்தம னென்றே சிறுபறை கொட்டே 6

கடல்நீரிற்கூட எழுமலைகள் உடனுக்குடனே அழிவதைப் போல மனித வாழ்வு உலகமென்னும் நாடகமேடையில் கூத்தாடி மாய்ந்து போகும் என்பதை உரைத்தார்.

பலவிதமான தியானங்கள் பூசைகள் செய்தாலும் உலகிலே பிறந்த பயனை அடையவும் பயனுள்ள மாந்தராக, வாழ்வில், உலகப்பற்றை விட்டு மற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டு மென்பதை எடுத்து உரைத்தது மாத்திரமல்ல சாதனையிலுஞ் செய்து காட்டினர்.

இதற்குத் தாம் வாழும் நாட்டுப் பற்றும் அவசியமென்பதை உணர்ந்திருந்த அடிகளார் 1933ம் ஆண்டில் தமிழகத்திலே அண்ணுமலைப் பல்கழகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது தேசியக் கொடி புறக்கணிக்கப்பட்டதால் அதை ஆட்சேபித்து அக் காலத்தில் ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கும் அஞ்சாது தனது வீட்டில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றினர். அத்திறலை எடுத்துச் சொல்லிச் சிறுபறை கொட்டுக.

இசைத்தமிழ் எழுச்சியுற்றது.

பாலை பாடியே பாயும் மீனரப்
பைந்தமிழ்ப் பாவையர் பாடுங் கவிகளிற்
பண்ணுடன் மங்கையர் பரக்குங் குரவையிற்
பாங்கிரண் டாடிடும் மதங்கர் கூத்தினில்
சோலை மாங்குயிற் சுருதியிற் கோயிலிற்
சொல்லும் புராணச் சுவையினில் தமிழிசை
சொரிந்த பேதங்க ளாய்ந்து தொகுத்துநீ
சொல்லினை தமிழிசை சூடினை பெரும்புகழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலைப் பண்ணிசை விழுமந் தன்னிலும்
மேலாந் தொல்லிசை மேதினி யென்றனே
மேவும் நுட்பம் விரித்தே உரைத்தனே
மிளிர்ந்தது தமிழிசை மேன்மை கொண்டதே
காலைக் கதிரவன் என்றிசை வானிலே
கதித்த உன்பணி கண்டதும் இசைத்தமிழ்
கரந்த தில்லை கனிந்ததே என்றார்
கண்டு விண்டனம் சிறுபறை கொட்டே 7

பாலைப் பண்ணைப் பாடிக் குதித்து ஆடுகின்ற நீரர மகளிரின் கவிகளிலும், இசையுடன பெண்கள் இடும் குரவையிலும், தென்பாங்கு வடபாங்கு எனும் கூத்துகளிலும், மாஞ்சோலைகளிலே குயில்கள பாடும் ஓசையிலும், ஆலயங்களிலே செய்யும் புராணப் படனங்க ளிலும் ஏற்படுகின்ற இசை வேற்றுமைகளைத் தொகுத்து தமிழிசை பற்றி ஆராய்ந்து அறிந்தார்

மேற்கு நாட்டு இசையிலும் தமிழிசை மேலானது, மட்டுமல்ல காலவரம்பின்றிப் பண்டிருந்து வருவது, என்று சொல்லி இன்னும் அதிகமான இசை நுட்பங்களை எடுத்துரைத்தார்.

உதய சூரியனாக இசை வானத்தில் திகழ்ந்து இசையாய்வு செய்தார் இதனால் முத்தமிழில் ஒன்றான இசைத் தமிழ் அழிந்து போகவில்லை உயிர்வாழ்கின்றது என்று அறிஞர்கள சொல்லிப் பெருமைப் பட்டனர். இச்செய்தியைச் செப்பிச் சிறுபறை கொட்டுக.

செந்தமிழ் செழுமைமிக்க பண்டை மொழி

பலரோ டாடலாம் பாரிலும் விண்ணிலும்
படர்ந்தே செல்லலாம் பனிபெய் வரைகளில்
பாரிய கோள்களிற் படுகடல் பரப்பினில்
பயமிலா துலவாம் பாவமென் பசாசுறை
நலமிலா துள்ள நாட்டமுள் நண்பரின்
நட்புடன் வாழ்வது நரக மென்பரே
நானிலப் பலமொழி உணர்ந்ததாற் தமிழது
நல்மொழி எனவுரை நவின்றனே மேலது
நிலவு மொருமுது நேரிய மொழிமிக
நிதியெனச் சொல்வளம் நிறைந்த பெருமொழி
நிகரிலா இருதிணை நிகழ்வினால் வாழ்க்கை
நிறுவிடு மொருமொழி நிரைபட முத்தமிழ்
சிலரோ டின்புறு சிறுமொழி அலதமிழ்
செகத்து மானுடர் சிந்தைகொள் மொழியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செப்பிய மாமணித் திருவிபு லானந்த
செந்தமிழ் என்றே சிறுபறை கொட்டே 8

உலகில் வாழும் பலவின மக்களுடன் கூடி வாழலாம் மண்ணிலே எங்கும் செல்லலாம். விண்ணிலும் பறந்து போகலாம். பனிபடர்ந்த மலைகளில் வாழலாம். அதிக தூரத்திலுள்ள கிரகங்க ளிலே சென்று குடியேறலாம். ஆழமான கடலிலே உலவி வரலாம். ஆனால் தீமையே நாட்டமாகக் கொண்ட மனதுடைய நண்பர்க ளோடு கூடி வாழ்வதென்பது மிகவும் அரியது மட்டுமல்ல நரகம் போன்றதுமாகும் என்று அடிகளார் உரைப்பார்

தமிழ் சொல்வளம் பொருள்வளங் கொண்டது. அகத்திணை புறத்திணை எனும் வாழ்விலக்கணப் பகுப்பும் , இயல், இசை,நாடகம் எனும் முத்தமிழ்ப் பகுப்புங் கொண்டதொரு மொழி என்பதை எடுத்துக் காட்டினர்

அவர் உலகிற் பேசப்படும் பலமொழிகளைக் கற்றதால் அம்மொழி பேசுவோரிடையெ தமிழ் மொழியின் சிறப்பை எடுத்து உரைத்தார். தமிழ் மொழி உலகில் ஒரு தலை சிறந்த ஆதி மொழி என்பதை நிறுவினர் என்று சிறுபறை கொட்டுக.

## சங்க இலக்கியச் சுவை தந்தார்

நிலவு சிந்தொளி நீருறை வாவியில்
நினது உள்ளமும் நினைவும் மயங்கியே
நேரிய சங்கநூல் நிரைத்த காப்பியம்
நித்தில மகழ்ந்திடல் நினது பணியென
குலவு வேலையிற் குழுமிய மாந்தர்கள்
குணநய முணர்ந்திடக் கூறினை விரிவுரை
கொடுந்தமி ழெனச்சிலர் கொண்ட எண்ணமே
கோடிடப் பல்சுவை குலைவக ளீந்தனை
பலவு மாய்ந்துணர் பக்குவந் தமிழ்மொழி
படித்தவர் உற்றனர் பயிலவுஞ் செய்தனர்
பண்டை இலக்கியப் பரவை தன்னிலே
பாய்ந்துநீ ராடியே பருகவுஞ் செய்தனை
புலவு வாழ்க்கை புனிதமாய்ப் பொலிவுற
புனைந்த புராணப் பொருளுணர் மக்களை
புவியிற் தந்தனை புதுமை செய்தனை
புகழதைச் செப்புவோம் சிறுபறை கொட்டே

9

மதியொளிரும் வாவியின் இயற்கை எழிலில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அத்தகைய தருணங்களில் சங்கநூல்களையும் காப்பியங்களையும் துருவி ஆராய்ந்து சுவைத்தார். அதுமட்டுமல்ல தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுவைத்த நயங்களை மற்றவர்களுக்கும் கூறி வியந்தார்.

அடியாரின் இத்தகைய இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் இதுவரை சங்க நூற்கள் கொடுந் தமிழாலானது என்றிருந்த தவறான எண்ணத்தைப் போக்கி இலக்கிய நயமுள்ள முத்தமிழாலானது என்றுணர்ந்தனர்

பல தமிழிலக்கியங்களை (ஆய்ந்து) உணரும் பக்குவத்தை தமிழ் கற்றவர்கள் யாவரும் எழிதிலடைந்ததுடன் இலக்கியங்களை விருப் புடன் கற்கவுஞ் செய்தனர். பழைய இலக்கியம் எனும் கடலில் நீந்தவும் அதன் நறுஞ்சுவை அமுதை அருந்தவும் விழைந்தனர்.

மாமிச இச்சைமிக்க வாழ்வின் மாசுகளை அகற்றித் தூயதாக்குவதற்காகப் படைக்கப்பட்ட புராண இதிகாசங்களையும் மக்கள் கற்பதற்கு உற்சாகப் படுத்தி நல்வழி காட்டினார். இந்தப் புதுமையைச் சொல்லி சிறுபறை கொட்டுக.

## பழந்தமிழிசைக் கணிப்பு.

மலைவு தீர்த்திடு மயக்கமில் அறிவே
மானிடர் இருட்புழை மடமை அகற்றும்
மறையெனு ஒளியினால் மாய்ககலாம் இருளை
மாய்த்திடு இருமையை மடக்கலாம் பின்னே
நிலைமை இதையுரை நேரியாய் இசையின்
நிலைதளர் குறைதனை நீக்கிட முனைந்து
நிகரிச சுரமேழ் நிறைக்கும் மாற்றால்
நீள்தமிழ் பஞ்ச நெடுஞ்சுரந் துலங்க
அலைகடல் ஓதை அருவியின் ஓதை
ஆற்றதின் ஓதை ஆம்மழை ஓதை
ஆதிய மற்று அதிரிடி காற்றின்
அசைவுகள் கூறும் அதிர்வுகள் ஆய்ந்து
கலையுளங் கொண்டு கணித்தனை அதனால்
கண்டனை யாழ்நூல் கரந்தைமா நகரில்
கழறினை கேட்டோர் கனிந்தனர் அதனை
கவினுறச் செப்பிச் சிறுபறை கொட்டே

எதையுங் கண்டு திகைத்தல் இல்லாத தெளிவான ஞானமே மனிதரின் இருள்சூழ்ந்த மனக்குகையின் அறிவின்மையை அகற்ற வல்லது. இதற்கு வேதப் பொருளறிவு அவசியம். இப்படிச் செய்வதால் இருமைப் பிணிகளிலிருந்து விடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த உண்மையை அடிகளார் உற்றுணர்ந்ததோடல்லாமல் இசைத் தமிழ் இல்லாத குறையை அகற்ற பழந்தமிழின் பஞ்ச சுரங்களை ஆராய்ந்து தற்போதுள்ள ஏழு சுரத்துடன் இணைத்தார்.

கடல்,ஆறு,அருவி, மழை, இடி காற்றின் அசைவுகள் ஆதிய இயற்கையின் ஒலிகளின் அதிர்வுகளைக் கணித்து யாழ்நூலைப் படைத்தார். அந்த நூலின் சிறப்பை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றஞ் செய்தார். அதனைக் கூறிச் சிறுபறை கொட்டுக

---------------============-----------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 10. சிறுதேர்ப் பருவம்

## தமிழ்நூற் பணி

**தீபத்தைக் காற்றவிக்கும்**
**திரைபோட்டு மறைத்ததுபோல்**
**மேகத்தால் மறைந்துவிடும்**
**விண்ணிலுள்ள மீன்களெல்லாம்**

- பூஞ்சோ க் காவலன் - அடிகளார்

### நாடகத் தமிழ் தந்தார்.

தீபத்தைக் கையிற் கொண்டே அருகிற்
திகைத்திடு மிருளெனச் சொல்லுவாரோ
தீந்தமிழ் மூவகை என்றே வகுத்துத்
திகைப்பதோ நாடக மிலேயென்றே
பாவஞ்சேர் பண்ணும் பதும அபிநயம்
பாங்குறு தமிழ்தான் எத்தமிழோ
பைந்தமிழ் நாடகப் பண்பும் பரப்பும்
பாரினி லழிந்தது எனும்பதடிச்
சாபத்தை தணிக்கத் தம்மிடை நிலவும்
சதுர்வகைக் கூத்தரின் சால்புதனே
சங்கத் தமிழ்நூல் சான்றுடன் ஆய்ந்து
சாற்றினுர் மதங்க சூழாமணி
தாபத்தைத் தீர்த்தார் தமிழெனும் நல்லாள்
தான்குறை அகன்ருள் நாடகநூல்
தக்கதென் ருர்த்தாள் தண்பதி மதுரை
தமிழவை தனிற்தே ருருட்டுகவே 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு அருகிலே இருளாக இருக்கின்றது என்று யாரேனுஞ் சொல்ல மாட்டார்கள். அதுபோல இனிமை மிகுந்த தமிழ் மொழி முத்தமிழ் வகுப்புடையது என்று கூறிக்கொண்டு நாடகத் தமிழ் செத்தொழிந்து விட்டது என்று திகைப்பது முறையான காரியமா.

அடிகளார், நவபாவங்கள், அதுசேர்ந்த பண்ணினங்கள், அதற்கேற்ற ஆட்டங்கள், மெய்ப்பாட்டுக் கிரியைகள், என்பன நிறைந்துள்ள தமிழ், நாடகத் தமிழல்லாது எந்தத் தமிழ் என்று தனக்குள்ளே வியந்தார்

பைந்தமிழ்நாடகப் பண்புகளை அடியோடு அழித்துவிட்டனர் என்ற அறிவற்ற வாதத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தக் குறைபாட்டை இல்லாதொழிக்க சித்தங்கொண்டார்.

தமிழின் பண்டைய நூல்களின் ஆதார அடிப்படைகளைக் கொண்டு தமிழ் நாடகப் பண்புகளை ஆராய்ந்தார் இதன்பேருக மதங்க சூழாமணி எனும் நாடக இலக்கண நூலை இயற்றி மதுரைத் தமிழவையிலே வெளியிட்டார். தமிழில் நாடகத் தமிழில்லை என்ற குறை அகன்ற செய்தியைக்கூறி சிறு தேரை உருட்டுக

## கங்கையில் விடுத்த ஓலை

காற்றவிக்குந் தீபத்தைக் கரங்காக்கு மாயினும்
காலுமொளி நெய்குறையிற் காக்கு மாமோ
காயமதி லாயுட் கரைநெய் யிறுங்கால்
காவல்செய்து காலனைக் கடிய லாமோ
மாற்றவிதை கைக்கொள் மார்க்க ண்டேயர்
மறலியின் வாய்க்கென் று தப்பி ஞரோ
மாயமிதைத் தடுக்கவே மாநிலக் கூத்தாடி
மயக்கினும் நமன்செயல் மாற்ற லாமோ
சாற்றுயாழ்நூல் செய்யச் சார்ந்துடன் உதவி
சகலதுமே ஈந்த தன்றிக் கரந்தைச்
சங்கத்தில் அரங்குறத் தளர்விலா துழைத்து
சகவாழ்வின் இறுதிப் பேற டைந்த
ஆற்றெண்ணு கந்த சாமிப் பிள்ளைக்
காக்கிய கையறு நிலைசால் பாக்கள்
ஆழ்கங்கை விடுத்த அன்போலை என்னும்
அனுதாபம் பாடிச் சிற்றேர் உருட்டே 2

காற்று விளக்கின் சுடரை அவித்துவிடாதிருக்க ■■ கையினுற் காக்கமுடியும். என்ருலும் எண்ணெய் குறைந்துவிட்டால் அது அவிந்தொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போவதை எந்தவொரு சக்தியாலும் நிறுத்திவிட முடியாது. அதுபோலவே உடலிலே ஆயுள் கரைந்து கொண்டு வந்தால் மரணத்தை வெற்றிகொண்டு. தப்பமுடியாது .காலனைவிரட்டிவிடவும் முடியாது.

இந்த நியதியை மாற்ற முயன்று வெற்றி கண்ட மார்க் கண் டேயரும் இப்போது எங்கே உள்ளார். இயமனின் கையிலிருந்து தப்பி விட்டாரா. உலகத்திலே நமனை ஏமாற்ற எவ்வளவு வேட மிட்டுக் கூத்தாடி மயக்கினுலும் அது முடியாத கருமம்.

அடிகளார் யாழ் நூலை ஆக்குவதற்கு பலவழிகளிலும் உட னிருந்து ஒத்தாசை செய்து அதைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறச் செய்த கந்தசாமிப்பிள்ளை எனும் நண்பர் மரணமெய்திய போது இரங்கிப் பாடிய பாட்டுகள் கையறு நிலைச் செய்யுளின் இலக்கியமாகும். அதை அடிகளார் கங்கையில் விடுத்த ஓலை என்ற பெயரில் வெளியிட்டார் என்பதை எடுத்துக் கூறிச் சிறுதேரை உருட்டுக.

### தாகூரின் கவிதைத் தமிழாக்கம்.

திரைபோட் டுலகத் திமை விலக்கத்
திரண்டெழு வாரெப் பயனுறுவார்
திரையா ரீழத் தீவினை மறைக்கத்
தீவிரி ஊழியுந் திகைத்ததன்றே
கரைகோட் டெல்லை கடந்தே தமிழின்
கந்தந் தமிழகத் தரைகலந்து
காரை யீரிறை விபுலா னந்தரின்
கவித்திறன் மலர்ந்து தாகூரின்
வரையுயர் பாக்கள் தமிழினிற் பெயர்த்து
வழங்கினர் வளர்பூஞ் சோலைக்கா
வரம்பிடு காவலன் வண்ணமார் பலகவி
வனருகம் பலவாய் மலர்ந்ததுவே
மரைதோய் வாவியில் மதுவண் டிசைப்பினும்
மதிமகள் வரவால் மரைநாணும்
மட்டக் களப்புறை கவிவளம் மணக்கும்
மலரே மணித்தேர் உருட்டுகவே 3

திரையைக் கட்டி மறைத்தால் உலகத்தில் உள்ள தீமைகள் அகன்றுவிடுமா.அப்படி முயன்ருல் எவ்வித பயனும் ஏற்படாதே.

கடல் ஆரவாரித்துச் சூழும் இலங்கைத் தீவைப் பல கடல் கோள்கள் உண்டாலும் முற்ருக அழிக்கமுடியாதே போயிற்று. அதுபோல இலங்கைத்தமிழின் வாசனையையும் எவராலும் மறைத்து விடமுடியா[illegible]. எனவே தமிழகத்திலும் அது பரந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தகைய ஈழத் தமிழ் நறுமணத்தை விபுலானந்தரின் சாதனைகளும் படைப்பும் பரப்பின. அவற்றுள் கவி தாகூரின் பூஞ்சோலைக் காவலன் போன்ற நூல்களின் தமிழாக்கங்களும் சிலவாகும்.

தாமரை மலர்களில் வண்டுகள் இசைத்தாலும் சந்திரனின் வரவினால் அவை நாணிக் குவிந்துவிடும். அத்தகைய நியமமுள்ள மட்டக்களப்பு மாநிலத்திலே கவிவளம் இயல்பானது. அங்குள்ள காரைதீவிலே பிறந்த விபுலானந்த மலரே சிறுதேர் உருட்டுக.

*நீரர மகளிரின் இசையென நிறுவினார்*

*மறைந்திடு பகலவன் மாவிருள் போர்க்க*
*மதிவான் நிரப்பி நிலவெறிக்க*
*மட்டக் களப்பெனும் வாவியி னுவர்நீர்*
*மரகத மண்டபத் தரங்கின்கீழ்*
*நிறைமிகு இசைதரு நீரரர மகளிர்*
*நிகழ்த்தியே ஏழிசை நிரவல்செய*
*நிகழ்வதை ஆய்ந்து நிகரிச பமதநி*
*நியமச் சுரத்தின் நிலைகண்டு*
*நறையதி மாந்தி நாண்விரி யாழில்*
*நயமுறு மீனரர நங்கையர் இசையை*
*நானே கேட்டேன நற்பல வேளை*
*நானிலத் தோரே என்றுரைக்கக்*
*கறைபல சொன்னார் கவைமொழி என்றார்*
*கடல்வா ழுரிதம் ஓதையென்றார்*
*கவிழ்ந்திடச் சிரசம் கலனதில் சென்று*
*கண்டனை உண்மை சிறுதே ருருட்டே* 4

பகலவன் மறைவினால் ஏற்படும் இருளை சந்திரன் தனது ஒளியை வானிற் பரப்புவதால் அகற்றுகின்றது. அத்தருணம் மட்டக் களப்பு வாவியின் உவர்நீரின் கீழே அமைந்துள்ள மணிமண்ட பத்தில் நீரரமகளிர் ஏழு சுரப் பண்களை நிரவல் செய்கின்றனர்.

அடிகளார் இதனை ஆராய்ந்து நீரர மகளிர் இசையை நானே என்காதாற் பலவேளை கேட்டேன். அவ்விசைத் தேனை சுவைத்து மகிழ்ந்தேன். யாழில் இசைத்துப் பாடினேன். என்று உலகத்தவர்களுக்குச் சொன்னார்.

இதனைச் செவியுற்ற பலர் அப்படி நீரர மகளிர் என்றொன்று இல்லை வாவியில் உள்ள ஊரிகளின் சத்தம் என்று சொன்னார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தகைய தினங்களில் ஓடத்திற் சென்று அவ்விசையை ஒலிப்பதிவு செய்து உண்மையென நிறுவினர். அதனைச் செப்பிச் சிறுதேர் உருட்டுக..

### தமிழ் ஆக்கங்களைப் பிறமொழிகளிலும் பிறமொழி ஆக்கங்களைத் தமிழிலும் தந்தார்

மேகங்கள் ஆர்த்து பெய்மழை சலதியில்
மேவிய உப்பின் உவர்கொள்ளா
மேதகு தமிழின் மேன்மை பிறமொழி
மேவலால் என்றுமே தரங்கெடாது
ஆகத்தி லகத்தி லருந்தமி ழுணர்வு
அடையுறு வடிகள் பிறமொழியில்
ஆகுநற் கவிதை அமுதத் தமிழில்
ஆக்கினர் அதுபோல் தமிழ்க் கவிகள்
பாகமாய்ச் செய்து படைத்தார் பன்மொழிப்
பண்டிதர் கேட்டுப் பரவசித்தார்
பாங்குறு சேக்பியர் பாவள நாடகம்
பலபல தந்தார் பயன் கண்டார்
தாகத்திற் கேற்ற தாகூர்ப் பாடற்
தகையால் தமிழினல் எம்மொழியின்
தரமது குறயைாத் தகுநூல் செயலாமென்
தனைநிலை செய்தாய் உருட்டுக தேரே

கடலில் இருந்து உற்பத்தியாகிப் பெய்யும் மழையில் கடல்நீரின் உவர்த்த தன்மை இருப்பதில்லை. அதுபோல பிறமொழிக் கலப்பால் தமிழ் மொழியின் தனிமையும் சுவையும் அழகும் என்றுமே மாறுது.

உடலிலும் உள்ளத்திலும் தமிழ் உணர்வு ஓடுகின்ற அடிகளார் பிறமொழிக் காப்பியங்களைத் தமிழிலும் தமிழ்மொழி இலக்கியச் செய்திகளைப் பிறமொழிகளிலும் படைத்தார். இப்பணியைப் பல அறிஞர்கள் கேட்டு பரவசப்பட்டனர்.

இவ்வழியில் சேக்ஸ்பியரின் நாடகங்கள் தாகூரின் கவிதைகள் என்பனவற்றைத் தமிழிற் செய்தார் தமிழ்மொழியினல் எந்தவொரு மூலக் கருத்தும் மாற்றமடையாதபடி தமிழாக்கஞ் செய்யலாம் என்பதை நிலை நிறுவினர். அத்தகைய பெருமையைக்கூறி சிறுதேர் உருட்டுக.

அடிகளாரின் மறைவு.

மறைத்து விடுமல மாயை நசைமிக
மறந்திடு வார்கள் மறைப்பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மறலியோ மறவான் வந்தவ் வேளை
மடல்தனை நீட்டி மடக்கிடுவான்
முறைத்தும் பயனிலை முனிந்தும் பயனிலை
'முடிந்தது வாழ்வென முடிவுரைப்பான்
முடிந்திடு இந்த முதிர்நிலை வராது
முயல்வதே தவத்திரு நிலையாகும்
குறைத்துங்கூட்டியும் குவலய நாட்டக்
குறிகளின் செய்வினை சமன்படுத்தி
குதிக்கும் மறலி குறையிரந் தழைக்கக்
கூடினை நாற்பத் தேழாண்டு
மறைத்தனை உன்னுடல மலர்ந்தனை தூக்கம்
மாயமாம் வாழ்வின் பற்றறுத்தே
மனமது மலர மரணமென் பயண
மாயினன் தேரதை உருட்டுகவே 6

உலகத்திலே மும்மல ஆசைகளையே விரும்புபவர்கள் வேதப்பொருளை மறந்துவிடுவதுண்டு. ஆனால் மரணதேவனோ அவர்களை எப்போதுமே மறப்பதில்லை. உரிய தருணம் வந்ததும் மரணக் கட்ட ளையை நீட்டி அவர்களை மடக்கிக் கூட்டிச் சென்றுவிடுவான்.

இப்படியான தருணத்தில் அவனை முறைத்துப் பார்ப்ப தாலோ கோவிப்பதாலோ எந்த வித பயனும் ஏற்படாது. அதற்குப் பதிலாக உனது வாழ்க்கை முடிந்துவிட்டது என்ற முடிவையே சொல்வான். இந்த முதிர்நிலை வராது சமாதி அடைவதே தவத்திற் பெருமையாகும்.

உலக வாழ்க்கையில் அடிகளார் செய்த பணிகளையிட்டுக் காலன் சீர்தூக்கி பார்த்து அவரது நற்செயல்களாற் கவரப்பட்டு குறையிரந்து அழைத்தான். அதனால் 1947ம் ஆண்டு பூதவுடலை விட்டு மறைந்தார். மாய வாழ்வின் பற்றுகளை முற்றாய் அறுத்த நிலை யில் ஆண்டவனுள் துயின்றார் மன அமைதியோடு மரணம் எனும் பயணஞ் செய்யலானார். ஆதலால் சிறுதேர் உருட்டுக

## அடிகளாரின் மறைவின் பிரதிபலிப்பு

விண்ணில் விஞ்சையர் விழைந்தோடி
விபுலா னந்தரை விரிகரத்தால்
விச்சைத் தேனிரு லென வணைத்தார்
விம்மித் துடித்து விழிசொரிந்தார்
மண்ணிற் பாவலர் மயக்கமுற்றார்
மறலியை வெகுண்டு மனம் நொந்தார்
மாதவன் பிரிவால் மதியிழந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாலையாய்ப் பாடல்கள் செய்தளித்தார்
உண்ணி ருகுத்தார் சுத்தா னந்தர்
உருகித் துடித்தார் கணேசய்யர்
உள்ள முடைந்தார் புலவர்மணி
உருவி லினைத்தார் நவநீதர்
எண்ணி ரிறைத்தார் நடராசர்
இரங்கினுர் சோம சுந்தரனுர்
இரங்கற் கவிதை மழைசொரிந்தார்
இறந்து மிறவார் உருட்டுகவே 7

அடிகளாரின் விண்வரவை அறிந்த கற்றறிவுள்ள வித்தியா தரர்கள் உவகையுடன் ஓடிவந்து கரங்களை விரித்து தேன்இருலை அணைப்பதுபோல அவரை அணைத்தனர் பூமியிலே கவிவாணர்கள் அவரது இழப்பினுல் மயக்கமுற் றனர். அவரது உயிரைக் கவர்ந்து சென்ற காலனைக் கோபித் தார்கள். மனம் நொந்தார்கள் பெருந்தவத்தோனின் பிரிவால் பாமாலைகளைப் பாடி அவருக்குச் சூட்டினுர்கள்

உள்ளம் உருகிச் சுத்தானந்தர் கண்ணீர் வடித்தார். கணேசய் யரோ துடித்துப்போனுர். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மனமு டைந்தார். நவநீத கிருஷ்ண பாரதியார் தேக மெலிவுற்ருர். நடராசர் நினைந்து நினைந்து கண்ணீர் விட்டழுதார். சோமசுந்தரப் புலவர் இரங்கி இரங்கற்பாப் பாடித் தனது துயரத்தை ஆற்றினுர். அடிகளாரோ உலகிற் தனது பூதவுடலை விட்டு மறைந்தாலும் புகழுடம்பு பூத்து இறவாத அமரரானுரெனத் தேருருட்டுக.

அடிகளாரின் வரலாற்றை அறியத் தருவன.

உள்ளமே ஈசனுர் உவந்திடு மலரென
உரைத்தவுன் மலரதை உவந்தேற்ருன்
விள்ளுமுன் வாழ்வை வியம்பிடும் நூற்கள்
வியந்திடில் அருட்திரு செல்வனின் ஆக்கம்
கள்ளமார் சற்குணர் கண்டதோர் படிவங்
கவிமலர் புலோலியூர்க் கணபதிப் பிள்ளை
கவினுறு ஈழ மணிமலர் மற்று
கட்டுரை கவிதை கணக்கில வானதே
வெள்ளமாய்ப் பாக்கள் கட்டுரை தொகுத்து
விதித்தனர் அமுதம் ஆராய்வு தேனே
வேறு பலவாம் செல்வம் கவிதை
வித்தகர் பெருமை விளக்கிடும் ஊற்றே
தெள்ளிய தினசரி பலவவர் வாழ்வின்
திரட்டினை உரைத்தன தீர்ந்திடா இரங்கல்
தேக்கியோர் செப்பினர் திருவருள் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*தேவனே சிறுதேர் செற்றற உருட்டே* 8

உள்ளமலர்தான் இறைவன் உவக்கும் மலரென்று உரைத்த அடிகளாரின் உள்ளத்தை இறைவன் ஏற்றுக்கொண்டான். அவரது வரலாற்றை சற்குணம் என்பவர் தொகுத்த அடிகளார் படிவ மலரும் புலோலியூர் கணபதிப் பிள்ளை எனபவர் தனது ஈழமணி எனும் பத்திரிகையில் வெளியிட்ட விபுலானந்த நினைவுமலரும் மற்று பலபல பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் எடுத்துக் கூறுவனவாம்.

அருட்செல்வ நாயகம் என்பவர் அவரது கவிதைகள், கட்டுரைகளைத் தொகுத்து விபுலானந்த அமுதம், விபுலானந்த வெள்ளம், விபுலானந்த ஆராய்வு, விபுலானந்தர் கவிதைகள் எனும் பல நூற்களைப் பதிப்பித்தார். இவைகளாலும் அடிகளாரின் வரலாற்றை அறியலாகும் என்று கூறி சிறுதேர் உருட்டுக

### *நான்கண்ட விபுலானந்த அடிகளார்*

*மீன்பெண் ணுருவில் நீரரர்கள்*
*மீட்டு மிசையில் விளரிப்பண்*
*மிளிருஞ் சேதி விபுலானந்தர்*
*மிடையக் கேட்டேன் இளம்வயதில்*
*தேன்மது சொரியும் இலக்கியத்தின்*
*திகழும்ஞ் சுவைக்கோ ருரைப்பகுதித்*
*திரட்டா முரைநடைச் சிலம்பதிலே*
*திருவடி பொழிவதன் சுவைகண்டேன்*
*மான்கள் மருளும் மதர்விழிவாழ்*
*மட்டக் களப்பின் திருமகனை*
*மற்றும் நேரிற் கண்டிடாத*
*மருளிற் காலம் மடியநின்றேன்*
*வான்மழை எனவவவர் வருவார் ஓர்கால்*
*வந்தித் திடுவேன் எனவிருந்து*
*வள்ள லமரராய் ஆன பின்னே*
*வாய்த்ததி தரு ணம் வலிந்துருட்டே* 9

நான் வசித்த இடத்திற்கு மேற்குப் பக்கத்தில் மிக அண்மையில் அமைந்திருந்த மட்டக்களப்பு வாவியில் மீன்பெண் உருவத்திலே நீரரமகளிர் விளரிப் பண்ணுதிய பண்டைத் தமிழ் இசைகளைப் பாடுவார்கள் என்று விபுலானந்த (சுவாமி) அடிகளார் சொல்கிறுர் என்ற செய்தியைக் கேட்டதுண்டு

எட்டாவது வகுப்பிற்கு உரைநடை இலக்கியமாக விருந்த உரைநடைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிலம்பு எனும் பாடப்புத்தகதில் இலக்கியச் சுவை எனும் அவரது கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன்.

மான்களின் கண்களும் கண்டு மருளுந் தகைத்தான மதராரி பூத்த மாதர்கள் வாழும் மட்டக்களப்பின் பெருந்தவப் பேற்றை காணும் பாக்கியமற்று காலங் கடத்தினேன்.

வான மழைபோல ஒருநாள் வருவார் அப்போது அவரை வணங்கிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்து இலவு காத்த கிளி யானேன். அவர் அமரரான பின்புதான் அவரது திருவுருவத்தைப் பாக்க முடிந்தது என்று நொந்து தேர் உருட்டுக.

ஈற்றிற் கண்டேன் இரங்கி நின்றேன்.

எல்லார் ஒளியால் இருளகலும்
இறுகிடு பனியும் இரிந்துருகும்
என்றுமே கண்டிடா அடியுருவை
ஏழை கண்டே னிறுதியிலே
ஒல்லா நிலைசெல் லூர்வலத்தே
ஊர்ந்து கல்லடி உப்போடை
உறங்கு பதியிற் துறககமுற்ற
உத்தமன் திருவுரு கண்டனனல்
செல்லாக் காசுக் கோர்மதிப்பை
சேர்க்கும் வினைபோற் தமிழ்க்குறையேன்
செய்தேன் விபுலர் பிள்ளைத்தமிழ்
செய்பிழை செகமே பொறுத்திடுக
நல்லாய் ஈழத்து ப் பூராடனர்
நவில்பெயர் செல்வ ராசகோபால்
நவின்றேன் எண்பத்து நாலினிலே
நாயகா சிறுதே ருருட்டுகவே

சூரியனின் ஒளிபட்டு இருளகலும் பனியுருகும். நான் என்றுமே உயிருடன் அவரைக் காணக் கிடைக்காவிட்டாலும் சூரிய னைப் பார்க்காவிட்டாலும் அதன் ஒளியைப் பார்ப்பதுபோல மறைவின் பின்னர காணக் கிடைத்தது.

அவரது மரண ஊர்வலத்திற் கலந்து கல்லடி உப்போடை எனுமிடத்தில் நித்திய தூக்கமும் சொர்க்க நிலையும் கொள்ளுந் தலத்திலே கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மதிப்பற்ற நாணயத்திற்கு மதிப்பைக் கூட்டுவதுபோல தமிழ் அறிவிற் குறைந்த நான் இந்தப் பிள்ளைத் தமிழைச் செய்து எனது மதிப்பைக கூட்டலாம் என்று நினைத்தேன். அதனால் பல தவறுகளை விட்டிருக்கலாம். அவற்றைக் காண்பார் ஒறுக்குக.

1984ம் ஆண்டில் ஈழத்துப் பூராடனார் எனும் புனை பெயர் கொண்ட செல்வராசகோபால் ஆகிய நான் இதைப் படைத்தேன் என்று சிறுதேர் உருட்டுக

-----------=============-------------

---------1.7.1991 திங்இர 200------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செய்யுள் அகரவரிசை

(இலக்கங்கள் பக்கங்களைக் குறிப்பன)


| | |
|---|---|
| அங்கை தளிரால் அவனிசெய்து | 1 |
| அடிபரந் தகன்று அணைகிளை விரிந்த | 17 |
| அவிழ்ந்துவீ ழாடை அணைக்குங்கை | 42 |
| அவிழும் முகைகள் மணம்பரப்ப | 32 |
| அளிசேர் மலர்கள் சொரிவனங்கள் | 62 |
| ஆதவனின் கதிர்கள் அணுகாத விடத்துதிலும் | 10 |
| ஆதி யாகமத்தி லாரம்பித்து | 5 |
| ஆய்ந்தனை அறிவுசால் அகம வித்துவ | 76 |
| இணைகரம் நிறைய இரப்பவர்க் கிடினும் | 18 |
| இல்லா இடைய ரிடுமின்று | 65 |
| இறுத்தது நின்பெரு மிளமை துறக்கம் | 73 |
| உத்தமன் பதிகொள உலகாசை | 29 |
| உலகநூல் முப்பால் மறைதேர்ந்து | 3 |
| உள்ளக் கவலை உருவாக்கு | 27 |
| உள்ளமே ஈசனுர் உவந்திடு மலரென | 97 |
| உருதவிவ் வுலக ஊழ்கொ ளின்ப | 57 |
| எதுநற் பாதை யெனவறியா | 39 |
| எந்தவோர் வழியில் வாழ்ந்தாலும் | 25 |
| எல்லார் ஒளியால் இருளகலும் | 99 |
| கண்டனை இறைவன் கழலடிப் பெருமை | 79 |
| கதியின் மிக்க காற்றுல் கடல்நீர் | 78 |
| கமலத் தடியிற் சேறிருந்தும் | 28 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கருநிறக் குஞ்சியோ கவினதை இழந்து 74
கழுநீர்க் கங்கை கலைத்தோடுங் 34
கழுநீர் முற்றங் களிகூரப்ப 44
கற்பகக் கரும்பனைக் கவின்மிகு யாழகக் 55
காந்தட் பூவின் கவின்வண்ணஞ் 47
காப்பும் படைப்புங் கலைத்தழிப்பும் 41
காப்பைக் கரத்திற் தான்சூட்டி 31
காற்றவிக்குந் தீபத்தைக் கரங்காக்கு மாயினும் 92
கூப்பிய கரத்தோர் குறையகற்றுங் 46
கைகொள் கற்பனை கனதியெனில் 46
கொன்றை நிறத்தூய் குவிதுவ ராடைக் 54
கொன்றை யுதிர்த்த பொன்மலர்கள் 63
கோமகன் சிவத்தி லானந்தங் 48
சங்கந் தழுவித் தமிழாய்ந்து 2
சலதி நீருளே சார்ந்திடு தரங்கம் 85
சால நாடியே சான்ரூேர் ஆய்ந்திடு 85
சாலவு மினிமை பெற்றிடு மமைதி 77
சாலை வந்தது சார்ந்தன மென்று 72
சேர்கலை திருக்கொள் ளம்பத் தூரில் 52
தனிமை நாடினை தன்னைஅறிந்தனை 75
தாமரை மலர்வா ழிருமகளிர் 33
திருவருள் மொழியாந் தேவாரம் 4
திரைபோட் டுலகத் திமை விலக்கத் 93
தீபத்தைக் கையிற் கொண்டே 91
தொடைபல வணிந்தும் புகழேணித் 35
தொடையுமிழ் வேடர் தொடைதொடுவில் 45
நாட்டமார் விழிகளில் இறைக்காட்சி 66
நாயனுய் முத்தமிழ் நயமோர்ந்து 68
நிரைதெங்கு நிழல்செய நீள்வாவி யெங்கும் 11
நிலவு சிந்தொளி நீருறை வாவியில் 88
நிலவு வீசிட நீரரர் இசைக்கும் 82
நிறத்தால் மனிதர் வேறென்று 23
நிறத்தே கறுத்து நீரையடக்கி 13
நீலவான் மதிநில வொளிமிகக் கால 81
நெய்தற் கரையி லடரடம்பு 67
பலரோ டாடலாம் பாரிலும் விண்ணிலும் 87
பாட்டளி யிசையிற் பகுவாய்ப் படப்பை 51
பாட்டும் பண்ணும் பயிலிசையிம் 61
பாணினியார் பகுத்தாய்ந்த பண்டைமொழி 9
பாரிற் பறிபோம் பாரதச் சுதந்திரப் 54
பாரிற் பற்றற வாழ்ந்தாலும் 64




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாலை பாடியே பாயும் மீனரப் 86
புத்தந் தருமஞ் சங்கமென 7
பூவுடன் நாரிணை பூந்தொடைபோல் 65
பூவோ பொலிவுறு பூமுகையோ 26
பொதிகை முனிதனை கொண்டுசிவன் 8
மலர்க்காத் தாவிடு மான்மயங்க 43
மலர்க்கா வளைத்து மகாவலிபாய் 38
மலரெதும் மலரலாம் மணமெதும் வீசலாம் 20
மலரெதும் மலர்ந்து மணங்கொள விலையெனில் 59
மலருறு மணமும் மலர்ச்சியும் வண்ணமும் 53
மலைவு திரவும் மயக்க மகலவும் 84
மலைவு தீர்த்திடு மயக்கமில் அறிவே 89
மல்லிகை குரவம் மருவிடுகா 24
மல்லிகை விரிய மதுவரியூத 14
மறைத்து விடுமல மாயை நசைமிக 95
மறைந்திடு பகலவன் மாவிருள் போக்க 94
மாப்பிளைக் கேற்ற மலரெதுகாண் 36
மாமலர் சூடிடு மாதரா ரோர்பால் 16
மாலைப் போதும் மந்தமா ரிதமும் 71
மாலை வேளை வந்திறு பகலின் 83
மீன்பெண் ணுருவில் நீரரர்கள் 98
மேகங்க ளார்த்து பெய்மழை சலதியில் 95
வந்தவ ரெல்லாம் வையகத்தில் 36
வல்லோ னேகன் வழுத்துதற்கு 6
வள்ளற் பைங்கொடி வளைகரம் மொதும் 16
வாட்டமும் மலர்தலும் மரைமலர்க் கீந்திடும் 56
வாய்த்த காலம் வறிதாகும் 37
வாய்த்தநற் கொடைகளோ வாயிர மாயிரம் 58
வாய்த்திடாப் பிறவி வாய்த்ததே யென்று 19
விண்ணில் விஞ்சையர் விழைந்தோடி 96
வெண்மை சான்று வியனகந தொட்டிடு 74
வெள்ளைக் கமலத் திரியிதழ் வாவியில் 12
வெள்ளைப் பணிசெய் வெஸ்லிமிசன் 22
வேண்டுவ இறைவனின் வீடாகும் 30
வேண்டுவ தெதுகொல் வேந்தனுக்கு 69
வேண்டுவ வேண்டா தெலாமறியும் 49
வேறெதுஞ் சுகம்பெற வேண்டாம் வேதம் 15
வேறென் றெண்ணுய் வீட்டெண்ணம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விபுலானந்த அடிகளாரின்

## நூற்றுண்டு நினைவுப் பணியில்

## தேற்று தீவு முன்னுள்

## மனோகரா அச்சகத்தின்

## கனடா தொரன்ரோ

## றிப்ளக்ஸ் அச்சகத்தாரின்

## பங்களிப்புகள்.

## இலங்கையில்;-

1. விபுலானந்த அடிகளாரின் நண்பன்
வித்துவான் அ. சரவணமுத்தன் அவர்களின்
ஸ்ரீமாமாங்க விநாயகர் பதிகத்தை
உரையுடன் மீளப்பதிப்பிக்கின்றோம்.

2. எங்கள் தந்தையாரின் இல்ல நூலகமாக இருந்த
பல்லாயிரக் கணக்கான பண்டைத் தமிழ் நூல்களை
அன்பளிப்புச் செய்து தேற்றுத்தீவில் உள்ள
எங்கள் இல்லத்தில்
விபுலானந்தர் நினைவு ஆய்வு நூலகத்தை
அமைத்துள்ளோம்

## கனடாவில்;

1. விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்
எனும் பிரபந்த நூலை உரையுடன் பதிப்பித்து
தொரன்ரோ தமிழ் முருகன் கோவில் சபை
அறங்காவல் குழு சபையினர் 20.7.1991ங் தினத்தன்று
நடாத்தும் விபுலானந்தரின் நூற்றுண்டு நினைவு விழாவின்
நினைவு மலராக வெளியிட்டுள்ளோம்

=============

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE PUBLIC LIBRARY
14-9-1991
BATTICALOA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media